33°/29°c

# உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

பக்கம் 24 | சுடர் 28 | கதிர் 147 | வள்ளுவர் ஆண்டு 2044 | சித்திரை 9, திங்கள் 22.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com



கனவு கலைந்தது

## 80 பேர் கைது

### ஆஸ்திரேலியா செல்ல முயன்ற வேளை

வடமராட்சி,ஏப்.22
படகில் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 13 பெண்கள்,9 குழந்தைகள் உட்பட 80 பேரை பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படையினர் நேற்றுக் கைது செய்தனர்.
வத்திராயன், செம்பியன் பற்று, தாளையடி வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி: பக்.02

# தமிழ் மக்களின் வீடுகளுக்கு தீ

### முள்ளியவளையில் அதிகாலை அழிவு
### 4 குடும்பங்கள் நடுத்தெருவில்



மீண்டும் நடுத்தெருவில்

யாழ்ப்பாணம்,ஏப்.22
முல்லைத்தீவு முள்ளியவளையில், தேக்கங்காட்டுப் பகுதியில் அமைந்திருந்த, தமிழ் மக்களுக்குச் சொந்தமான 4 குடிசைகள் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இனந்தெரியாதோரால் எரித்து சாம்பராக்கப்பட்டுள்ளன.
இந்த அனர்த்தத்தின்போது, குறித்த 4 குடிசைகளும், அவற்றினுள் இருந்த பொருள்களும் முற்றாக எரிந்து நாசமாகின. சம்பவம்இடம்பெற்றசமயத்தில், குடிசைகளில் மக்கள் இல்லாததால் தெய்வாதீனமாக உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

**நடுத்தெருவில் மக்கள்**
பாதிக்கப்பட்ட மக்கள் எந்த உதவிகளுமின்றி தமது சொந்த முயற்சியிலேயே இந்தத் தற்காலிக குடிசைகளை அமைத்திருந்தனர். தற்போது அவையும் தீக்கிரையானதால் நடுத்தெருவுக்கு வந்துள்ளனர்.

**குடியேற்ற முயற்சி**
1500 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மேற்படி தேக்கங்காட்டில் 78 தமிழ் குடும்பங்கள் தற்காலிக குடிசைகளை அமைத்து குடியமர்ந்திருந்தனர். எனினும், குறித்த தேக்கங்காட்டை அழித்து அங்கு தனது ஆதரவாளர்களை குடியேற்ற சிறுபான்மையின அமைச்சர் ஒருவர் தீவிர நடவடிக்கையில் இறங்கியிருந்தார்.
இதற்கு முள்ளியவளையைச் சொந்த இடமாகக் கொண்ட காணியற்ற மக்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.
இந்த நிலையிலேயே தேக்கங்காட்டுப் பகுதியில் தங்கியிருந்த தமிழ் மக்களின் 4 குடிசைகள் இனந்தெரியாதோரால் தீ வைத்து நேற்று அதிகாலை எரித்தழிக்கப்பட்டுள்ளன.

**அசமந்தப் பொலிஸ்**
இந்த அழிவு குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தி நீண்ட நேரத்தின் பின்னரே அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்துள்ளனர். தற்போது குறித்த பகுதியில் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.
சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற முல்லை மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் த.ரவிகரன் நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மாற்று ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். (ங-5)

## கல்லெறித் தாக்குதலில் மனோ கணேசன் காயம்

### கொட்டகலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் நேற்று திடீர் அசம்பாவிதம்



ஓயாது போராட்டம்

கொழும்பு, ஏப்.22
மலையக தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக நேற்று கொட்டகலையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கல்லெறிந்து குழப்ப முயற்சிக்கப்பட்டுள்ளது.
இதில் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் கையில் காயமடைந்தார்.
மலையகத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்



தொடர்ச்சி: பக்.02

## தயாமாஸ்ரரும் போட்டியாம்

யாழ்ப்பாணம்,ஏப். 22
வடமாகாண சபைத்தேர்தலில் தயாமாஸ்ரர் எனப்படும் வே.தயாநிதி போட்டியிட உள்ளார்.
வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கிறார்.
"வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவேன். இரு கட்சிகள் என்னை அணுகின. எதில் போட்டியிடுவது என முடிவு செய்யவில்லை," என்றார் தயாமாஸ்ரர்.
புலிகளின் ஊடக இணைப்பாளராகச் செயற்பட்ட தயாமாஸ்ரர் இறுதிப்போர் முடியும் முன்னரே படையினரிடம் சரணடைந்திருந்தார். (ங-4)



## கோத்தா தலைமையில் இன்று காணி சுவீகரிப்பு தொடங்கும்

யாழ்ப்பாணம், ஏப்.22
வலி.வடக்கில் முகாம் பகுதிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் இந்தப் பணிகள் ஆரம்பிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.
பாதுகாப்புச் செயலாளர் 1,500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை சாவகச்சேரியில் உள்ள படைகளின் தலைமையகத்தில் கையளித்ததன் பின்னர் வலி. வடக்குக்குச் சென்று காணி சுவீகரிப்பை ஆரம்பித்து வைப்பார்.
காணி சுவீகரிப்புக்கு ஏதுவாக காணி உறுதிகளின் பிரதிகளை பிரதேச செயலகத்தில் இருந்து படையினர் ஏற்கனவே பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.



"வலி. வடக்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளின் கிராம அலுவலர்கள் அனைவரையும் இன்று காலை பிரதேச செயலகத்துக்கு கட்டாயம் வரவேண்டும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். சில கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும் செயலர் அறிவித்துள்ளார். பாதுகாப்புச் செயலர் தலைமையில் ஆரம்பிக்கப்பட உள்ள காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்," என்று 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார் அரச உயர் அதிகாரி. (உ-86)

## 13 ஐ நீக்க ஜனாதிபதிக்கு மனு

கொழும்பு, ஏப்.22
13 ஆவது திருத்தத்தை நீக்குமாறு வலியுறுத்தி அரசிடம் மனு கையளிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி மற்றும் கடும்போக்குடைய சிங்கள அமைப்புகள் முடிவு செய்துள்ளன.
இந்த விவகாரம் தொடர்பாக மே தினக் கூட்டத்தின்போது விசேட அறிவிப்பை விடுப்பதற்கு மேற்படி கட்சிகளும், அமைப்புகளும் தீர்மானித்துள்ளன. வடமாகாணத் தேர்தலை நடத்தக்கூடாது என்றும் அவை வலியுறுத்த உள்ளன.

விரிவான செய்தி: பக்.02



4 கொந்தளிப்பு



5 அதிர்ந்தது நிலம்



22

## வடமாகாணம் எட்டாம் இடம்

யாழ்ப்பாணம்,ஏப். 22
2012 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் நாடளாவிய ரீதியில் எட்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
இந்தப் பரீட்சை பெறுபேற்று அடிப்படையில் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் முதலிடத்தை யாழ்.கல்வி வலயம் தனதாக்கிக் கொண்டுள்ளது.



## பாம்புக்கடி: ஒருவர் சாவு

கிளிநொச்சி,ஏப். 22
இரவில் குளிப்பதற்காக சென்றவர் வீட்டு முற்றத்தில் படுத்திருந்த புடையன் பாம்பினால் கடியுண்டு உயிரிழந்தார்.
பளை, இத்தாவில் சதாபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மாரிமுத்து அந்தோனிப்பிள்ளை (வயது-56) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.



அவர் உடனடியாக பளை வைத்தியசாலையிலும் , பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டார்.
மேலதிக சிகிச்சைக்காக மறுநாளே அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார்.
விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ங-4)

## தமிழ் இளைஞனை கொடூரமாக தாக்கியது சிங்கள வெறியர் குழு

### இரத்தினபுரியில் தொடர்கிறது அடக்குமுறை

இரத்தினபுரி ஹேயஸ் தோட்டத்தில் தமிழ் இளைஞரொருவரை சிங்கள இளைஞர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனால், படுகாயமடைந்த குறித்த தமிழ் இளைஞர்தற்போது கொலன்ன வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். நேற்று முன்தினம் இரவு இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹேயஸ் தோட்டத்தின் கீழ்ப் பிரிவில் வசிக்கும் மாடசாமி சுப்பிரமணியம் (வயது - 19) என்ற இளைஞரே சிங்கள இளைஞர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

குறித்த தோட்டத்திலுள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் தமிழர்கள் ஓட்டோவை நிறுத்தக் கூடாது என அச்சுறுத்தியே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தோட்ட அதிகாரியின் ஒத்தாசையுடனேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து தோட்ட மக்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் ரூபன் பெருமாளுக்கு தொலைபேசி மூலமாகத் தெரிவித்ததையடுத்து, அவர் இ.தொ.கா. தலைவரும், பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கத்துக்குத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, கொலன்ன பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு இவ்விடயம் குறித்து அறிவித்ததோடு, ஹேயஸ் தோட்ட மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு கேட்டுக் கொண்டார். தற்போது அங்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பெரும்பான்மை இன இளைஞர்களால் தாக்கப்பட்ட குறித்த இளைஞர் தற்போது கொலன்ன ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அதேவேளை, ஆத்திரம் தீராத அயல் கிராமத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் தம்மை தாக்கிவிடுவார்கள் என்ற அச்சத்துடன் தோட்ட மக்கள் இருக்கின்றனர் என இ.தொ.காவின் தோட்டத் தலைவி, ரூபன் பெருமாளுக்குத் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து ரூபன் பெருமாள் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்ததோடு, கடந்த ஒருவார காலத்திற்குள் இரத்தினபுரி மாவட்டத்தின் வெல்லவல, வளவை, தொலஸ்வல உள்ளிட்ட பல தோட்டங்களிலும் எமது தமிழ் மக்களுக்கு இவ்வாறான அச்சுறுத்தல்கள் இடம்பெற்றிருப்பதனால், எதிர்வரும் காலங்களில் இது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர், அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் நேரடிக் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

# வெளிநாட்டிலுள்ள தூதர்களுக்கு இலங்கை பூட்டியது கடிவாளம்

## அமெரிக்காவுடன் தூதர் விக்கிரமசூரிய நடத்திய கலந்துரையாடலின் எதிரொலி



கொழும்பு, ஏப்.22

அரசுடன் கலந்தாலோசிக்காமல், எவ்வித இராஜதந்திர தீர்மானங்களையும் எடுக்கக்கூடாதென வெளிநாடுகளில் சேவை ப்ற்றும் தனது அனைத்து இராஜதந்திரிகளுக்கும் இலங்கை அரசு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பூரண விளக்கத்துடன் வெளிவிவகார அமைச்சினூடாக இராஜதந்திரிகளுக்கு அரசு அவசர சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது என தெரியவருகின்றது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய கடந்த வாரம், கொழும்பு நிர்வாகத்துடன் கலந்துரையாடாமல் இலங்கையின் பாதுகாப்பு நிலவரங்கள் சம்பந்தமாக அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

இதன்போது, சீனாவுக்கு எதிராகவும் அவர் கருத்து வெளியிட்டார் எனவும், அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடத் தயாராக இருந்தார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த விவகாரமானது இலங்கை அரசுக்கு பெரும் சர்ச்சையாக மாறியதுடன், சீனா உள்ளிட்ட பல தரப்பிடம் இருந்து எதிர்ப்புகள் வந்ததாகவும் அறிய முடிகின்றது.

இதனையடுத்தே, கொழும்புடன் கலந்தாலோசிக்காது எவ்வித இராஜதந்திரச் செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டாம் என தமது இராஜதந்திரிகளுக்கு இலங்கை பணிப்புரை விடுத்துள்ளது.

இதன்படி இனிவரும் காலப் பகுதியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து வெளிநாட்டு இராஜதந்திரிகள் புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, இராஜதந்திர கோட்பாடுகளுக்கு அப்பால் செயற்பட்டமை குறித்து அரசு, ஜாலிய விக்கிலமசூரியவை கடுமையாகக் கண்டித்திருக்கிறது என்றும் அறிய முடிகின்றது.

நாட்டுக்கு எதிராக கடும் சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்ற நிலையில், தூதுவர்கள் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டால் அது மேலும் அழுத்தங்களை உண்டுபண்ணும்.

இந்த விடயம் உட்பட முக்கிய சில விடயங்களைக் கருத்திற்கொண்டே அரசு இராஜதந்திர செயற்பாடுகளுக்கு புதிய சுற்றறிக்கையை வகுத்துள்ளது எனவும் கூறப்படுகின்ற்து.

## கல்லெறித் தாக்குதலில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திருந்தது. ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருந்த போது தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் தம்மீது கல் எறிந்து தாக்கினர் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டதால் அந்தப் பகுதியில் நேற்று பெரும் பதற்றம் நிலவியது. பொலிஸாரின் ஒத்தாசையுடன் இ.தொ.காவினர் ஆர்ப்பாட்டத்தைக் குழப்ப முயன்றபோதும் கொட்டகலை நகரில் நடைபெறவிருந்த கறுப்புப்பட்டி போராட்டம், பத்தனை சந்தியில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

கல்வீச்சுத் தாக்குதலில் மனோ கணேசன் காயமடைந்தார். அவரின் தலையை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் அதை அவர் தடுக்க முற்பட்டபோதே கையில் பலத்த காயம் ஏற்பட்டது என்றும் மலையக தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்குப் பஸ்களில் வந்துகொண்டிருந்த தொழிலாளர்கள் இடையில் மறிக்கப்பட்டு, இ.தொ.காவினரால் அச்சுறுத்தப்பட்டனர் என்று கூட்டமைப்பு கூறுகின்றது. கொட்டகலை ரயில் சந்திக்கு அருகாமையில் ஒரு பிரிவினரும், பத்தன சந்தியில் மற்றுமொரு தரப்பினரும் இவ்வாறு தடுத்துநிறுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதுமாத்திரமன்றி, கொட்டகலை நகரில் ஆர்ப்பாட்டத்தை நடத்தவேண்டாம் எனப் பொலிஸார் இது விடயத்தில் பக்கச்சார்பாக செயற்பட்டனர் என்றும் தொழிற்சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிரான போராட்டம் பத்தன சந்திக்கு மாற்றப்பட்டது. பெருந்திரளான தொழிலாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இடையூறுக்கு மத்தியிலும் போராட்டம் நேற்று வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த போராட்டம், இடையூறுகள் காரணமாக 11.45 இற்கே ஆரம்பமானது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான இராதாகிருஷ்ணன், திகாம்பரம், மனோ கணேசன், லோரன்ஸ், விக்கிரமபாகு கருணாரட்ன, சிறிதுங்க ஜயசூரிய, முரளி ரகுநாதன் உட்படப் பல தொழிற்சங்கப் பிரமுகர்கள் இதன்போது உரைகளை நிகழ்த்தினர்.

**பாஸ்கரா கண்டனம்**

ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசியல் ரீதியான எதிர்ப்பு நடவடிக்கையைக் கூட பொறுக்க முடியாமல் கோழைத்தன வன்முறையில் இறங்கியவர்களுக்கு மக்கள் தக்க பாடம் கற்பிப்பார்கள் மக்களின் தீர்ப்பில் அவர்கள் இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டியிருக்கும்- என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பிருமான பாஸ்கரா தெரிவித்துள்ளார். (உ-சி)

## ராஜபக்ஷ குடும்ப ஆதிக்க அநீதி ஆட்சி: அமெரிக்கக் குற்றச்சாட்டு முற்றிலும் சரி

### அறிக்கையை வரவேற்று ஐ.தே.க. சா[illegible]

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி அதிகாரத்தின்கீழ் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மேலோங்குகின்றன என அமெரிக்கா முன்வைத்துள்ள குற்றச்சாட்டு முற்றிலும் உண்மையானது எனத் தெரிவித்து அறிக்கையை வரவேற்றுள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.



அநீதியான ஆட்சியை நடத்திக்கொண்டு சர்வதேசத்தைப் பகைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளைத்தான் அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகிறது

அநீதியான ஆட்சியை நடத்திக் கொண்டு சர்வதேசத்தின் பலமிக்க நாடுகளைப் பகைத்துக்கொள்வதால் நாடு தான் அபாய நிலைக்குள் தள்ளப்படுகிறது. எனவே, சர்வதேச சமூகத்துடனான முறுகல் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க அதனுடன் சமரசப் பேச்சு நடத்த அரசு தயாரெனில், தாமும் அதற்கான முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்று ஐ.தே.கவின் சிரேஷ்ட உப தலைவரும், கண்டி மாவட் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

'மனித உரிமைகள் தொடர்பான நாடுகளின் அறிக்கை - 2012' என்ற அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை 19ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களச் செயலாளர் ஜோர் கெரியால் வெளியிடப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சி அதிகாரம், நிர்வாகத்தில் மேலோங்கிக் காணப்படுகிறது. நீதித்துறைச் சுயாதீனம் முடக்கப்பட்டுள்ளது. ஊடக அடக்குமுறைகள், பொலிஸாரின் தாக்குதல்கள், சித்திரவதைகள் தொடர்கின்றமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் அந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து கருத்து வெளியிட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியின்கீழ் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மேலோங்கிக் காணப்படுகின்றன என அமெரிக்கா முன்வைத்துள்ள குற்றச்சாட்டு முற்றிலும் சரியானதும் - உண்மையானதுமாகும். தினந்தோறும் நாம் தொடர்ச்சியாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைத்தான் அமெரிக்காவும் முன்வைத்துள்ளது.

சர்வதேசத்தின் பலமிக்க நாடுகள் எம்மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் அளவுக்கு அநீதியான ஆட்சியை நடத்திக்கொண்டு அவற்றைப் பகைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளைத்தான் அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகிறது. இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா உள்ளிட்ட பலமிக்க நாடுகளுடன் அரசு பகைமையை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இந்நிலை, நாட்டுக்குத்தான் பேராபத்தை ஏற்படுத்தும் என நாம் தொடர்ச்சியாக அரசை வலியுறுத்திவருகிறோம். ஆனால், அரசோ எமது பேச்சைக் கருத்திற்கொள்ளாது செயற்படுகிறது.

அரசின் நடவடிக்கைகளை அவதானிக்கையில், ''சர்வதேச நாடுகளுடன் நட்புறவைப் பேணும தேவையும், நோக்கமும் அதற்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

சர்வதேச நாடுகளுடன் நட்புறவு என்பது அரசுக்குத் தேவை இல்லையெனினும், அது நாட்டுக்கு அத்தியாவசியத் தேவையாகும். எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு சர்வதேச நாடுகளுடனான முறுகல்நிலையை முடிவுக்குக்கொண்டுவர அவற்றுடன் சமரசப் பேச்சுகளில் ஈடுபட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசு இவ்வாறானதோர் நடவடிக்கையில் இறங்கினால், அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க நாமும் தயாராகவுள்ளோம் - என்றார் கிரியெல்ல.

## 13 ஐ நீக்க பேரின கட்சிகள் மனு

கொழும்பு, ஏப்.22

அரசமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தத்தை நீக்கும் விடயத்தில் அரசு இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருகின்ற நிலையில், அதை உடன் நீக்குமாறு வலியுறுத்தி '13 ஒழிப்பு' மனு கையளிக்கப்படவுள்ளமை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

13 இற்கு எதிராக சிங்கள பேராசிரியர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரிடம் கருத்து பெறப்பட்டு அவற்றை இந்த மனுவில் உள்ளடக்குவதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் மே தினக் கூட்டம் முடிவடைந்தகையோடு ஆரம்பமாகவுள்ளன.

## 80 பேர் கைது

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நீர்கொழும்பைச் சேர்ந்த படகு ஒன்று சட்டவிரோதமான முறையில் ஆள்களை ஆஸ்திரேலியாவுக்கு கொண்டு செல்லும் நோக்கோடு வெற்றிலைக் கேணிக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 1 மணியளவில் தரித்து நின்றது. சிறு வள்ளங்கள் மூலம் வந்த சேர்ந்த ஆள்கள் குறித்த படகில் ஏறிக் கொண்டிருந்த போது, ரோந்து சென்ற கடற்படையினரிடம் மாட்டிக் கொண்டனர்.

குறித்த இயந்திரப்படகும், அதிலிருந்த 80 பேரும் பருத்தித்துறை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை யாழ். மாவட்ட கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் டி. எஸ்.உடவத்த தலைமையிலான குழுவினர் விசாரணைகள் செய்து வருவதாக யாழ்.மாவட்ட கடற்படை தகவல் தெரிவிக்கின்றன.

விசாரணைகளின் பின்னர் கைதானோர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

(ங-16-8)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அமெரிக்காவின் பிந்திய செய்தி அரசு பொருட்படுத்துமா என்ன.....?

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒருமாத காலம் பூர்த்தியாகும் இவ்வேளையில் –

இலங்கைக்கான அமெரிக்க உதவியில் இருபது சதவீதம் வெட்டு வரும் என்ற தகவல் வெளிவந்த ஒருவாரத்தில் –

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் ஹெரி வெளியிட்ட 2012 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் –

எமது நாட்டின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மிகவும் பாரதூரமானவையாகக் கொள்ளப்பட வேண்டியவை.

• கைது செய்யப்படுவோர் பின்னர் விடுதலை செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களின் கைது குறித்து எவருக்கும் கூறக்கூடாது என்று எச்சரிக்கப்படுகின்றனர்.

• அதனை மீறி யாருக்கும் தகவல் தெரிவித்தால் அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட நேரிடும் அல்லது மரணத்தை எதிர் நோக்க நேரிடும் என்று அச்சுறுத்தப்படுகின்றனர்– என்பன போன்ற பாரதூரமான குற்றச்சாட்டுகள் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

உலக நாடுகளின் தொழிலாளர் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் நடைமுறைகள் தொடர்பான அறிக்கை ஆண்டு தோறும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்படுவது வழமை.

இந்த மோசமான குற்றச்சாட்டுகள் இலங்கை மீது அமெரிக்காவின் பிடி இறுகுவதையே கோடி காட்டுகின்றன.

★ வடக்கு, கிழக்கில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் படையினரும் சில சந்தர்ப்பங்களில் துணை ஆயுதக்குழுக்களுடன் இணைந்து செயற்படுகின்றனர். புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோர் விவகாரத்தில் இவர்களே பொறுப்பாளிகளாக உள்ளனர். கைது செய்யப்படுவோர் சித்திரவதைகள், துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.

★ பாதுகாப்புப் பிரிவினரின் பிரசன்னம் அதிகமாக உள்ள பகுதிகளில் படையினரால் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் இடம் பெறுகின்றன. வடக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் இது குறித்து முறைப்பாடு செய்ய அஞ்சுகின்றனர். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள், படையினர், பொலிஸார், இராணுவக்குழுக்களின் உறுப்பினர்கள் தொடர்புபட்டிருப்பது குறித்து ஆதாரபூர்வமான சான்றுகள் உள்ளன. பெண்கள் தாம் பழிவாங்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக முறையிடத் தயங்குகின்றனர்.

★ ஆள்கள் காணாமற்போனவை தொடர்பாக விசாரணைகள் நடைபெறுவதில்லை. பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படுவதில்லை.

★ அரச படைகள் மற்றும் அரச ஆதரவு துணை ஆயுதக் குழுக்களின் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் இலங்கையில் இடம்பெறும் மற்றொரு பெரும் மனித உரிமைகள் பிரச்சினையாகும்

★ முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போதிலும், படையினரின் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகள் காரணமாக அவர்கள் மிகுந்த சவால்களை எதிர் நோக்குகின்றனர்.

★ விடுதலைசெய்யப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் புனர்வாழ்வு முகாமில் இருந்த சமயம் அரச அதிகாரிகளால் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள், சித்திரவதைகளுக்கு உள்ளாகினர்.

★ விடுதலைப் புலிகளின் அனுதாபிகள், குடியியல் சமூக செயற்பாட்டாளர்கள், அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர்; தாக்கப்படுகின்றனர்.

★ வடக்கில் தொடர்ந்தும் இராணுவச் சோதனை நிலையங்களில் பொதுமக்கள் சோதனைகளை எதிர்நோக்குகின்றனர். உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் நடமாட முடியாது தடுக்கப்பட்டுள்ளனர்.

★ இராணுவ முகாம்களைச் சூழ உள்ள பொதுமக்களின் காணிகள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கையகப்படுத்தப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாணத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் இன்னும் இடம்பெயர்ந்தே வாழ்கின்றனர். இவ்வாறு அமெரிக்க அறிக்கை அழுத்தித் தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை மூலம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கும், கடன் வழங்கும் முகவர்களுக்கும் அமெரிக்கா ஒரு செய்தியைத் தெரிவித்திருக்கிறது எனலாம்.

இலங்கையை வழிக்குக் கொண்டுவருவதற்கு இப்படியான நடவடிக்கை தேவை என்பதுதான் அது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பரிந்துரைகளை இலங்கை செயற்படுத்தத் தவறும் பட்சத்தில், அது இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று சர்வதேச சமூகம் எச்சரித்திருந்தது. அது தற்பொழுது யதார்த்தமாகி வருவதாகக் கொள்ளலாம்.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அரசு அதனைப் பொருட்படுத்துமா என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# இலங்கையின் நல்லாட்சித் தத்துவம் வலுவேறாக்கலில் வலுவிழந்துள்ளது

## வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் நடனேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.22

நாட்டின் நல்லாட்சி ஒன்று நிலவுகின்றது என்றால் அங்கு வலுவேறாக்கம் முழுமையாக செயற்படுகின்றது என்று பொருள்படும். அங்கு அரசியல் கலப்பற்று சட்டம் - நீதி - நிர்வாகம் ஆகிய மூன்று துறைகளும் பக்கபேதமின்றி அபிவிருத்திக்காகச் செயற்படுத்தப்படும்.

ஆனால் இங்கு நிர்வாகத்துறை - நீதித்துறை - சட்டத்துறை என்பன செயலுருப்பெற முடியாத அளவுக்கு உள்ளன. இதனால் நல்லாட்சித் தத்துவம் வலுவேறாக்கக் கோட்பாட்டில் வலுவிழந்து தத்தளிக்கிறது.

வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அராலியில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று வடக்கில் மீள்குடியேற்றம், இந்திய வீட்டுத்திட்டம், உயர்பாதுகாப்பற்ற வலயம், சிறுவர் அபிவிருத்தி, உட்கட்டுமான அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயம் தொடர்பாகப் பல்வேறு அபிவிருத்திகள் இடம்பெறுகின்றன என்றும் இதற்கு அரசு தூணாக உள்ளதாகவும் செய்திகள் வெளியாகின்றன.

எனினும் இந்தச் செயற்பாடுகளில் வடக்கில் போருக்குப் பின்னர் வலுவேறாக்கம் செயற்படவில்லை. சட்டத்துறை அல்லது நீதித்துறை ஊடாக ஒரு நியாயமான நடவடிக்கைகளை எதிர்பார்க்க முடியாது. அதேபோல் நிர்வாகத்துறையும் சுயாதீனமாக இயங்கவில்லை. அங்கு அரசியல் கலந்துள்ளது. வடக்கு மாகாண சபையானது வலுவேறாக்கத்துக்கு உட்பட்டு அதன் மையமான நிர்வாக அலகு ஆளுநரின் கையில் உள்ளது.

முதலமைச்சரின் கீழான நிர்வாக அலகாட்சியை செயற்படுத்துமாறு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ளவர்கள் அழுத்தம் கொடுத்த போதும் இதுவரை இந்தச் செயற்பாடும் செயலிழந்தே உள்ளது. ஏனெனில் சட்டத்துறை இதனை செய்ய வேண்டும் எனில் நீதித்துறை தலையிடும். அவ்வாறு நிர்வாகத்துறை முழுமையாக செயற்பட்டு அதற்கான செயற்பாடுகளை முன்வைத்தால் வேறு ஒரு துறை தலையிட்டு அந்தச் செயற்பாட்டைக் குழப்பிவிடும்.

இதுதான் இன்றைய அரசியல் நிலை. இதனால்தான் வலுவேறாக்கத்தில் அரசியல் தலையீடு புகுந்துள்ளது. இந்த நிலையே இங்கு நல்லாட்சி வலுவிழந்து நீதி, நிர்வாகச் சட்டம் யாவும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பற்று வெவ்வேறாக இயங்கிவரும் நிலை உள்ளது. இவ்வாறான ஒரு நிலையை இலங்கையில் மட்டுமே அவதானிக்கலாம்.

இந்த வலுவேறாக்க கோட்பாடு ஐரோப்பிய நாடுகளில் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது. இதனால்தான் வலு வேறாக்கம் இன்று முழுமைபெற்று நல்ல தத்துவங்கள், நல்ல கோட்பாடுகளுடன் மேற்குலக நாடுகளில் முன்னெடுக்கப்படுகிறது.

இலங்கையில் நல்லாட்சியும் வலுவேறாக்கமும் முழுமையாக செயற்படுகிறது என்றால் வடமாகாண சபைத் தேர்தல் ஒழுங்காக இடம் பெற்றிருக்கும். இன்று வடமாகாண சபைத் தேர்தல் உலக அரங்குக்குச் சென்று விட்டது. இந்த நிலை எங்கு உண்டு. இதனால்தான் இந்த அரசு இன்று எல்லோராலும் விமர்சிக்கப்படுகின்றது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# சமய நிறுவனப் பிணக்குகளை தீர்ப்பதற்கு நடுத் தீர்ப்பு மையம்

## அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.22

இந்து ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்களில் இடம்பெறக் கூடிய பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தால் நடுத்தீர்ப்பு மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயங்களில் இடம்பெறக்கூடிய பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றங்களை நாடுவதைத் தவிர்ப்பதற்கும் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்ப்பதற்கும் ஏதுவாக இந்த நடுத்தீர்ப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நடுத்தீர்ப்பு மையத்தில் இலவசமாக தமது பிணக்குகளை முன்வைத்து தீர்வுகாண முடியும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நடுத் தீர்ப்பாளர்கள் முன்னிலையில் பிணக்குகள் ஆராயப்பட்டு உடனடித் தீர்வுகள் வழங்கப்படும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்.கிளை அலுவலகம், கொழும்பு தலைமை அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது. (ம-14)

# வெளி இணைப்பு இயந்திரம் திருடியோர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.22

முல்லைத்தீவில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான வெளி இணைப்பு இயந்திரத்தைத் திருடிய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சுன்னாகம் மற்றும் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள். கடந்த திங்கட்கிழமை இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர வவுனியாவில் வீடு புகுந்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் தம்புள்ளை மற்றும் செட்டிக்குளம் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-4)

# இரண்டாம் தவணை ஆரம்பத்தில் 2,700 ஆசிரியர்களுக்கு நியமனம்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஏப்.22

தேசிய கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள், ஆசிரியைகள் 2,700 பேருக்கு பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஆரம்பமாகும் போது நியமனங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சிங்களம், ஆங்கிலம், விஞ்ஞானம், உடற்கல்வி ஆகிய நான்கு பாடங்கள் தொடர்பாக புதிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் வெற்றிடங்கள் நிலவும் தேசிய மற்றும் மாகாண சபைகளின் பாடசாலைகளுக்கு அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். அது சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்வி அமைச்சு தெரிவிக்கிறது. (ம-22)

# உதயன் மீதான தாக்குதலுக்கு வலி.மேற்கு பிரதேச சபை கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.22

தமிழ் மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் பல கோணங்களில் எடுத்தியம்பிவரும் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதாக வலி.மேற்கு பிரதேச சபையின் தலைவர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக வட பகுதியில் ஊடக ஜனநாயகம் பல வழிகளிலும் தாக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்த விடயமே. மேற்படி விடயம் தொடர்பில் ஆராய்ந்து குற்றவாளியை சட்டத்தின் முன் நிறுத்துவது அரசின் பொறுப்பாகும்.

வெறும் பேச்சளவிலும் எழுத்தளவிலும் ஜனநாயகம் என்பதை விடுத்து உண்மையானதும் உறுதியானதுமான ஜனநாயகம் ஏற்பட வழிவகுக்க வேண்டும். மேலும் உதயனைத் தாக்கி அழிப்பதன் மூலம் வட பகுதி மக்களை இருண்ட யுகத்தை நோக்கி நகர்த்தவே முயற்சிக்கின்றார்கள் என்றே கருத முடியும். - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-5-115)

# எல்லையில் பதற்றம்

புதுடில்லி, ஏப்.22

இந்திய எல்லைப் பகுதிக்குள் சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் சீன இராணுவம் ஊடுருவியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஊடுருவியுள்ள சீன இராணுவத்தினர் அந்தப் பகுதிகளில் புதிதாக சோதனைச் சாவடிகளை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. அதையடுத்து இந்திய - சீன எல்லைப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் பகுதியில் உள்ள இந்திய - சீன எல்லைப் பகுதியான லடாக்கிலேயே



சீன இராணுவத்தினர் ஊடுருவியுள்ளனர் என்று கூறப்படுகிறது. சுமார் 50 தொடக்கம் 100 வரையான சீன இராணுவத்தினர் இந்தியப் பகுதிக்குள் 10 கிலோ மீற்றர் தூரம் ஊடுருவி சோதனைச் சாவடிகளை அமைத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து இந்திய இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில்-

''சீன இராணுவத்தின் ஊடுருவல் குறித்த தகவலால் பீதியடையத் தேவையில்லை. இதுபோன்ற சம்பவங்கள், எல்லைப் பகுதிகளில் வழக்கமாக நடக்கக் கூடியவைதான். எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டைத் தவறாகக் கணிப்பதால் தான் இது போன்ற சம்பவங்கள் நிகழ் கின்றன. தற் போதைய பிரச்சினைக்கு பேச்சு மூலம் சுமுகமான தீர்வு காணப்படும்,'' என்று தெரிவித்தன. (ற)

# கொந்தளிப்பு



புதுடில்லி, ஏப்.22

5 வயதுச் சிறுமி ஒருவர் அயல் வீட்டுக்காரர் ஒருவரால் கடத்தப்பட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் புதுடில்லியில் கடும் கொந்தளிப்பை ஏற்பட்டுள்ளது. கடந்த 15ஆம் திகதி காணாமற் போயிருந்த சிறுமி இரு நாள்களின் பின்னர் அயலில் உள்ள வீடொன்றில் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு தற்போது அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### உடல்நிலை மோசம்

சிறுமி இரு நாள்கள் தொடர்ச்சியாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், அதனால் சிறுமியின் உடல்நிலை மிக ஆபத்தான நிலையில் காணப்படுகிறது என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

### பொலிஸ் பக்கச்சார்பு

இந்த விடயத்தில் பொலிஸார் பக்கச் சார்பாக நடக்கின்றனர் என்று சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர். தமது முறைப்பாட்டை பெற்றுக்கொள்ள மறுத்த பொலிஸார்,

''சிறுமி உயிருடன் கிடைத்து விட்டாள் அல்லவா, அதற்காக சந்தோஷப்படுங்கள்'' என்று கூறுகின்றனர். எனினும் நாம் மேற்கொண்ட போராட்டங்களின் பின்னர் பொலிஸார் முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்டனர் என்று சிறுமியின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

### சந்தேகநபர் கைது

தலைமறைவாகியிருந்த குறித்த அயல் வீட்டுக்காரரான 25 வயதுடைய மனோஜ் குமார் என்ற இளைஞர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞருக்கு இரு மாதங்களின் முன்னர்தான் திருமணம் நடைபெற்றது என்றும், மனைவி தாய் வீடு சென்றிருந்த சமயமே இந்தக் கொடூரம் இடம்பெற்றுள்ளது என்றும் அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

### மக்கள் கொந்தளிப்பு

சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் புதுடில்லியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர். புதுடில்லி பொலிஸ் தலைமையகம், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இல்லம் மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் சுஷீல் குமார் ஷிண்டேவின் இல்லம் ஆகியவை பொது மக்களால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

போராட்டத்தின் எதிரொலியாக இந்தியா கேட் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொதுமக்கள் நடமாட்டத்துக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து டில்லியின் பல்வேறு பகுதிகளிலும் போராட் டங்கள் வெடித்துள்ளதால், பதற்றமான சூழல் நீடிக்கிறது. அதனால், பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற)


## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
## கிளைக் குழுத் தெரிவுக்கான அறிவித்தல்
## 28.04.2013 - ஞாயிற்றுக்கிழமை

வடக்கு, கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ''வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்'' இதற்கமைய யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய குமாரசிங்கம் அருந்தவநாதன் ஆகிய நான் 2009.04.08 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் 2013.04.28 ஆம் திகதி பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறுவதற்காக இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும், அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

| 28.04.2013 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணி | 28.04.2013 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணி | கிளை பொதுச் சபைக் கூட்டத்தின் தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடத்தப்படும் இடங்கள் |
|---|---|---|---|
| கிளை 01 தெல்லிப்பழை | | பொ.கோகுலன் | கிளை நிலையம் 01 தெல்லிப்பழை |
| கிளை 02 துர்க்காபுரம் | | க.நிமலன் | கிளை நிலையம் 02 துர்க்காபுரம் |
| கிளை 03 கவுணாவத்தை | | அ.தயாளன் | கிளை நிலையம் 03 கவுணாவத்தை |
| கிளை 04 விராங்கொடை | கிளை 06 விழிசிட்டி | இரா.தயாகரன் | தலைமைக்காரியாலயம் தெல்லிப்பழை |
| கிளை 05 பன்னாலை | | செ.செல்வகுமார் | கிளை நிலையம் 05 பன்னாலை |
| கிளை 07 கருகம்பனை | | வை.சரவணன் | கிளை நிலையம் 07 கருகம்பனை |
| கிளை 08 இளவாலை | கிளை 09 கீரிமலை | தி.வித்தககலாநிதி | கிளை நிலையம் 08 இளவாலை |
| கிளை 10 காங்.சிமெ. தொழிற்சாலையடி | கிளை 11 காங்.நடேஸ்வராக் கல்லூரியடி | நா.குமணதாசன் | லயன்ஸ் கழகம் துர்க்காபுரம் |
| கிளை 12 மாவிட்டபுரம் | | அ.விமல்ராஜ் | பிரதேச செயலகம் தெல்லிப்பழை |
| கிளை 14 கொல்லன்கலட்டி | | சி.சிறிதரன் | தலைமைக்காரியாலயம் தெல்லிப்பழை |
| கிளை 16 கட்டுவன் | | சி.எமல்டா | தலைமைக்காரியாலயம் தெல்லிப்பழை |
| கிளை 20 வயாவிளான் மத்தி | கிளை 39 குட்டியப்புலம் | க.சசிகரன் | கிளை நிலையம் 39 குட்டியப்புலம் |
| கிளை 21 பலாலி மேற்கு | கிளை 23 பலாலி கிழக்கு | கு.நிசாந்தன் | நவோதயா சனசமூக நிலையம், ஆவரங்கால் சந்தி |
| கிளை 22 பலாலி மத்தி | கிளை 15 வறுத்தலை விளான் | க.கமலநாதன் | கிளை நிலையம் உரும்பிராய் |
| கிளை 25 மயிலிட்டி கிழக்கு | | ச.தயாதேவி | கிளை நிலையம் மயிலணி சுன்னாகம் |
| கிளை 26 மயிலிட்டி வடக்கு | கிளை 29 வீமன்காமம் | வே.பிரதீஸ்குமரன் | தலைமைக்காரியாலயம் தெல்லிப்பழை |
| கிளை 27 காங்கேசன்துறை | கிளை 28 பளை வீமன்காமம் | இ.வேல்குமார் | லயன்ஸ் கழகம் துர்க்காபுரம் |
| கிளை 30 தையிட்டி | கிளை 31 ஊறணி | ச.பாலகுமார் | பிரதேச செயலகம் தெல்லிப்பழை |
| கிளை 33 மடத்தடி | கிளை 34 ஆஸ்பத்திரியடி தெல்லிப்பழை | இ.புவன்ராஜ் | பிரதேச செயலகம் தெல்லிப்பழை |
| கிளை 35 கலட்டி | | க.தர்சினி | கிளை 35 கட்டடத்துக்கு அருகாமை மாவைகலட்டி |
| கிளை 36 வசந்தபுரம் | | வை. கைலைநாதன் | கிளை நிலையம் 36 வசந்தபுரம் |
| கிளை 37 ஊரங்குணை | கிளை 38 மாங்கொல்லை | க.சுரேஸ்பாபா | தலைமைக்காரியாலயம் தெல்லிப்பழை |
| கிளை 40 குரும்பசிட்டி கிழக்கு | கிளை 41 கிளாணை | பா.வாகீசன் | தலைமைக்காரியாலயம் தெல்லிப்பழை |
| கிளை 42 திருப்பூர் மயிலிட்டி | | ம.கபிலன் | கடற்றொழிலாளர் இளைப்பாற்று மண்டபம், முனை பருத்தித்துறை |
| கிளை 43 சீந்திப்பந்தல் | | க.பாலகிருஸ்ணன் | கிளை நிலையம் 43 |
| கிளை 44 மயிலங்கூடல் | | செ.குகதீப் | கிராம அபிவிருத்திச் சங்கம், இளவாலை |
| கிளை 19 ஓட்டகப்புலம் | கிளை 17 குரும்பசிட்டி | நா.ஜெயவதணன் | பிரதேச செயலகம் தெல்லிப்பழை |
| கிளை 24 மயிலிட்டிக்கரை | | ஐ.மயூரன் | மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூ.ச.தேனியம்மன் கோயிலடி வியாபாரிமூலை. பரு. |
| கிளை 18 வயாவிளான் | | வீ.இரத்தினகாந்தன் | கிளை நிலையம் 39 குட்டியப்புலம் |
| கிளை13அரசடிவீதி, மாவிட்டபுரம் | | ஜெயாமேரிகெரன்சி | கிராம அபிவிருத்திச் சங்கம் மாவிட்டபுரம் |
| கிளை 32 பலாலிச்சந்தி | | செ.பிறேமிளன் | பலாலி வடக்கு கடற்றொழிலாளர் கூ.ச. திக்கம் |

குறிப்பு: இந்த அறிவித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிளையின் பொதுச் சபைக் கூட்டங்களுக்கும் சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் என்னால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தவிசாளர்களால் அவர்களது அங்கத்துவ விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கு தபால் மூலம் அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் அநேகமான அங்கத்தவர்கள் இடம் பெயர்வு காரணமாக வேறு இடங்களில் வசிப்பதால் இந்த அறிவித்தலை தமக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்துக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு சமூகமளித்து கிளைப் பொதுச் சபைக் கூட்டத்தை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திரு.வி.கே. அருந்தவநாதன்,
கூட்டுறவு அ.உ. ஆணையாளர்,
கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

21.04.2013 (சி/9757)



## தேவை

சோடா கம்பனியில் சோடா பெட்டி ஏற்றி இறக்க ஆள்கள் தேவை 23.04.2013 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு நேரில் வரவும்

பிள்ளையார் இன் ஹோட்டல், 51 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.

36268



## பெயர் மாற்றம்

லோட்டஸ் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த

**கனகரத்தினம் தியாகராஜா**

ஆகிய நான் இன்று 22.04.2013 முதல் எனது பெயரை கனகரத்தினம் சண்முகராஜா என பெயர் மாற்றம் பெற்றுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

கனகரத்தினம் சண்முகராஜா,
யாழ்ப்பாணம்.

36279

## நீதிமன்ற காவலில் பர்வேஷ் முஷாரப்

இஸ்லாமாபாத், ஏப்.22
பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பை 14 நாள் நீதிமன்ற காவலில் வைக்குமாறு இஸ்லாமாபாத் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

முஷாரப் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் 60 நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்து அவர்களை சிறையில் அடைத்தார். அது குறித்த வழக்கு தற்போது இஸ்லாமாபாத் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பங்குபற்றுவதற்காக பாகிஸ்தான் திரும்பி இருந்த முஷாரப்பைக் கைது செய்து செய்யுமாறு கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டது.

அதையடுத்துக் கைது செய்யப்பட்ட முஷாரப் இஸ்லாமாபாத்தில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். விசாரணைகளின் பின்னர் அவரை 14 நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. தற்போது முஷாரப் அவரது பண்ணை வீட்டிலேயே பொலிஸ் காவலில் சிறை வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

## தலிபான் தளபதி ஆப்கனில் கைது

காபூல், ஏப்.22
ஆப்கனில் நேட்டோவினால் வழிநடத்தப்படும் சர்வதேச பாதுகாப்புப் படைப் பிரிவு மூத்த தலிபான் தலைவர் ஒருவரைக் கைது செய்துள்ளது.

ஹெல்மான்ட் மாகாணத்தில் உள்ள நாஹ்ர்-ஏ சராஜ் மாவட்டத்தில் வைத்து ஆப்கன் பாதுகாப்புப் படையினரும் நேட்டோவும் நடத்திய கூட்டுத் தாக்குதலில் ஏனைய போராளிகளுடன் சேர்த்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட மூத்த தலைவர் தலிபான் தற்கொலைப் போராளிகளுக்குப் பயிற்சிகளை வழங்கியவர் என்று கூறப்படுகிறது.

இவர் தலிபான் தற்கொலைத் தாக்குதலாளிகளுடன் தொடர்பு கொள்பவராகவும், வெடிகுண்டுகள் தயாரிப்பதில் நிபுணத்துவம் கொண்டவராகவும் விளங்கினார் என்று சர்வதேச பாதுகாப்புப் படைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் போது பெருமளவான ஆயுதங்களும் வெடிபொருள்களும் கைப்பற்றப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பாப்பரசருக்கு மெஸ்ஸியின் பரிசு



வத்திக்கான், ஏப்.22
பாப்பரசர் முதலாவது பிரான்ஸுக்கு நட்சத் திர கால்பந்து வீரர் லயனல் மெஸ்ஸியின் கையொப்பமிட்ட பார்சிலோனா அணியின் சீருடை நினைவுப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

அந்த உடையில் அன்புடன் மெஸ்ஸி என்று அவர் கையொப்பமிட்டிருந்தார். இத்தாலியின் வாட்டிகன் நகரில் பாப்பரசர் மக்களை சந்திக்கும் நிகழ்ச்சியின் போது அவரிடம் லயனல் மெஸ்ஸியின் இந்த நினைவுப் பரிசு அளிக்கப்பட்டது. பாப்பரசர் முதலாவது பிரான்ஸுக்கு வழங்கப்பட்ட மூன்றாவது கால் பந்து ஜெர்சி இதுவாகும்.

இதற்கு முன் ஸ்பெயின் பிரதமர் ஸ்பெயின் வீரர்கள் கையொப்பமிட்ட சீருடையையும் வழங்கியிருந்தார். ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த புதிய பாப்பரசர் தீவிர கால்பந்து இரசிகராவார். அதனாலேயே பாப்பரசருக்கு வாழ்த்து தெரிவிக்கும் தங்கள் தங்கள் அணியின் சீருடையை உதைபந்தாட்ட அணிகள் அனுப்பி வருகின்றன. (ற)

# அணு ஆயுதங்களை எப்போதும் கைவிடோம்

### அதுகுறித்து பேசுவதில் பயனில்லை வடகொரியா திட்டவட்டம்



பியாங்யாங், ஏப்.22
''எந்தச் சூழ்நிலையிலும் அணு ஆயுதத்தைக் கைவிடமாட்டோம். எனினும் ஆயுதக் குறைப்புக் குறித்து வேண்டுமானாலும் பேச்சு நடத்தத் தயார்'' என்று வடகொரியா அறிவித்துள்ளது.

கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றத்தைத் தணிக்க பேச்சுக்களில் ஈடுபடுமாறு சீனா உட்பட பல வேறு நாடுகள் வடகொரியாவை வலியுறுத்தி வருகின்றன. எனினும் அதற்கு முதலில் மறுப்புத் தெரிவித்து வந்த வடகொரியா தற்போது நிபந்தனைகளுடன் கூடிய பேச்சுக்குத் தயார் என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வடகொரியா விடுத்துள்ள செய்திக் குறிப்பில், "ஆயுதங்களைக் குறைப்பது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு வடகொரியா எந்நேரமும் தயாராக உள்ளது. எனினும் அணு ஆயுதங்களைக் கைவிடும் எந்தவிதமான திட்டங்களும் எம் மிடம் இல்லை. எந்தச் சூழ்நிலையிலும் . அணு ஆயுதங்களைக் கைவிடுவதில்லை என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம். அது பற்றிப் பேசுவதற்காக நாம் பேச்சுக்களில் கலந்து கொள்ளப் போவதில்லை. உலகத்தில் உள்ள அனைத்து நாடுகளும் எப்போது அணு ஆயுதங்களைக் கைவிடுகின்றனவோ அப்போதுதான் அது குறித்து வடகொரியாவை மற்றைய நாடுகள் வலியுறுத்த முடியும்,'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## சூட்டுக்கு இலக்காகி ஐ.நா. வீரர் சாவு

டார்பர், ஏப்.22
ஆபிரிக்க நாடான சூடானில் உள்ள கிழக்கு டார்பர் பகுதியில் ஐ.நா. அமைதிப்படை வீரர் கடந்த சனிக்கிழமை துப்பாக்கிதாரிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

சூடான் இராணுவத்துக்கும், சூடான் விடுதலை இயக்கத்தினருக்கும் இடையே நடைபெற்று வரும் மோதல்களால் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஐ.நா. அமைதிப்படை இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர். அவர்களுக்கான பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த சமயம் இனந்தெரியாதவர்கள் ஐ.நா. அமைதிப் படை வீரர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்தவர் நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார். (ற)

# அதிர்ந்தது நிலம்

### சீனாவில் 180 பேர் சாவு; 11,000 பேர் காயம்



பீஜிங், ஏப்.22
சீனாவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் 180 பேர் உயிரிழந்தனர். 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சீனாவின் தென் மேற்கு சிசுவான் மாகாணத்தில் யான் நகரத்திலேயே நிலநடுக்கம் ஏற்பட்டது. சீன புவியியல் ஆய்வு மையத்தில் 7 ரிச்டர் அலகுகளாகவும், அமெரிக்க புவியியல் மையத்தில் 6.6 ரிச்டர் அலகுகளாகவும் பதிவான இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 12 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களில் பேரிடர் நிவாரண குழுவினர், மீட்புப் படையினர் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மீட்புப் பணியில் 2000க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர். ஏராளமானோர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தால் ஏராளமான கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. அத்துடன் மின்சார வயர்களும் அறுத்துள்ளதால் அந்தப் பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அதனால் உயிரிழப்புகள் இன்னும் வெகுவாக அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

சீனாவில் 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## பொஸ்டன் குண்டு வெடிப்பு 2ஆவது சந்தேகநபரும் கைது

### கடும் காயங்களுடன் மருத்துமனையில் அனுமதி

வோஷிங்டன், ஏப்.22
பொஸ்டன் குண்டுவெடிப்பில் கடந்த நான்கு நாள்களாகத் தேடப்பட்டு வந்த இரண்டாவது சந்தேக நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தப்பிச்செல்வதற்காக வோட்டர் டவுன் எனும் இடத்தில் படகு ஒன்றில் ஒளிந்திருந்த போதே 19 வயதான குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பொஸ்டனின் வோட்டர் டவுனில் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றிருந்தார். அப்போது அவரது சகோதரரும் மற்றொருவரும் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர்.

கைது செய்யப்பட்டவர் கழுத்து மற்றும் கால் பகுதியில் காயங்களுக்குள்ளாகி இரத்தம் பெரிதும் வெளியேறிய நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். தற்போது சந்தேகநபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் ஒளிந்திருந்த படகுக்கு வெளியே இரத்தச் சுவடு காணப்பட்டதை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். அதையடுத்தே பொலிஸார் விரைவாகச் செயற்பட்டு சந்தேகநபரைக் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது. (ற)

## இத்தாலியின் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவானார் ஜோர்ஜியோ

ரோம், ஏப்.22
இத்தாலியின் ஜனாதிபதியாக மீண்டும் ஜோர்ஜியோ நெப்போலிட்டானோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜோர்ஜியோ நெப்போலிட்டானோவின் பதவிக்காலம் எதிர் வரும் மே 15 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. இந்த நிலையிலேயே அவர் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டார். இத்தாலியில் அதிகரித்து வரும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஜோர்ஜியோ நெப்போலிட்டானோ மீண்டும் போட்டியிட வேண்டும் என்று இத்தாலியின் முக்கிய கட்சிகள் விடுத்த கோரிக்கையை அடுத்தே அவர் இந்த முடிவை எடுத்திருந்தார்.



87 வயதான ஜோர்ஜியோ நெப்போலிட்டானோவுக்கு ஜனாதிபதியாவதற்கு நாடாளுமன்றத்தில் தேவையான 504 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. ஜோர்ஜியோவைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் 5 தடவைகள் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போதிலும் அது பயனளிக்கவில்லை.

இத்தாலிய வரலாற்றில் இரண்டாவது தடவையாகவும் 7 வருட ஆட்சிக் காலத்துக்கு தெரிவாகிய முதல் ஜனாதிபதியாக ஜோர்ஜியோ நெப்போலிட்டானோ பதிவாகியுள்ளார். (ற)

# இலத்திரனியல் கழிவுகளே புற்றுநோய் ஏற்பட காரணம்

## சனத்தொகையில் 8 வீதமானோருக்குப் பாதிப்பு



கொழும்பு,ஏப்.22
இலங்கை சனத்தொகையில் சுமார் 8 வீதமானவர்கள் பல் வேறு புற்றுநோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
வருடாந்தம் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 15,000 ஆக அதிகரித்திருப்பதானது இலங் கையின் சுகாதார துறையில் மேலும் சுமையை ஏற்படுத்தி யுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
பழுதடைந்து வீசப்படும் கையடக்கத் தொலைபேசி பற்றரி 30,000 லீற்றர் தண் ணீரை மாசடையச் செய்கிறது என சுகாதார அமைச்சு அண் மையில் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
வீசப்படும் சீ.எப்.எல். மின் குமிழ்களும் மனிதனின் உடல் களுக்குப் பாதிப்பை ஏற்ப டுத்தக் கூடிய வகையில் தண் ணீரை மாசடையச் செய்கிறது என்று ஆய்வின் மூலம் கண் டறியப்பட்டுள்ளது.
இலத்திரனியல் கழிவுகள் ஒழுங்கான முறையில் அகற் றப்படாமல் தண்ணீர் மாசடை வதாலேயே புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள் ளது என்று சுகாதார அமைச் சின் செயலர் நிஹால் ஜயதிலக தெரிவித்தார்.
பழுதடைந்து அகற்றப்பட்ட சீ.எப்.எல். மின் குமிழ்கள் மற்றும் இலத்திரனியல் சாத னங்களால் இயற்கை வளங் கள் மாசடைவதே புற்றுநோய் அதிகரிப்புக்கான முக்கிய காரணம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
பாதரசம் நிறைந்த சி.எப்.எல். மின் குமிழ்களிலிருந்து வெளியேறும் நச்சுத் தன்மை யுடைய பதார்த்தம் தண் ணீரை மாசுபடுத்துகிறது.
இவ்வாறு மாசடையும் தண் ணீரை பொதுமக்கள் குடிப்ப தற்குப் பயன்படுத்தும் போது புற்றுநோய்கள் ஏற்படுகின்றன.
இந்த நிலையிலேயே இலத் திரனியல் கழிவுகளை உரிய முறையில் கையாழ்வது தொடர் பில் அனைத்து வைத்திய சாலைகளுக்கும் புதிய சுற்ற றிக்கை அனுப்பி வைக்கப் பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
வைத்தியசாலைகளில் இரத்தி ரனியல் கழிவுகளை எரிக் கும்போது கையாளவேண் டிய வழிமுறைகள் குறித்து அந்த சுற்றறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

## சந்திரிகாவுடன் நெருக்கமான சு.க. முக்கியஸ்தர்கள் யார்?

### விசேட குழு அமைத்து ஆராய்கிறது அரசு



கொழும்பு,ஏப்.22
முன்னாள் ஜனாதிபதி சந்தி ரிகா பண்டாரநாயக்க வுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கி யஸ்தர்களையும் அவர்களின் இரகசிய செயற்பாடுக ளை யும் ஆராய அரசு விசேட குழுவொன்றை அமைத்துள் ளது என்று தெரியவருகிறது.

அரசில் உள்ள அமைச்சர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் முன் னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக் கவுடன் இரகசிய சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

அதனடிப்படையில் எதிர் வரும் ஜனாதிபதி தேர்த லில் முன்னாள் ஜனாதிபதியை களமிறக்க வுள்ள னர் என்று அண்மைக் காலமாக செய்தி கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையிலேயே அவர் கள் பற்றி ஆராய விசேட குழுவொன்று அமைக்கப்பட் டுள்ளது.

இந்தக் குழு குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பில் அறிக்கை சமர்ப் பிக்கவுள்ளது என்று தெரி விக்கப்படுகிறது. (ச)

## அரச பொது ஊழியர் சங்கத்தின் தொழிற்சங்கப் பேச்சு நாளை

அம்பாறை, ஏப்.22
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், வடமாகாண அரச பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருடன் தொழிற்சங்கப் பேச்சு ஒன்றை நடத்தவுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், நாவலர் வீதியிலுள்ள வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலர் அலுவலகத்தில் பேச்சு இடம்பெறவுள்ளது.

குறித்த தொழிற்சங்கப் பேச்சுக்கான அழைப்புக் கடிதம் மேற் படி ஆணைக்குழுவின் செயலாளரிடமிருந்து சங்கத்துக்குக் கிடைத்துள்ளதாகவும் சங்கப் பொதுச் செயலாளர் எம்.எம். ஏ.வகாப் தெரிவித்தார். வட மாகாணத்திலுள்ள அலுவலகப் பணியாளர் சேவை மற்றும் வடமாகாண உள்ளூராட்சி சபை ஊழியர்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் இந்த தொழிற்சங்கப் பேச்சின் போது ஆராயப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் சார்பில் சங்கத் தேசியத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் உயர்மட்டக் குழுவினர் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளவுள்ளனர்.

குறிப்பாக சங்கப் பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ.வகாப், சங்க யாழ் மாவட்ட இணைப்பாளர் எம்.மகேஸ்வரன்,யாழ்.மேலதிக மாவட்ட இணைப்பாளர் வீ.வீ.பொன்னம்பலம், சங்க வட மாகாண உள் ளூராட்சி சபைகளுக்குப் பொறுப்பான இணைப்பாளர் ஏ.அன்ரனி, யாழ்.மாவட்ட கிளைச் செயலாளர் எஸ்.ஜெயசங்கர், யாழ். மாநகர சபை இணைப்பாளர் மு.சண்முகராசா ஆகியோர் பேச்சுக்கான குழுவில் இடம்பெறுகின்றனர்.

இந்தப் பேச்சில் பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்படும் என்று அரச பொது ஊழியர் சங்கம், வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலருக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 34ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல்

**இடம் : சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி**
**காலம் : 05.05.2013ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : பிற்பகல் 3.30 மணி**

1. எமது மன்றின் விடயமாக பிரேரணைகள் இருப்பின் 28.04.2013ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் மன்ற செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும்.
2. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெள்ளிவிழா காணும் உறுப்பினர்களை கௌரவித்தல்
   - 01. அமரர் ச.நமசிவாயம் புலமைப்பரிசு நிதியம்
   - 02. அமரர் கு. தவராஜசிங்கம் விதவை நிதியம்
   - 03. சன்றைஸ் ஊனமுற்றோர் நிதியம்
   - 04. அமரர் ச. இரத்தினம் வறிய மாணவர் நிதியம்
   - 05. பொ.தாமோதரம் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்
   - 06. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற நிதியம்
   - 07. பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கௌரவித்த விழா ஏற்பாட்டுக்குழு மாணவர் நிதியம்
   - 08. அமரர் செ. சபாரத்தினம் மாணவர் நிதியம்
   - 09. அமரர்களான சுப்பிரமணியம் நேசரத்தினம் மாணவர் நிதியம்
   - 10. முத்துமாரி அம்மன் மாரிமகிந்தன் திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா மாணவர் நிதியம்
   - 11. ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர் ச. சந்திரகுமார் மாணவர் நிதியம்
   - 12. கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசன் மாணவர் நிதியம்
   - 13. அமரர் ச.சண்முகானந்தம் மாணவர் நிதியம்
   - 14. கணபதிப்பிள்ளை முரளி மாணவர் நிதியம்
   - 15. பொ.தாமோதரம் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்.
   - 16. அமரர் K. கண்ட் குடும்பம் (Hunt Family) மாணவர் நிதியம்
   - 17. அமரர் ஆ.பரமநாதன் மாணவர் நிதியம்
   - 18. மாதாந்தம் எமது உறுப்பினர்களின் பங்களிப்புடன் வழங்கப்படும் தந்தையை இழந்த மாணவர்களுக்கான கொடுப்பனவு.

   போன்ற நிதியங்கள் வழங்கப்படவுள்ளது.

**இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகசபை தெரிவு நடைபெறவுள்ளது.**

மேற்படி கூட்டத்துக்கு அனைத்து மன்ற உறுப்பினர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கினறோம்.

**செயலாளர்,**
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

(C9265) (10.6)


**மணமகன் தேவை**

1979 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த மிருகசீரிடம் (8 இல் செவ்வாய்) பாவம் 44 பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு:077 783 7991

(26287)(6.11)

**கன்டர் விற்பனைக்கு**



407 TATA
10 1/2 அடி நீளம், Full body உடன் கன்டர் விற்பனைக்கு உண்டு.

(36270) (6.11) தொடர்பு: 077 644 6381


## மரண அறிவித்தல்

### துரைராஜா விக்டோரியா

(சின்னலா)



கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப் பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட துரைராஜா விக்டோரியா (சின்னலா) (15.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின் னப்பு - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைராஜா (C.T.B. துரை - சாரதி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் செல்வராஜா, சற்குணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரி யும், சிறீகாந் (பிரான்ஸ்), சுபேஸ்காந் (பிரான்ஸ்), ஆரணி (பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்புத் தாயும், சாந்தினி (பிரான்ஸ்), மாலினி (பிரான்ஸ்), செந்தூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், அபிநயா, சிந்துஜா, அனுசன், சந்தோஷ் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(36051) (15.6)

# மருதங்கேணி வடக்கு கிராமத்துக்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

## மக்கள் மீளக் குடியமர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகிறது

யாழ்ப்பாணம், ஏப்.22
மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் மருதங்கேணி வடக்கு கிராம மக்கள் மீளக் குடியமர்ந்து இரண்டரை வருடங்களுக்குக் மேலாகின்ற போதும் இதுவரையில் மின்சாரம் வழங்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமது கிராமம் தவிர்ந்த ஏனைய கிர்ாமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதும் தமது கிராமத்துக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் என்பது தெரியாத நிலையில் இருப்பதாக அந்த மக்கள் குறிப்பிடுகின்றனர்.

சுனாமியாலும், போராலும் பாதிக்கப்பட்ட இந்தக் கிராமம் கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மீளக்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டது. இது வரையில் இந்தக் கிராமத்தில்159 குடும்பங்கள் வரையில் மீளக்குடியமர்ந்துள்ளன.

ஜே/428 கிராம அலுவலர் பிரிவில் மருதங்கேணி தெற்கு, தாளையடி, மருதங்கேணி வடக்கு ஆகிய கிராமங்கள் உள்ளடங்குகின்றன. இதில் மருதங்கேணி தெற்கு மற்றும் தாளையடி கிராமங்களுக்கு கடந்த ஆண்டே வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மருதங்கேணி வடக்கு கிராமத்துக்கு மாத்திரம் இன்னமும் மின்சாரம் வழங்குவதற்கு உரிய எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மருதங்கேணி வடக்குக் கிராமத்தையும் தாண்டி வத்திராயன், உடுத்துறை, அழியவளை கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் மின்சாரம் வழங்குவதற்கு மின் கம்பவங்கள் நடப்பட்டுள்ளன.
ஆனால் மருதங்கேணி வடக்கு கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக வடக்கின் வசந்தம் வேலைத் திட்ட முகாமையாளர் எம். குணசீலனை தொடர்பு கொண்டு கேட்டபோது, அந்தக் கிராமத்துக்கு நாம் மின்சாரம் வழங்காமல் விடவில்லை. அடுத்த மாத ஆரம்பத்தில் அந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார். (ம-5)

"அந்தக் கிராமத்துக்கு நாம் மின்சாரம் வழங்காமல் விடவில்லை. அடுத்த மாத ஆரம்பத்தில் அந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்கிறார் வடக்கின் வசந்தம் வேலைத் திட்ட முகாமையாளர் எம்.குணசீலன்"

## நல்லூர் சுகாதார பிரிவுக்கு செம்மணி வீதியில் காணி

யாழ்ப்பாணம், ஏப். 22
நல்லூர் பிரதேச சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனைக் கட்டடத்துக்கென செம்மணி வீதியில் காணி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

நல்லூர், கரவெட்டி, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் பகுதிகளில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைக்க சுகாதார அமைச்சு நிதி வழங்கியிருப்பதாகக் குறிப்பிட்ட யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நல்லூரில் சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை அமைக்க காணி இல்லாதிருப்பதாகத் தெரிவித்தார்.

இதன் போது பிரதேச செயலர் செம்மணிப் பகுதியில் பொது நிறுவனம் ஒன்று உரிமை கோரியுள்ள காணியில் நான்கு ஏக்கர் தருவதாகக் கூறியுள்ளார். அந்தக் காணியில் சுகாதார பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். (ம-7)

## உலக புத்தக தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 22
சுன்னாகம் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் உலக புத்தக தின விசேட நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கல்பனா சந்திரசேகரம் கலந்து கொள்வார்.

நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக விவாத அரங்கு மற்றும் கலைநிகழ்வு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சுன்னாகம் பிரதேச சபைக்கு உட்பட்ட உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தும் கண்காட்சிஇடம்பெறவுள்ளது.(ம-14)

## சுன்னாகம் பொது நூலகம் முப்பரிமாண நூலகமாக தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 22
வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் சுன்னாகம் பொது நூலகம் சிறந்த முப்பரிமாண நூலகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் பொருள்களின் பயன்பாடு, சூழலில் ஏற்படக்கூடிய விளைவுகள், நூலகப் பயன்பாடு தொடர்பான ஆக்கங்கள் இந்தப் போட்டியில் காட்சிப்படுத்தப்பட்ட நமக்கு அமைவாக தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அத்துடன் சிறந்த முப்பரிமாண நூலகமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று சுன்னாகம் பொது நூலகத்தின் நூலகர் திருமதி இ.கருணாநிதி தெரிவித்தார். (ம-14-86)



யாழ்.மாநகரசபையின் அனுசரணையுடன் கல்வி முன்னேற்றக் கழகம் திருநகர் பகுதியில் இலவச கணினி வகுப்புகளை ஆரம்பித்துள்ளது. யாழ்.மாநகரசபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்த் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் திருநகர் பாலர் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட இலவச கணினி வகுப்பு மாணவர்களுக்கான அடையாள அட்டைகளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா வழங்கினார். கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற, இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், மரியன்னை பேராலய பங்குத்தந்தை எக்ஸ். சகாயநாயகம், வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் இரா.செல்வவடிவேல் உட்பட பலர் கலந்துகொண்டனர். இந்தப் பயிற்சி நெறிகளுக்கான உபகரணங்களை வர்த்தகர்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் நலன்விரும்பிகள் நன்கொடையாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.22
கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியாவைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகர்ப் பகுதியில் கடந்த வார நடுப் பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து ஆயிரத்து 322 மில்லி கிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. வவுனியா செட்டிக்குளம் மற்றும் மதவாச்சியைச் சேர்ந்த இரண்டு பேரே கைது செய்யப்பட்டுள்ளனர். இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-4)

## சனத்தொகை கூடிய கிராம அலுவலர் பிரிவுகள் இரு பிரிவுகளாகவுள்ளன

யாழ்ப்பாணம், ஏப்.22
நல்லூர் பிரிவில் சனத் தொகை கூடிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகள் ஒவ்வொன்றும் இரு கிராம அலுவலர் பிரிவாகப் பிரிக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

ஜே/109 சங்கிலியன் தோப்புக் கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்து 245 குடும்பங்களும் திருநெல்வேலி மத்தி, வடக்கு கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்து 89 குடும்பங்களும் உள்ளன.

சனத்தொகை கூடிய இந்த இரு கிராம அலுவலர் பிரிவுகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படவுள்ளன. தற்போது திருநெல்வேலி வடகிழக்கு ஜே/113 கிராம அலுவலர் பிரிவு கல்வியங்காடு மத்தி கிராம அலுவலர் பிரிவாக பெயர் மாற்றப்படவுள்ளது என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## தனியாரது கோரிக்கைக்கு அமைய

# துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள யாழ். மாநகர சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 22
யாழ். மாநகர சபையின் பொது சுகாதாரப் பொறியியல் பிரிவுடன் தொடர்பு கொண்டால் துப்புரவுப் பணிக்கான உதவிகள் செய்து தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது ஆதனங்கள், ஹோட்டல்கள், வீடுகள், வங்கிகள், பொது இடங்கள், தனியார் நிறுவனங்கள் தமது இடங்களைத் துப்புரவு செய்து தரக் கோரும் பட்சத்தில் மாநகர சபை ஊழியர்கள் மூலம் அவற்றைத்துப்புரவு செய்து கொடுக்க யாழ். மாநகர சபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வரியிறுப்பாளர்களுக்கு அவர்களது இடங்களையும் வெற்றுக் காணிகளையும் துப்புரவாக வைத்திருக்கக் கூடியதாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் மே மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் மூலம் நியாயமான கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் வரியிறுப்பாளர்கள், தமது பகுதிகளைத் துப்புரவாக வைத்திருக்க முடியும் எனவும் இதனூடாக டெங்கு போன்றவற்றைத் தடுப்பதற்கு வாய்ப்பாகவும் இருக்கும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## சிரமதானப் பணிகள்...



உருத்திரபுரம் வைத்தியசாலை வளாகத்தில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றுள்ளன. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளையின் கரைச்சிப் பிரிவின் ஏற்பாட்டில் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு இந்தச் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதில் செஞ்சிலுவைச் சங்கத்தின் கரைச்சிப் பிரிவின் தலைவர் தி.சிவரூபன், செயலாளர் த.சேதுபதி, பொருளாளர் க.பசுபதிப்பிள்ளை மற்றும் உறுப்பினர்கள் உட்பட செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் கிராம மக்கள் எனப் பலர் ஈடுபட்டனர். (க-405)

# திறந்து வைக்கப்படாத அலுவலகக் கட்டடம்

புதுக்குடியிருப்பு, ஏப்.22

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்குரிய புதிய அலுவலகக் கட்டடப் பணிகள் நிறைவடைந்து ஒரு மாதம் கடந்த போதிலும் இதுவரை திறந்து வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை வீதியில், பொன்னம்பலம் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கட்டடம் ஒன்றில் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம் தற்போது இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் சுமார் 40 மில்லியன் ரூபா செலவில் புதிய அலுவலகம் அமைக்கப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையிலும் அதனைத் திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இறுதிக் கட்டப் போர் இடர்களில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தினமும் ஆயிரக்கணக்கில் இந்த அலுவலகத்துக்கு வந்து செல்கின்றனர். ஆனால் இவர்கள் தங்குவதற்குரிய வசதிகள் எதுவும் தற்போது அலுவலகத்தில் இல்லை. இதனால் கொளுத்தும் வெயிலில் நின்றே தமது பணிகளை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலைகளுக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாது புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் ஆளணியினரின் தொகையும் அதிகரித்துள்ளதால் போதிய இடவசதி இன்றி நெருக்கடியான நிலையில் இவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

எனவே இந்தப் பிரதேச மக்களின் நலன்கருதியும், செயலகப் பணியாளர்களின் நலன் கருதியும், புதிய அலுவலகத்தை மக்களின் பயன்பாட்டுக்கெனத் திறந்து விடுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-400)

## திருச்சொரூபம் உடைக்கப்பட்ட சம்பவம்;

### கண்டிக்கிறார் செல்வம் எம்.பி.

மன்னார், ஏப்.22

புனித பிலிப் நேரியரின் திருச்சொரூபம் உடைக்கப்பட்ட சம்பவத்தை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கண்டித்துள்ளார்.



மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் கண்ணாட்டிக் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த புனித பிலிப் நேரியர் திருச்சொரூபம் உடைக்கப்பட்ட சம்பவத்தை தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும், குறித்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

தற்போது நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் வணக்கஸ்தலங்கள் மீது தாக்குதல் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இந்த வகையில் மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் கண்ணாட்டிக் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த புனித பிலிப் நேரியர் திருச்சொரூபம் கடந்த புதன்கிழமை இரவு 11 மணியளவில் இனம் தெரியாத நபர்களினால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

பல வருடங்கள் பழைமை வாய்ந்த அந்த சொரூபம் போரின் போது கூட எந்தவித சேதங்களையும் எதிர்கொள்ளவில்லை. குறித்த பகுதியில் கத்தோலிக்க, இந்து மக்கள் வாழ்ந்து வருகின்ற வகையில் அந்த மக்களுக்கிடையில் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதற்காகவே இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

எனவே பொலிஸார் இதில் நீதியான விசாரணைகளை மேற்கொள்வதுடன் குறித்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-12)

# மக்களின் அடிப்படை உரிமைகளை பேரவை முன்னெடுத்துச் செல்லும்

## தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவைத் தலைவர் கூறுகிறார்

மன்னார், ஏப்.22

தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவை மக்களின் அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் அமைக்கப்பட்டது. இவ்வாறு தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் மன்னார் மாவட்ட இணைப்பாளரான சுனேஸ் சோசை தெரிவித்தார்.

தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையானது மக்களின் அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் சுயாதீனமான ஒரு அமைப்பு என்றும் இதன் அடிப்படையில்தான் எமது மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் இந்த அமைப்பானது மன்னார் மாவட்டத்தில் பல்வேறுபட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் அங்குரார்ப்பணக் குழுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசக் கட்டடத்தில் மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் இணைப்பாளர். சுனேஸ் சோசை தலைமையில் இடம்பெற்றது. இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இந்த அமைப்பானது 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரைக்கும் இயங்கி வருகின்றது. குறிப்பாக 2010ஆம் ஆண்டு தொடக்கம் கிட்டத்தட்ட 450 அங்கத்தவர்களுடன் எமது அமைப்பானது இயங்கி வருகின்றது.

இந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் நலன் கருதி இந்த அமைப்பு ஆரோக்கியமான துயரமற்ற வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் இயங்கி வருகின்றது. மேலும் அவர்களது அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பங்களிப்பு செய்வதே எமது முக்கிய நோக்கமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைமை செயலக அதிகாரி அன்ரனி ஜேசுதாசன் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்தந்தை செபமாலை அடிகளார் மன்னார் மாவட்டத்திலே இவர்களின் பொதுப் பணி எவ்வாறு காணப்படுகின்றது எனவும் கூறினர்.

மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆலமும் இங்கு உரையாற்றினார். பின்னர் புதிய நிர்வாக சபை தெரிவு நடைபெற்றது. இதில் மொத்தம் 13 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்புப் பேரவை எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. (க-12)

## பாதிக்கப்பட்ட 41 பேருக்கு நிவாரணக் கொடுப்பனவு

வவுனியா, ஏப்.22

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் தற்செயல் இடர்களால் பாதிக்கப்பட்ட 41 பேருக்கு 4 லட்சத்து 4 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் இந்த நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

36 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும், 4 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா வீதமும், ஒருவருக்கு 8 ஆயிரம் ரூபா வீதமும் இந்த நிவாரணக் கொடுப்பனவை வழங்குவதற்கு மாகாணத் திணைக்களத்தால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் உள்ளது.

இவர்கள் செட்டிகுளம் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் சீ. நந்தினியுடன் தொடர்பு கொண்டு இதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (க-400)

## நானாட்டானில் சேதமான இரண்டு தேவாலயங்கள்

வலி. வடக்கு. ஏப். 22

நானாட்டான் முருங்கன் பிட்டியில் அமைந்துள்ள இரண்டு கிறிஸ்தவ தேவாலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

மன்னார் நானாட்டான் முருங்கன்பிட்டியில் உள்ள இரண்டு கிறிஸ்தவ தேவாலயங்களே விஷமிகளினால் இரவு வேளையில் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. நானாட்டான் முருங்கன் பிட்டி ஆலயம் மற்றும் மெதடிஸ்த தேவாலயம் எனபனவற்றினுள் நுழைந்தவர்கள் அங்கிருந்த பீடத்தில் பூசைக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்களை தட்டி வீழ்த்தியதுடன் அலுமாரிகளையும் சேதமாக்கியுள்ளனர்.

இது சம்பந்தமாக நானாட்டான் பொலிஸ் நிலையத்தில் ஆலயத்தின் குருமார்களினால் முறையிடப்பட்டுள்ளதுடன் கிராம அலுவலர்களிடமும் முறையிடப்பட்டுள்ளது.

இனம் தெரியாதவர்களின் இத்தகைய அடாவடித்தனமான செயற்பாடுகள் காரணமாக கிறிஸ்தவ மக்களிடையே பலத்த அச்சநிலை காணப்படுவதுடன் பதற்றமான நிலைமையும் எற்பட்டுள்ளது. (க-86)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவு, மருந்துப் பொருள்கள்

புதுக்குடியிருப்பு, ஏப்.22

புதுக்குடியிருப்பு மன்னாங்கண்டல் கிராம சேவகர் பிரிவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிறுவனமொன்றினால் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த மழை காரணமாக முத்துஐயன் கட்டுக் குளத்தின் நீர் மட்டம் உயர்ந்து பெருக்கெடுத்ததால் மன்னாங்கண்டல் பகுதி மக்கள் பல தடவைகள் இடம் பெயர்ந்ததுடன் அவர்களின் உடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

இதனை அடுத்து அந்தப் பகுதி கிராம சேவையாளர் செ. தயாசீலன் வவுனியாவில் இயங்கும் அலென்ஸ் அபிவிருத்தி நிலையத்திடம் வேண்டுகோள் விடுத்ததை அடுத்து இந்தப் பொருள்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன.

சுமார் 245 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் 4ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டன. (க-400)

## உப - தபாலகம் அமைக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.22

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் உப -தபாலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த பகுதியில் தபாலகம் ஒன்று இன்மையால் அதனூடான சேவைகள் மற்றும் மாதாந்த உதவிப் பணம் போன்றவற்றை உரிய முறையில் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-6)



சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நுழைவாயில் வளைவு, பாடசாலையின் லண்டன் பழைய மாணவர்களினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. [ம-29]




பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியில் இருந்து காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலைக்குப் போட்டோ பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர் செல்வி. விஸ்வநாதனிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்ரின் அலன்ரின் கையளிக்கிறார். [ம-250]



அண்மையில் யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி பரமசாமி, நூலகப் பொறுப்பாசிரியை திருமதி சு.சிவகுந்தன், பா.அ.சங்க உறுப்பினர் திருமதி சி.இந்திராணி மற்றும் மாணவிகள் காணப்படுகின்றனர்.



யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் மாணவர்கள் சமுர்த்தி தெக்குலு சிறுவர் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட தேசிய மட்ட கலாசார இலக்கியப் போட்டியில் சங்கீதத்தில் 3 ஆம் இடத்தை தேசிய மட்டத்தில் பெற்ற எஸ். ஜீவதாஸ், பாடசாலை அதிபர் மற்றும் சங்கீத ஆசிரியையுடன் காணப்படுகிறார். [ம-29]



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. இதில் விருந்தினர் வரவேற்கப்படுகின்றனர். [ம]



மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. இதன் போது விருந்தினர் மங்கல விளக்கேற்றுகிறார். [ம]





நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது விருந்தினர்கள் அமர்ந்துள்ளனர். மாணவர்களின்






அச்சுவேலி தோப்பு அருள் நந்தி வித்தியாலய மெய்வன்மை போட்டி அண்மையில் இடம்பெற்றது. [ம]

## வெற்றியின் ஆரம்பம்

2012 ஆம் ஆண்டில் O/L or A/L எடுத்த இளம் யுவதிகளும் மற்றும் வேலை தேடுவோருக்கான ஓர் அரிய வாய்ப்பு-எமது DMI நிறுவனத்தில் புதிய பதவி வெற்றிடங்கள் உள்ளன.

Administration, Distirbutor, Field officer, Maketing manager ஆகியோர் தேவைப்படுகின்றனர். 12000 - 35000 மேல் திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். யாழ் மற்றும் வன்னி பிரதேசத்தினருக்கு முக்கியத்துவம் உண்டு.

தங்குமிட வசதி உண்டு.

(36190) தொடர்பு: 0217201521, 0778920777


## இதய அஞ்சலி



செல்வி சபாபதி தங்கப்போன்
(இளைப்பாறிய ஆசிரியை, திருநெல்வேலி

15.04.2013 இல் காலமாகிய
புராணபடன வித்தகர்

**முத்தர் ஆறுமுகம் ஐயா**

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காப் பிரார்த்திக்கின்றோம்.

தலங்காவற்பிள்ளையார் கோவில்
புராண படனக்குழு சார்பாக.

(36269)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
31 - 01 - 1920



உதிர்வு
22 - 03 - 2013

அமரர்

**லூயிஸ் திரேசம்மா குரூஸ்**

*நல்லதொரு போராட்டத்தை போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். (தீர்த்து 1:7)*

எங்கள் அன்புத் தெய்வமே, பாசத்தின்
அம்மாவே, நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்,
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்றோம்
உங்கள் ஆன்மா இறைவன் சந்நிதானத்தில் அமைதிபெற
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:மகன்
லூயிஸ்சில்வெஸ்ரர்லாஸ்
(அன்ரன்)
கிராம அலுவலர்
வங்காலை, மன்னார்.

(சி-9352)

என்றும் பாசமுடன்
நினைவு கூரும்
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தம்பசிட்டி, மெதடிஸ்த கல்லூரி நிலையத்தின் சாதனையாளர்களுக்கும், ஆசிரிய வள ஆளணியினருக்கும் பாராட்டும்...வாழ்த்தும்

கடந்த பல்லாண்டுகள் போல்
இவ்வாண்டும்...க.பொ.த (சா/த) 2012 இல்.....

- கா.கீர்த்தனா - 9A
- த.நிதர்சினி - 8A, C
- செ.கஜேந்தினி - 8A, S
- அ.மோகனா - 6A, 2B, C
- அ.அரிகரன் - 6A, 2B, C
- சி.தூயவன் - 6A, B, C, S
- சி.தர்மினி - 4A, B, 2C, S
- பா.கீர்த்திகா - 3A, 2B, 3C, S
- மு.நிந்துஜா - 2A, 4B, 2C, S
- செ.சுரேகா - 2A, 3B, 4C
- கி.சர்மியா - 2A, 4C, 3S
- த.தனையரசி - A, 2B, 2C, 3S
- பி.பிரியன் - 2A, B, 4C, 2S
- சோ.சஞ்சயன் - 2A, 2B, 3C, 2S
- ப.காபிலா - A, 7C

*உயரிய கல்விப் பெறுபேறு....*
*எதிர்கால உயரிய சிந்தனை...*
*எங்களுடன் உண்மையான நம்பிக்கையான...*
*மாற்றங்களிலும் மாறாத ஒழுக்க விழுமியங்கள்...*
*உயரிய கல்விச் சேவையின் சாதனைச் சான்றுகளாக திகழும் மாணவச் செல்வங்களை வாழ்த்துவதுடன் வளமை போன்று இவ்வாண்டும் (2012 இல்) சாதனையாளர்களை உருவாக்குவதில் உறுதுணையான பாடவள ஆளணியினரையும் நிலையத்தின் மேலாளரையும் வாழ்த்தும்,*

பெற்றோர்-பழைய
மாணவர்கள் நலன்விரும்பிகள்.

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றுதல்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள, நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன.

அதனடிப்படையில்இன்று திங்கட்கிழமை காலை 9 -11 மணி வரை வைமன் வீதி, எடிசன் அக்கடமி அருகிலும், முற்பகல் 11.30-1.30 மணி வரை பருத்தித்துறை வீதி, ஜே/105 கிராம சேவையாளர் அலுவலகத்திலும்,

24 ஆம் திகதி காலை 9-11 மணி வரை நாவலர் வீதி, ஆனைப்பந்தி சந்தியிலும், முற்பகல் 11.30 -1.30 மணி வரை அம்மன் வீதி, பலாலி வீதி சந்தி அருகிலும்,

26 ஆம் திகதி காலை 9-11 மணி வரை ஜனசக்தி ச.ச.நிலையத்திலும், முற்பகல் 11.30-1.30 மணி வரை சிவன் புது வீதி சு.க.மையத்திலும்,

29 ஆம் திகதி காலை 9-11 மணி வரை கொண்டலடி சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30-1.30 மணி வரை சங்கிலியன் வீதி, நல்லூர் சிகிச்சை நிலையத்திலும்,

30 ஆம் திகதி காலை 9-11 மணி வரை ஆடிய பாதம் வீதி, முன்பள்ளி அருகிலும், முற்பகல் 11.30-1.30 மணி வரை கல்வியங்காடு சந்தையடியிலும் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன.

வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு கேட்கப் பட்டுள்ளனர். (ந)

## ரூ.9 மில்லியன் செலவில் பளையில் வி.மைதானம்

வலி.தென்மேற்கு.ஏப். 22

பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் இளைஞர் மத்தியில் விளையாட்டை ஊக்குவிக்கும் வகையிலும் பளை பிர தேசத்தில் 9 மில்லியன் ரூபா செலவில் பொது விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பளைப் பிரதேசத்தில் இது வரை காலமும் விளை யாட்டு மைதானம் இல்லாததால் இளைஞர் பெரும் சிரமங் களுக் குள்ளாவதுடன் தனி யார் காணிகளைத்துப் புரவு செய்து வசதியீனங்கள் அற்ற நிலையில் விளையாடி வரு கின்றனர்.

விளையாட்டு மைதானம் இல்லாத குறைபாடு குறித்தும் இதனால் இளைஞர் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தி மனப்பான்மை குறித்தும் பெற்றோர்கள், நலன் விரும்பி கள் சபைத் தலைவருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து மைதானம் அமைக் கப்பட வேண்டிய அவசியம் குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுத் தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது.

இதற்கமைய பளை நகரப் பகுதியில் பொலிஸ் நிலை யத்துக்கு அருகில் புற நெகும திட்டத்தின் கீழ் 9 மில்லியன் ரூபா செலவில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட வுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் சபைத் தலைவர் மேற்கொண்டுள்ளார்.

(வ-115)


### வீடு காணி விற்பனைக்கு

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இவ்விரண்டு பரப்புக்களில் உள்ள 2 வீடுகள் தனித்தனியாகவோ, ஒன்றாகவோ விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை

தொடர்பு: 0756708173

### வீடு விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் வீதியில் 12 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வளவும்; நெற்காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகட்கு: கு.மாதவன் 0750719707

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில்
1½ (ஒன்றரை) பரப்புக் காணி
வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777120968


## பாராட்டி வாழ்த்துகின்றோம்


2012 ஆம் ஆண்டு நடைபெற்ற
க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த
விஜயமாறன் சத்தியப்பிரியன் 8A, C
ரஞ்சன் தக்ஷலா 7A,B,C
தேவகுமார் ஐஸ்வர்யா A,B,3C, 4S

ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதில்
பெரும் மகிழ்வடைகின்றோம்.

மகாத்மா விளையாட்டுக் கழகம்,
நெல்லியடி.

(361557)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கயிலைலிங்கம் முருகதாஸ்**

(முன்னாள் மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர்)

திதி:-துவாதசி

தோற்றம்
30.08.1968

மறைவு
03.05.2012

இவ்வுலகை விட்டு உமது உடல்
மறைந்து ஆண்டு ஒன்று ஆனாலும்
எம் மனங்களில் உமது உயிர்
என்றென்றும் உயிர் வாழும்

4/4, இராமகிருஷ்ணா பாடசாலை வீதி,
கோண்டாவில்.

(36153)(2.6)

ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்
மனைவி, பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு
30
08
1950

இறப்பு
23
03
2013

*அமரர் கிருஷ்ணசாமி செல்வராணி*

உயிர் மூன்றெழுத்து உயிர் தந்த அன்னை
மூன்றெழுத்து அன்னை காட்டிய அன்பு
மூன்றெழுத்து அன்பினால் உருவாகும்
கனிவு மூன்றெழுத்து... கனிவினால் உருவான
பணிவு மூன்றெழுத்து பணிவால் உருவான தகுதி
மூன்றெழுத்து தகுதியால் உருவான
திறமை மூன்றெழுத்து திறமையினால்
நான் அடைந்த பதவி மூன்றெழுத்து
பதவியினால் நான் செய்யும் கடமை
மூன்றெழுத்து கடமையினால் எனை
அடையும் வெற்றி மூன்றெழுத்து
வெற்றியினால் கிட்டும் புகழ்
மூன்றெழுத்து இந்த மூன்றெழுத்தில்
எல்லாம் நான் என்ற ஈரெழுத்து
இருக்க காரணமான என் அன்னை
நீயோ என்றும் என் (உயிர்) முதலெழுத்து -
அம்மா அம்மா அம்மா...

*கடந்த 23.03.2013 அன்று இத்தாலியில் அமரத்துவம் அடைந்த எமது குடும்ப விளக்கின் பிரிவால் நாம் துயருற்றிருந்த போது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் வழங்கியவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (22.04.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(36255) (23)

குடும்பத்தினர்
(இத்தாலி)

# ஞானம்

ஒரு பெரிய சந்தை இருந்தது. அது பல பஸ்கள் வந்து செல்லுகின்ற ஒரு முக்கிய இடத்தில் அமைந்திருந்தது. அங்கு ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்.

அவன் பல நாள்களாக ஒரே இடத்தில் நின்று பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்.

ஆனாலும் அவன் ஒருநாளும் வாயைத் திறந்து பிச்சை போடுங்கள் என்று யாரையும் கேட்பதில்லை.

தினமும் காலையில் வருவான். அந்த இடத்தில் நிற்பான். தனது வலது கையை மட்டும் முன்னால் நீட்டி கையை ஏந்திக் கொண்டிருப்பான். வாயைத் திறந்து எதுவும் பேசுவது இல்லை. அந்த வழியாக, வருபவர்கள், போகிறவர்கள் அவன் கையில் பணம் போட்டுவிட்டுப் போவார்கள்.

அந்த ஒரே இடத்தில் நின்றே ஐம்பது வருடமாகப் பிச்சை யெடுத்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஒருநாள் அவன் அந்த இடத்திலேயே இறந்துவிட்டான். ஊர் மக்கள் எல்லோரும் பார்த்தார்கள். ஐயோ பாவம்! இப்படி அநாதையாக இறந்து விட்டானே என்று பரிதாபப்பட்டார்கள்.

அந்த ஊர்மக்களுக்கு அவன்மீது மிகவும் அனுதாபம்.

பிச்சையெடுத்துக் கொண்டிருந்தால் கூட அவன் ஒரு வித்தியாசமான ஆள். யாரையும் தொந்தரவு செய்வதில்லை என்பதனால் ஊர்மக்கள் எல்லோரும் ஒன்று கூடி, அந்தப் பிச்சைக்காரனுக்கு அதே இடத்தில் ஒரு சிலையைக் கட்ட வேண்டும் என்று தீர்மானம் எடுத்தார்கள்.

உடனே நிதி வசூலிக்க ஆரம்பித்தார்கள். பலபேர் முன்வந்து தாராளமாக நிதி உதவி செய்தார்கள். அவர்களுக்கு நிறைய பணம் சேர்ந்தது.

அந்த பிச்சைக்காரன் நின்று கொண்டிருந்த இடத்தில் ஓர் அத்திவாரம் தோண்ட ஆரம்பித்தார்கள்.

இரண்டு அடி ஆழம் தோண்டியவுடனேயே திடீரென்று ஒரு வித்தியாசமான சத்தம் கேட்டது.

அவசர அவசரமாகத் தோண்டிப் பார்த்தார்கள். ஒரு பெட்டகம் தெரிந்தது. அதை எடுத்து பார்த்தனர். அதனுள்ளே தங்க நாணயம், வெள்ளி நாணயம் எனப் பெருந்தொகைப் பணம் இருந்தது. அதைப் பார்த்ததும் கூட்டத்தில் இருந்தவர்களுக்கு மிகவும் ஆச்சரியம்.

ஒருவர் கூறினார்.

''பார்த்தீர்களா..? இந்தப் பிச்சைக்காரன் தன்னுடைய காலுக்கு அடியில் புதையல் இருக்கின்றது என்று தெரியாமல் போகிற, வருபவர்களிடம் ''ஒரு ரூபாவுக்கு'' கையேந்திக் கொண்டு நின்றே இறந்து விட்டான்''

அந்த வழியாக ஒரு துறவி வந்தார். அங்கு நின்ற மக்கள் கூட்டத்தைப் பார்த்துக் கூறினார். '' ஒவ்வொரு மனிதனும் இவ்வாறுதான் செய்துகொண்டிருக்கிறான்! தன்னுடைய மனதில் குவிந்து இருக்கின்ற திறமையையும், மகிழ்ச்சியையும், இன்பத்தையும், இறைவனையும் அவன் புரிந்து கொள்வதில்லை. அவையெல்லாம் வெளியில் எங்கேயோ இருக்கின்றன என்று நினைத்துக் கொண்டு அவற்றைத் தேடிக் கொண்டு தமது காலத்தைக் கழித்து விடுகிறார்கள்.'' என்று கூறிவிட்டு அந்தத் துறவி சென்றுவிட்டார்.

ஒரு வீதியோரத்தில் இருக்கின்ற கடைக்குச் சென்று ''அரைக் கிலோ சந்தோஷத்தை வாங்கிக் கொண்டு வா! '' என்று சொல்ல முடியாது.

ஜீனாப்பாட் என்று ஒரு விஞ்ஞானி இருந்தார். அவரிடம் ஒரு சீடன் வந்தான். ''உங்களிடம் ஞானம் என்ற முத்து இருப்பதாகச் சொல்கிறார்கள்! அதில் எனக்கு சிறிய அளவு தேவை.. அதனால் அதை என்னிடம் விற்றுவிடுங்கள்.. இல்லையென்றால்.. எனக்கு இலவசமாகக் கொடுங்கள் '' என்று கேட்டான். அதற்கு அந்த விஞ்ஞானி,

''உனக்கு அதை நான் விற்கிறதாக இல்லை, ஏனென்றால் அதன் விலையை உன்னால் கொடுக்க முடியாது. இலவசமாகக் கொடுப்பதை நீ மதிக்கமாட்டாய். அதனால் என்னைப் போல நீயும் கடவுள் என்ற சமுத்திரத்தில் மூழ்கி எழும்பு நீயும் ஒரு முத்து எடுத்துக் கொண்டு வரலாம்'' என்றார்.

இதுவெல்லாம் வெளியில் வாங்குகின்றவை இல்லை. முயற்சி செய்ய வேண்டும்.

ஓர் ஆசாமி இருந்தான். அவன் ஒரு நாள் தனக்கு அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பத்தாயிரம் ரூபா பரிசு விழுந்ததாகக் கனவு கண்டான்.

விடிந்து எழுந்ததும் அழுது கொண்டு அமர்ந்திருந்தான்.

''ஏன்.. அழுகிறாய்'' என்று ஒருவர் கேட்டார்.

அதற்கு அவன்.. ''நான் கண்டது கனவாகப் போய்விட்டது என்பதற்காக நான் அழவில்லை கனவில் விழுந்தது ஒரு லட்சமாக இல்லாமல் போய்விட்டதே அதை நினைக்கும் போது தான் ஆத்திரமாக உள்ளது..'' என்று சொல்லி மறுபடியும் அழுதான்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# இந்துப் பாரம்பரியத்தை பேணி வரும் கொழும்புத்துறை இந்து மகா வித்தி.



(தொடர்ச்சி....)

**எஸ்.யேசுதாஸ்**

பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகத் திகழும் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் 140 ஆண்டுகளைக் கடந்து அறிவார்ந்த சந்ததியை உருவாக்கும் பணியில் பயணிக்கிறது. பல்வேறு மன்றங்களை அமைத்தும் அறிவுசார், மற்றும் விளையாட்டுப் போட்டிகளிலும் கோட்ட, மாவட்ட மாகாண தேசிய மட்டங்களில் பல சாதனைகளை ஈட்டி யுள்ளது. தமிழ்மன்றம், கணித, விஞ்ஞான மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், விவசாய மன்றம், மனைப்பொருளியல் மன்றம், இந்து மன்றம், குருளைச் சாரணியம், ஆங்கில மன்றம், கிறிஸ்தவ மன்றம் என்பன குறிப்பிடத்தக்கவை.

இந்துப் பாடசாலையாக இயங்குகின்ற போதிலும் இங்கு கல்வி பயிலும் கிறிஸ்தவ மாணவர்களுக்கான சமயக் கல்வியும் புகட்டப்படுவது சிறப்பம்சமாகும்.

நகரப் பாடசாலைகள் கட்டட அபிவிருத்தியில் வளர்ச்சி கண்டு வரும் சூழலில் இப் பாடசாலை பழைய கட்டட அமைப்புக்களுடன் இடநெருக்கடியால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்ததையடுத்து செல்வீச்சுக்களால் சேதமடைந்திருந்த கிழக்குப் புற மண்டபத்தை அழித்து புதிய இருமாடிக் கட்டடம் அமைக்கும் பணியை ''நிகொட் நிறுவனம்'' முன்னெடுத்து 2009 இல் திறந்து வைக்கப்பட்டது.

அண்மைக்காலங்களில் கல்வித்தரத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்து வருவதோடு கல்விப் பொதுத் தராதர சா/த, உ/தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டி வருகிறது. அத்துடன் இணைப்பாட விதானங்களிலும் பல சாதனைகளைப் படைத்துள்ளது.

> செயற்பாட்டுக் கல்வியை மேற்கொள்ள இடவசதி இன்மையைக் கருத்திற் கொண்டு கல்வித் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட செயற்பாட்டுக் கட்டடத்தை 2011ஆம் ஆண்டு பிரதிக் கல்வி அமைச்சர் திறந்து வைத்தார்.

கல்விச் சேவைகள் அமைச்சினால் நடாத்தப்பட்ட இலவசப் பாட நூல் விநியோகம் தொடர்பான தமிழ்மொழி மூல அகில இலங்கைச் செய்யுள் போட்டியில் 1983 ஆம் ஆண்டில் க.பாஸ்கரன் முதற்பரிசைப்பெற்று ஜனாதிபதி ஜே..ஆர் ஜெயவர்த்தனாவினால் விருது வழங்கப்பட்டது. சர்வதேச மட்டத்திலான ஆங்கில மொழியில் செயற்பாட்டுத் தொகுப்பு போட்டியில் பத்து திறமையான பெறுபேறுகளில் இப் பாடசாலையைச் சேர்ந்த இரு ஆங்கில ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளனர். அவர்கள் திருமதி காமதி செல்வரத்தினம், திருமதி பி.துஷ்யந்தினி ஆகியோராவர்.

வருடாந்தம் நடைபெற்று வரும் இல்ல மெய் வன்மைப் போட்டிகளுக்கு மெருகூட்டும் வகையில் கடந்த சில வருடங்களாக பழைய மாணவர்களால் வீதியோட்டப் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது. உதைபந்து, வலைப்பந்து மற்றும் விளையாட்டுப் போட்டிகளிலும் கோட்ட, மாவட்ட மட்ட வெற்றிகளைப் பெற்றுள்ளது.

புத்தாக்கத் துறையில் தொழில் நுட்பச் செயற்பாட்டில் வியத்தகு உற்பத்திகளைக் காட்சிப்படுத்தி தேசிய வெற்றிகளை யோகானந்தன், திவ்வியராஜ், தேவானந், கணேசலிங்கம், பிரபுராஜ் ஆகிய மாணவர்கள் பெற்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் விருது வழங்கப்பெற்றனர். ஜனாதிபதியின் விசேட புலமைப்பரிசில் ஊக்குவிப்பை 1996 ஆம் ஆண்டு எஸ்.எக்ஸ் பிரதீப் ஜனாதிபதி சந்திரிகாவிடம் பெற்றுக் கொண்ட சாதனை குறிப்பிடத்தக்கது.

செயற்பாட்டுக் கல்வியை மேற்கொள்ள இடவசதி இன்மையைக் கருத்திற்கொண்டு கல்வித் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட செயற்பாட்டுக் கட்டடத்தை 2011 ஆம் ஆண்டு பிரதிக் கல்வி அமைச்சர் திறந்து வைத்தார்.

இக் கால கட்டங்களில் அதிபர்களாக கடமையாற்றிய திருமதி வ.சிவபாலன் சா.தியாகலிங்கம் ஆகியோருடன் நீண்ட காலமாகக் உப அதிபராக பணிபுரிந்த திருமதி தயாநிதி ஞானப்பிரகாசமும் பாடசாலையை பல்வேறு வழிகளில் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றனர். தற்போது அதிபராக விளங்கும் ம.ஞானசம்பந்தன் புதிய நோக்கும் செயல் வீரமும் நிறைந்த ஆசிரிய மற்றும் பெற்றோர், மாணவர் கட்டமைப்புக்களை உருவாக்கி வழி நடத்தி வருகிறார் உதவி அதிபராக பொ.சர்வானந்தன் பணிபுரிகின்றார்.

1970 களில் 800 ற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்ற இப் பாடசாலையில் தற்போது 460 மாணவர்கள் பயிலும் நிலை காணப்படுகிறது. போர் மற்றும் இடப்பெயர்வு, நகரப்பாடசாலைகளை நோக்கிய கல்வி நகர்வு என்பவற்றாலும் மாணவர்களின் இடைவிலகலாலும் மாணவர் தொகையில் வீழ்ச்சி காணப்படுவதாகக் கூறப்படுகிறது. தற்போது மீள் குடியமர்வுப் பகுதிகளான சந்தபுரம், மணியந்தோட்டம், உதயபுரம் மாணவர்களும் இங்கே இணைந்துள்ளனர். 36 ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர்.

இருப்பினும் சில வளப் பற்றாக்குறைகள் நிலவுவதைக் காண முடிகிறது. நவீன காலத்திற்கேற்ற கணினிக்கல்வியைப் புகட்ட கணினி வசதிகள், தளபாட வசதிகள், குடி தண்ணீர் வசதிகள் என்பன சீர் செய்யப்பட வேண்டியுள்ளன. பாடசாலைக்குச் சொந்தமான பாண்ட் வாத்தியக்கருவிகள் இல்லாத குறையைப் போக்க யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இவ்வாண்டு புதிய கருவிகளை வழங்கியுள்ளார்.

வெள்ளிக்கிழமை தோறும் தவறாது சிவபுராணம் ஓதி வரும் இப் பாடசாலை விநாயகரின் அருள்பாலிப்பினாலும் யோகர் சுவாமிகளின் அரவணைப்பினாலும் இப் பிரதேச மாணவர்களின் கல்வி, ஆன்மிக, விளையாட்டு, கலை, கலாசார பண்பாட்டு நெறிகளை பாதுகாக்கும் அறிவாலயமாக திகழ்ந்து வருகிறது.

(முற்றும்)

# யாழ். மண்ணில் திண்மக் கழிவகற்றலின் அவசியமும் தேவைப்பாடும்




சசிகலா பத்மநாதன்
பிரதேச செயலகம், நல்லூர்.

உலகில் இன்று அளவுக்கதிகமாக பெருகிவரும் சனத்தொகை மற்றும் சுற்றுச் சூழல் மாசடைதல் என்பவற்றின் மூலம் பூமியின் சுமை மேலும் பாதிக்கப்பட்டு, புவி வெப்பமடைவதுடன் காலநிலை மாற்றங்களும் ஏற்படுகின்றன. இது மனித குலத்தை மட்டுமல்லாது புவியின் அனைத்துப் பகுதிகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனைத் தடுப்பதற்கும் எதிர் காலத்தில் பாதுகாப்பான ஒரு சிறந்த தளத்தை உருவாக்கும் நோக்கிலும் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 22 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் புவிதினம் கொண்டாடப்படுகின்றது. அந்த வகையில் இந்த வருடத்தின் கருப்பொருள் "காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளல்" ஆகும்.

இலங்கையில் நிலைத்து நிற்கும் நகர நிகழ்ச்சித்திட்டம் 1999 களில் ஆரம்பிக்கப்பட்டது, இது முதலில் தென் பகுதியிலும் பின்னர் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பிலும் நடைமுறைப் படுத்தப்பட்டது. எனினும் அக்காலத்தில் இருந்த நாட்டுச் சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் ஒரு ஒழுங்கான திட்டமிடல் முறைமையினை மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் இன்றைய நிலையினை நோக்கின் யாழ்ப்பாணம் மிக விரைவாக மீள்கட்டுமானம் மற்றும் துரித வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பகுதியாக காணப்படுவதுடன், இதன் அதிகரித்து வரும் சனத்தொகை, நகராக்கம், அதிகரித்த வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் வருமானம் என்பன திட்டமிடப்படாத வகையில் அதிகரித்து வருகின்றன. இதனால் மக்களின் நுகர்வும் பாவனையும் அதிகரித்து திண்மக்கழிவின் அளவும் அதிகரித்துள்ளது. உண்மையில் ஒரு பிரதேசத்தின் சிறந்த நகர திட்டமிடல் என்பது அப்பிரதேசத்தின் திண்மக்கழிவு வெளியேற்றம் மற்றும் அதற்கான சரியான கழிவகற்றல் முகாமைத்துவ முறைமை என்பவற்றில் தங்கியுள்ளது. ஆனால் யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரை திடீரென ஏற்பட்ட வளர்ச்சியினால் அதிகரித்து வரும் திண்மக்கழிவு யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பல ஆபத்துக்களை தோற்றுவித்துள்ளது; இன்னமும் பல பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கவுள்ளது. அவையாவன:-

★ வீதிகள் மற்றும் வெள்ள வாய்க்கால்களில் கொட்டப்படும் குப்பைகளால் அப்பகுதியில் எலி மற்றும் நுளம்புப் பெருக்கம் அதிகரித்து, பல வகையான நோய்ப்பெருக்கம் ஏற்படும்.

★ இக்கழிவுகள் நீருடன் கலந்து மேற்பரப்பு நீர்வளத்தையும் தரைக்கீழ் நீர்வளத்தையும் அசுத்தமாக்கும்.

★ இக்குப்பைகள் எரிக்கப்படுவதனால் வளியின் வெப்பநிலை அதிகரித்து வளி மாசடையும்.

★ வீதியோரங்களில் மற்றும் குளங்களில் வாய்க்கால்களில் கொட்டப்படும் குப்பைகளால் பிரதேசத்தின் அழகு பாதிக்கப்படும்.

★ துர்நாற்றம் வீசுதல், வீதிப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருத்தல், வீதி விபத்துக்களுக்கு காரணமாக இருத்தல் போன்ற பாதிப்புக்களும் ஏற்படும்.

நில மண்டலம், நீர் மண்டலம், வளிமண்டலம் மற்றும் உயிர் மண்டலம் அனைத்திலும் ஒருமித்த தாக்கத்தையும் பிரதேசத்தின் அழகையும் அழிக்கும் திண்மக்கழிவு அதிகரிப்பானது, யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் இன்று மிகப் பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது.

மேற்படி பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதற்காக திண்மக் கழிவுருவாக்கத்தை முற்றாக நிறுத்திவிட முடியுமெனில் பிரச்சினையில்லை. ஆனால் மக்களின் வாழ்க்கை முறைகளில் திண்மக்கழிவு உருவாக்கம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. எனவே அக்கழிவுகளை குறைப்பதற்கும் மேற்படி பிரச்சினைகளிலிருந்து எமது பிரதேசத்தைப் பாதுகாப்பதற்குமான நடைமுறைகளை கையாள்வதுமே இந்தப் பிரச்சினையை குறைப்பதற்கான வழிமுறைகளாகும். எனினும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற வகையில் எமது பிரதேசத்தில் இக்கழிவகற்றுதலில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. இவ்வாறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பெருமளவில் வெற்றியளிக்காமைக்குப் பின்வருவனவற்றை காரணங்களாகக் கூறலாம்.

★ குப்பைகள் அகற்றலுக்கான திறனான வழிமுறைகள் இன்மை

★ கழிவுகளை கொட்டுதலுக்கான மற்றும் அதனை மீள உருவாக்கலுக்கான முறைகள் இல்லாமை

★ மக்களின் மனப்பாங்கு மாறாமை

★ பொருளாதார மற்றும் அரசியல் காரணங்கள்

'எனவே எமது பிரதேசத்தைப் பாதுகாக்க நாம் தான் முன்னின்று செயற்பட வேண்டும். அதாவது, மக்களின் மனப்பாங்கில் ஏற்படும் மாற்றம்தான் இக்கழிவகற்றல் பிரச்சினைக்கு முற்றாக தீர்வு ஒன்றினை ஏற்படுத்த வல்லது. எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் கழிவகற்றல் என்றால் என்ன? அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன? போன்ற விடயங்கள் பற்றி மக்கள் நன்றாகவே அறிந்திருக்கின்றார்கள். எனினும், அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பெருமளவில் அக்கறை காட்டுவதில்லை. காரணம், இன்றைய அவசர உலகில் இது போன்ற செயல்களில் ஈடுபடுவதற்கு நேரமின்மை, நான் ஏன் செய்ய வேண்டும்?' என்ற எண்ணம், என்னால் மட்டும் இந்த பிரச்சினையை தீர்க்க முடியுமா? என்ற கேள்விபோன்றன காரணங்களாக இருக்கலாம்.

உண்மையில் ஒரு பிரதேசத்தில் அல்லது நாட்டில் வாழும் மக்களின் மனப்பாங்கில் ஏற்படும் மாற்றமே அந்நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிவன. ஒரு காலத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்பட்ட சிங்கப்பூர் இன்று மிக முன்னேறிய நாடாக வளர்ச்சியடைந்ததற்கு அன்றைய சிங்கப்பூரின் அதிபர் மேற்கொண்ட கடுமையான சட்டதிட்டங்களும் கட்டுப்பாடுகளுமே காரணங்களாகும். அது போல இரண்டாம் உலகயுத்தத்தின் போதும் அண்மைய சுனாமியின் போதும் மிக பாதிக்கப்பட்ட ஜப்பான் மீளவும் தன் நிலைக்கு திரும்பியதற்கும் அந்நாட்டு மக்களின் மனப்பாங்கில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் நாட்டின் நலனில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை ஆகிய இரண்டுமே காரணங்களாக இருந்தன. எனவே மக்களது மனப்பாங்கில் ஏற்படும் மாற்றமே ஒரு நாட்டின் சிறந்த எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். இதனால் தான் இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் சேவை செய்யும் அனைத்து அரச, தனியார் அமைப்புக்களும் வெளிநாட்டு அமைப்புகளும் மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் வலுவூட்டல் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு பெருமளவில் செலவு செய்கின்றன.

## தடுக்கும் வழிவகைகள்

கழிவுகளால் ஏற்படும் பிரச்சினையைத் தடுப்பதற்கு பின்வரும் நான்கு(4) வழிமுறைகள் கையாளப்பட வேண்டும் எனச் சொல்லப்படுகின்றது. இதனை "4R" என அழைப்பர். உண்மையில் "4R" என்பது சூழல் சார்ந்த அனைத்துப் பாதிப்புக்களையும் குறைப்பதற்கான செயன்முறையாகும் அச்செயன்முறையில் திண்மக்கழிவுருவாக்கத்தினால் ஏற்படும் தாக்கமும் சொல்லப்பட்டுள்ளது. இதனால் கழிவாக்கப்படும் பொருள்களின் அளவு குறைந்து திண்மக்கழிவின் அளவு குறைக்கப்படுகின்றது.

## குறைத்தல்

திண்மக்கழிவுருவாக்கத்தைக் குறைத்தல் அதாவது கடதாசிகளின் இரண்டு பக்கமும் பாவித்தல், மீள பாவிக்கக்கூடிய பாத்திரங்களில் பொருள்களைக் கொண்டு செல்லல், கடைகளில் பொருள்கள் வாங்கும் போதும் மீள உபயோகிக்கும் பைகளைப் பாவித்தல்.



## மீள உபயோகித்தல்

ஒரு பொருளைத் தொடர்ந்தும் உபயோகித்தலைக் குறிக்கும் துணிவகைகள் பாவித்த பழைய பொருள்களை அப்பொருள்கள் தேவைப்படுவோருக்கு வழங்குதல், பிளாஸ்ரிக் பைகள், வேறு பாத்திரங்களை மீளவும் பத்திரப் படுத்தி உபயோகித்தல், மீளவும் திருத்தி பாவிக்கக்கூடிய பொருட்களை கொள்வனவு செய்தல்.

## மீள உற்பத்தி செய்தல்

ஏற்கனவே உருவாக்கப்பட்ட பொருள்களை அதன் பாவனைக் காலம் முடிந்த பின் மீளவும் அந்தப் பொருளாகவோ அல்லது வேறு ஒரு பொருளாகவோ உருவாக்குவதைக் குறிக்கும் தோட்டத்தின் கழிவுகளை மரங்களுக்கு உரமாக்குதல், பிளாஸ்ரிக் பொருட்களை மீள உருவாக்கல், கழிவுப்பொருள்களைக் கொண்டு அழகியல் பொருள்கள் உருவாக்குதல், பிளாஸ்ரிக், இரும்பு, மரம் போன்ற கழிவுப்பொருள்களை சேகரித்து மீள உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதன் மூலம் கழிவுகளை அகற்றுவதுடன் வருமானத்தையும் பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்பாடுகளைக் கூறலாம். இரண்டாயிரமாம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இலங்கையின் வீட்டுக்கழிவுகளை எடுத்துக்கொண்டால் 15% - 30% மானவை பிளாஸ்ரிக் கழிவுகளாகவும் 30% - 40% மானவை பேப்பர் கழிவுகளாகவும், 0 - 30% மானவை சேதனப் பொருள் கழிவாகவும் 10% - 30% மானவை ஏனைய கழிவாகவும் காணப்படுகின்றன. இவற்றை விட தொழிற்சாலைக்கழிவுகள் மற்றும் வர்த்தக நிலையங்களினால் ஏற்படுத்தப்படும் கழிவுகள் என்பன இன்று எமது பிரதேசத்தில் அதிகரித்து வருகின்றன. எனவே பிளாஸ்ரிக், பேப்பர் மற்றும் சேதனக்கழிவு என்பவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் போது ஏறத்தாழ 45% - 65% மான கழிவுகள் குறைக்கப்படும்.

## மீளச் சிந்தித்தல்

கழிவகற்றல் சம்பந்தமான புதிய சிந்தனைகளை ஏற்படுத்தல். அதாவது கழிவகற்றலால் ஏற்படும் பாதிப்புக்களை பாடசாலை மட்டத்தில் பயிற்றுவித்தல், சிறுவர்களுக்கு சூழல் பற்றிய தெளிவினையும் அதனைப் பாதுகாக்க வேண்டிய தேவையினையும் கற்றுக்கொடுத்தல், கழிவகற்றல் பிரச்சினையை தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகள் யாவை? என்பது பற்றிச் சிந்தித்தல், அது சம்பந்தமான ஆலோசனைகளை நடத்துதல் மூலம் புதிய தீர்வொன்றினைக் கண்டுபிடித்தல், கழிவகற்றல் சார்ந்த ஆய்வுகளுக்கு முன்னுரிமையளித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் கழிவகற்றல் சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகளை உருவாக்கல்.

மேலே கூறப்பட்ட நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் எமது பிரதேசத்தின் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னால் உற்பத்தி செய்யப்படும் திண்மக்கழிவின் அளவினை குறைக்க முடியும். ஏனெனில் இது நாம் வாழும் பூமி. இதில் இருந்தே எமக்குத் தேவையான அனைத்தையும் நாம் எடுத்துக்கொள்கின்றோம். எமது ஒவ்வொரு அசைவுக்கும் அதற்குத் தேவையான சக்தி இப்பூமியிலிருந்தே பெறப்படுகின்றது. எனவே இப்பூமியைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினரது கையில் ஒப்படைக்கவேண்டியது எமது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். எனவே இந்தப் பூமித் தாய்க்கு நாம் செய்யும் நன்றிக் கடனாக திண்மக்கழிவுப்பெருக்கத்திலிருந்து எமது பிரதேசத்தைப் பாதுகாக்க நாம் எல்லோரும் ஒருமனதுடன் செயற்படுவோமாக. ★

உதயன் தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலெக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# எது நல்லிணக்கம்?

நல்லிணக்கம் என்பது குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கண்டிப்பது அல்ல. காயங்களை ஆற்றும் ஒரு செயற்பாடே என்று நல்லிணக்கத்துக்கு புதிய தத்துவம் கூறியிருக்கிறார் இலங்கையின் ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொகென்ன.

நல்லிணக்கத்துக்கு இலங்கை அரசு கடைப்பிடிக்கும் தத்துவம் இது தான் என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

வன்னி இறுதிப் போரில் இலங்கை அரச படையினரால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கு அரசு பொறுப்புக் கூறுவதுடன் அதற்குக் காரணமாயிருந்த குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என சர்வதேச நாடுகளும் மனித உரிமை அமைப்புக்களும் இலங்கை அரசுக்கு அழுத்தத்தின் மேல் அழுத்தம் கொடுத்துவரும் இன்றைய சூழலில் அவை எதனையும் பொருட்படுத்தாமல் புதிய தத்துவத்தை கற்பித்திருக்கிறார் இலங்கையின் ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி.

போர் குற்றங்களுக்கு பொருத்தமானவர்கள் தமது பக்கத்திலேயே இருக்கிறார்கள் என்பதை நன்கு அறிந்து கொண்டதால் தான் என்னவோ பாலித்த இப்படிக் கூறியிருக்கிறாரோ தெரியவில்லை.

அவரது இந்தக் கூற்றின் மூலம் அரச படையினர் குற்றம் இழைத்துள்ளனர் என்பது தெட்டத்தெளிவாக உறுதியாகி விடுகிறது. படையினர் தரப்பில் தவறு நடந்துள்ளது என்பதை நன்கு தெரிந்துகொண்டதால் தான் அவர் இப்படிக் கூறியிருக்கிறார்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படக் கூடாது. அதுவே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்று எனக்கூறி நல்லிணக்கம் என்ற சொல்லுக்கு புதிய வரைவிலக்கணத்தை முன்வைக்கிறார் அவர்.

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை தண்டிப்பதன் மூலம் நாட்டின் ஜனநாயக ஒருமைப்பாட்டையும் மனித உரிமைப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி நல்லிணக்கத்தை வெளிப்படுத்த வேண்டிய இந்தத் தருணத்தில் குற்றவாளிகளைப் பாதுகாத்து அவர்களைத் தப்பிக்க வைத்து தாமும் தப்பிப்பதற்கு இலங்கை அரசு முயற்சிக்கிறது. அதனை ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் கூற்று தெளிவாகக் காட்டுகிறது.

அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நல்லிணக்கம் என்ற பதத்தை விரைவாகச் செயற்படுத்தி நாட்டில் அனைத்துச் சமூகங்களும் சம உரிமைகளுடன் வாழக்கூடிய சூழல் ஒன்றை ஏற்படுத்துமாறு இலங்கை அரசிடம் கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், உலகின் அதி உயர் சபையாகக் கருதப்படும் ஐ.நா. பொதுச்சபையில் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி இப்படிக் கூறியிருக்கின்றமை குறித்து இலங்கை அரசு வெட்கித் தலைகுனிய வேண்டிய நேரம் இது.

தனது அரச படைகளின் குற்றங்களை மூடி மறைப்பதற்காக அரசு மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முயற்சிகளில் இதுவும் ஒன்று. இதன் மூலம் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட படையினரை இலங்கை அரசு ஒரு போதும் தண்டிக்காது என்பது வெளிப்படையாகிறது.

இவ்வாறான கூற்றுக்களின் மூலம் சர்வதேசத்திடமிருந்து இலங்கை தனிமைப்படுத்தப்பட்டு வருவதுடன் அதன் மீது ஏற்கனவே சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களையும் உறுதியாக்கும் வகையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு மீது அமெரிக்காவினால் கொண்டு வந்த நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்னரும் மனித உரிமை விடயங்களிலும் அரசியல் தீர்வு தொடர்பிலும் இலங்கை அரசு தொடர்ந்தும் அலட்சியப் போக்கையும் இறுமாப்பையுமே கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட உலக ஜனநாயக உரிமைகள் தொடர்பான அறிக்கையில் மோசமான சில நாடுகள் சிலவற்றையும் பட்டியலிட்டிருக்கிறது அமெரிக்கா அதில் இலங்கையையும் சேர்க்க அது தவறவில்லை.

இவற்றின் மூலம் இலங்கை அரசு கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உண்டு. அவற்றைக் கருத்தில் எடுக்காமல் தொடர்ந்தும் இவ்வாறே செயற்பட்டால் எதிர்காலத்தில் விளைவுகள் பெரும் விபரீதத்தில் போய் முடியும்.

# அச்சம்– அநீதி– ஊடக அடக்குமுறை

## ஆபத்தான படகுப் பயணங்களுக்கு காரணம் இவையே

இலங்கை இராணுவத்தினர் தற்போது வடக்கில் இராணுவம் சாராத செயற்பாடுகளில், அதாவது விவசாயம் செய்தல், சிறிய வர்த்தக நிலையங்களை நடத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு அனைத்துலக சஞ்சிகையான Time இதழில் Krista Mahr எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

**உதயன் மீது தாக்குதல்**

இலங்கையின் வடக்கிலிருந்து வெளியிடப்படும் தமிழ் ஊடகம் ஒன்றில் பணிபுரியும் பணியாளர்கள் மீது கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை காலையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில்தொழிற்படும் ஊடகங்களைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்களில் இத்தாக்குதல் மிகப் பிந்தியதாகும்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையிலும் இங்கு சமாதானம் முழுமையாக எட்டப்படவில்லை என்பதற்கான பிறிதொரு சாட்சியமாக தமிழ் ஊடகமான 'உதயன்' மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காணப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் எந்தவொரு பணியாளர்களும் காயப்படாவிட்டாலும் கூட, கடந்த காலத்தில் வேறு சம்பவங்களில் இந்த நிறுவனத்தின் பணியாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். 2011இல், உதயன் ஊடகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இதன் ஆசிரியரும், செய்தியாளரும் தாக்கப்பட்டனர். 2006இல், உதயன் ஊடகப் பணியகம் மீது ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதலில் இதன் இரு பணியாளர்கள் கொல்லப்பட்டனர். சனிக்கிழமை அன்று உதயன் ஊடகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது இராணுவத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் எனத் தான் நம்புவதாக உதயன் ஊடக உரிமையாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினரின் இக்குற்றச்சாட்டை இலங்கை இராணுவப் பேச்சாளர் ஒருவர் மறுத்துள்ளார்.

**போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசு அசமந்தப்போக்கு**

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கான சுதந்திரமான தனித்தாய்நாடு கோரி பல தசாப்தங்களாகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் 2009 இல் தோற்கடிக்கப்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட போர்க் கால மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யவேண்டும் என அனைத்துலக சமூகம் கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் இது தொடர்பில் இலங்கை அரசு எந்தவொரு பதிலையும் அளிக்கவில்லை.

கடந்த மார்ச்சில் இந்தியா உட்பட 25 நாடுகள், அமெரிக்கா தலைமையில் இலங்கை தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க வேண்டும் எனக்கோரி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்தன. இந்தத் தீர்மானமானது இலங்கையில் தற்போதும் இடம்பெறும் படுகொலைகள், காணாமற்போதல்கள், சித்திரவதைகள் உள்ளடங்கலாக பல்வேறு மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இலங்கை அரசு தனது நாட்டில் சமாதானம் மற்றும் அமைதியான சூழலை உருவாக்குவதற்காக மேற்கொண்டுவரும் ஜனநாயக மீள்கட்டுமான முயற்சிகளை அமெரிக்க அரசு குழிதோண்டிப் புதைக்க முயல்வதாக இலங்கையின் ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சரும் அரச தரப்புப் பேச்சாளருமான கெகலிய றம்புக்வெல, இலங்கை அரசால் நடத்தப்படும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடம் தெரிவித்திருந்தார்.

"இது போரின் முடிவாக இருக்கின்றதேயன்றி, மோதலின் முடிவாக இருக்கவில்லை. இலங்கையின் சட்ட ஆட்சி மீறப்பட்டுள்ளதுடன் தண்டனைக் கலாசாரம் அதிகரித்துள்ளது" என கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் கொள்கை மாற்றீடுகளுக்கான மையத்தின் நிறைவேற்று இயக்குநர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

**அரசை விமர்சிக்கும் சகல ஊடகங்கள் மீதும் தாக்குதல்**

ஊடக சுதந்திரத்தை மதிப்பிடும் 179 நாடுகளில் இலங்கை 162வது நாடாக உள்ளதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பின் 2013 ஆம் ஆண்டுக்கான உலக ஊடக சுதந்திர சுட்டியில் மதிப்பிடப்பட்டுள்ளது. புலிகள் அமைப்புடன் தொடர்புபட்ட ஊடகங்கள் மிக நீண்ட காலமாக இலக்கு வைக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மை சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கூட இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

2009இல் விடுதலைப் புலிகளை இலங்கை அரச படைகள் தோற்கடிப்பதற்கு சில மாதங்களின் முன்னர் சண்டே லீடர் ஊடகத்தின் ஆசிரியரான லசந்த விக்ரமதுங்க இரண்டு துப்பாக்கிதாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விமர்சித்து கருத்துக்களை வெளியிட்ட இவர் தனது பணியகத்திலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.




இவர் தனக்கு இவ்வாறானதொரு ஆபத்து வரும் என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தார். "நான் இறுதியாகப் படுகொலை செய்யப்பட்டுவிட்டால், அது இலங்கை அரசினாலேயே நான் படுகொலை செய்யப்பட்டிருப்பேன்" என லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் தனது ஆசிரியர் பத்தி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் புலிகளின் தொலைக்காட்சி சேவையில் செய்தி வாசிப்பாளராகக் கடமையாற்றிய தமிழ்ப் பெண் ஒருவரை மீண்டும் இலங்கைக்கு அனுப்ப வேண்டாம் என அண்மையில் ஐக்கிய அரபுக் குடியரசிடம் மனித உரிமை அமைப்புக்கள் கோரியிருந்தன. இவ்வாறு அவர் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அங்கே சித்திரவதைக்கு உள்ளாக்கப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே மனித உரிமை அமைப்புக்கள் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளன.

26 ஆண்டுகளாக இலங்கையில் தொடர்ந்த உள்நாட்டுப் போரின் போது புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கை இராணுவமும் பொலிஸாரும் தமிழ் மக்களுக்கு எதிராக சித்திரவதைகளை மேற்கொண்டதுடன், பாலியல் பலாத்காரங்களையும் புரிந்துள்ளனர் என்பதற்கான சாட்சியங்கள் உள்ளன. இதேபோன்று தற்போது இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் தமிழ் மக்களும் இவ்வாறான சித்திரவதைகளுக்கு உட்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இவ்வாறான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் வெளிப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. சிறையில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 75 சம்பவங்களை கண்காணிப்பகம் பதிவு செய்துள்ளது.

**நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்பதற்கான அடிப்படைக்காரணம்**

இவ்வாறான அச்சநிலை காரணமாக அதிக எண்ணிக்கையானோர் இலங்கையை விட்டு வெளியேறி வருகின்றனர். இவர்கள் படகுகளில் பயணிப்பதால் தாம் நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்த போதிலும் புகலிடக் கோரிக்கை கோரி இவ்வாறான ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு வெளிநாடுகளில் தப்பிச் செல்கின்றனர். இலங்கை அரச அதிகாரிகள் போரால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதியில் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்கின்ற போதிலும் கூட பெருமளவான மக்கள் புலம்பெயர்ந்து செல்கின்றனர்.

"போருக்குப் பின்னான இக்கால கட்டத்திலும் கணிசமான மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். இலங்கை அரசு பொருளாதார அபிவிருத்திகளை முதன்மைப்படுத்தி, மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவது போன்று காண்பித்தாலும் கூட மக்கள் வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்கின்ற நிலை காணப்படுகிறது" என பாக்கியஜோதி சரவணமுத்து சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கில் வாழும் மக்கள் படகுகள் மூலம் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்ல விரும்பவில்லையாயினும் கூட, அவர்கள் இவ்வாறு செல்ல வேண்டிய நிலை காணப்படுவதுடன், இதற்காக அவர்கள் பெருமளவான பணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ளூர் மக்களால் மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை இராணுவத்தினர் ஈடுபடுவதாக தற்போது தாக்குதலுக்கு உட்பட்ட உதயன் ஊடகத்தின் உரிமையாளர் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டின் ஏனைய பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இலங்கைப் பாதுகாப்பு படையினரின் எண்ணிக்கையை விட வடக்கில் வாழும் மக்களின் எண்ணிக்கைக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கைக்கும் இடையிலான விகிதம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இலங்கை இராணுவத்தினர் தற்போது வடக்கில் இராணுவம் சாராத செயற்பாடுகளில் அதாவது விவசாயம் செய்தல், சிறிய வர்த்தக நிலையங்களை உள்ளூர் தமிழ் வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொள்ளுதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது. ★

*(நன்றி: புதினப்பலகை)*

# வாழ்க்கை ஓர் 4 வரைபடம்



■ நிவேதிதா மோகன்.

ஆதவின் கடிதத்தை படித்த நிலாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நிலாவின் மனதில் ஆதவ் மேல் அப்படி ஓர் எண்ணமும் வரவேயில்லை. அவள் அந்த கடிதத்தை எடுத்து அவளது புத்தக பைக்குள் வைத்து விட்டு ஒன்றுமே பேசாமல் அவளது இருக்கையில் அமர்ந்து கொண்டாள். ஆனால் அந்தச் சமயம் நிலாவின் உற்ற தோழிகள் மூவரும் வந்து நிலாவிடம் பேசினார்கள். நிலா அந்தக் கடிதத்தை எடுத்துக் காட்டினாள். உடனே மூவரும் பெரும் ஆர்வத்தோடு அந்தக் கடிதத்தை படித்தனர்.

கடிதத்தை படித்து முடித்தவுடன், மூவரும் ஒரே குரலில் "நீ என்ன பதில் சொல்லப் போகிறாய்?" என்று நிலாவை வினவினார்கள். உடனே நிலா, "என்னடி! உங்களுக்கு தெரியாதா, அப்பா இல்லாத பிள்ளை என்பதால் அம்மா எப்படி கண்டிப்பாக என்னை வளர்க்கிறார் என்று. இந்த விஷயம் மட்டும் அம்மாக்கு தெரிந்து விட்டால் என்னைக் கொன்று விடுவார்" என்று விட்டு மீண்டும் அழுதாள். அதற்கு நிலாவின் தோழிகள்" அதுவும் சரிதான்" என்றனர்.

அதற்கு நாளைக்கு அவருக்கு பதில் நான் சொல்கிறேன், இப்போதைக்கு என்னைத் தனியாக விடுங்கள் என்றாள் நிலா.

மறுநாள் காலை நிலா ஆதவ் சொன்ன இடத்துக்குச் சென்றாள், அங்கு ஆதவ் பெரும் மகிழ்ச்சியுடன் நிலாவுக்காக காத்திருந்தான். ஆதவிடம் நிலா "உங்களுக்கு என்னைப் பற்றி முழுதா தெரியுமா என்று எனக்குத் தெரியாது, நான் அப்பா இல்லாத பிள்ளை. அதனால் அம்மா என்னை மிகவும் கவனமாகத்தான் வளர்த்தார். இப்போது நான் இப்படிச்சென்று விட்டால், அது நான் என் அம்மாவுக்கு செய்யும் துரோகம். அதனால் என்னை விட்டு விடுங்கள். நான் உங்கள் மனது புண்படும்படி ஏதாவது பேசியிருந்தால், என்னை மன்னித்து விடுங்கள்." என்று கூறிவிட்டு சென்று விட்டாள்.

நிலா ஆதவின் காதலை ஏற்றுக்கொண்டால் கூட ஆதவ் இவ்வளவு சந்தோஷமாக இருந்திப்பான் என்று தெரியவில்லை. ஆனால் ஆதவ் அவ்வளவு சந்தோஷமாக இருக்கிறான். காரணம் நிலாவின் குணம், தாய்க்கு கூட துரோகம் நினைக்காத மனம், அவனது காதலை வலுவாக்கின. இனி திருமணம் என்று ஒன்று அவன் வாழ்வில் இருந்தால் அது நிலாவுடன் தான் என்று உறுதிப் படுத்திக்கொண்டான். வழக்கம் போல நிலாவின் வருகைக்காக காத்திருந்தான் ஆதவ். ஆனால் நிலா அவனை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. இதேபோல பல நாள்கள் காற்றில் பறந்தன.

ஒரு நாள் பலத்த மழை. நிலா பாடசாலைக்குச் செல்லும் வழியில் ஆதவை காணவில்லை. நிலா மனத்துக்குள் ஒரு கேள்வி இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் பாடசாலையை வந்தடைந்தாள். சிறிதுநேரம் கழித்து நிலாவின் உற்ற தோழன் டிலக்ஷன், நிலாவிடம் ஓடி வந்தான். நிலாவால் என்ன நடக்கிறது என்பதை யோசிக்க கூட நேரம் கொடுக்கவில்லை. தற்கொலை முயற்சி செய்து விட்டான்," என்றதும் நிலாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. உடனே நிலா "ஏன் என்ன நடந்தது?" என்றாள். அதற்கு டிலக்ஷன் "உனக்கு ஒன்றுமே தெரியாது தானே! ஒருத்தர் உங்களை உண்மையாக காதலித்தால் உங்களுக்குப் பிடிக்காதே, இதுதான் ஆதவின் தொலைபேசி எண்" என்று விட்டு தொலைபேசி எண்ணைக் கொடுத்தான்.

நிலாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வீட்டுக்குச் சென்றவுடன் ஆதவுக்கு 'போன்' எடுத்தாள். நிலாவின் குரலை கேட்டவுடன், ஆதவின் உயிர் மீண்டும் அவனிடம் வந்தது போல் அவனுக்கு ஓர் உணர்வு. உடனே நிலா "ஏன் இப்படி முடிவு? வாழ்வின் நாங்கள் நினைப்பது போல் ஒன்றுமே கிடைப்பது இல்லை. அது போல் என்னையும் நினைத்துவிட்டு வாழவேண்டியது தானே" என்று சொன்னாள். பொருள் கிடைக்காவிட்டால் விட்டு விடலாம். ஆனால் நீ பொருள் அல்ல என் உயிர்" என்று கூறி விட்டுத் தொலைபேசி அழைப்பை துண்டித்து விட்டான் ஆதவ்.

அம்மாவுக்கு நிலா மீது லேசான சந்தேகம் வரத் தொடங்கிவிட்டது.


ஆதவ் இருப்பானா? என்ற சந்தேகம் நிலா மனதை வருத்தி எடுத்தது. ஆதவ் வழக்கமாக நிற்கும் இடத்தை நிலா பார்த்தாள். ஆனால் அங்கு ஆதவ் இல்லை, ஏமாற்றத்துடன் பாடசாலை பக்கம் நடக்க திரும்பினாள். அப்போது ஒரு விசில் சத்தம் நிலாவின் காதுகளை எட்டியது. பின்னால் திரும்பிப் பார்த்த நிலாவுக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை. இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் நின்றாள். உடனே ஆதவ் "யாரை இப்படி தேடுறீங்கள்?" என்று ஒரு நக்கலாய் கேட்டான். அதற்கு நிலா "ஒருத்தரையும் இல்லையே", என்றாள்.

ஆதவை பார்த்த சந்தோஷத்தில் ஆனந்த கண்ணீரும் வந்தது நிலாவுக்கு. உடனே "ஏய் ஏன் அழுகிறாய்?" என்று நிலா அருகில் வந்தான். உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா? என்றான். தலையைமட்டும் சம்மதம் கூறுவதுபோல அசைத்தாள் நிலா. ஆதவ்வுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

# ஆற்றலை அதிகரிக்கும் பயிற்சிகள்







ஒவ்வொரு நாளையும் நாம் எப்படித் தொடங்குகிறோம் என்பதில்தான் நம் ஆரோக்கியம் அடங்கியிருக்கிறது.

யோகா பயிற்சிகளுடன் ஒரு தினத்தைத் தொடங்கும்போது உடலும் மனதும் உற்சாகமாக இருப்பதை உணர முடியும். மனதில் தோன்றும் வேண்டாத எண்ணங்களும், உணர்ச்சிகளும் விடுபடும். பயிற்சிகள் செய்வதன் மூலம் அன்றைய தினம் சிறப்பானதாக இருக்கும்.

**தாடாசனத்தின் தழுவல்**

முதலில், நேராக நிற்க வேண்டும். மூச்சை உள்ளிழுத்தவாறே கைகளை ஒன்று சேர்க்காத நிலையில், முன் பக்கமாக உயர்த்தித் தலைக்கு மேல் கொண்டு செல்ல வேண்டும். கைகளைத் தலைக்கு மேல் கொண்டு செல்லும் போது, முதுகைச் சற்றுப் பின்புறமாக வளைக்க வேண்டும். ஒரு விநாடிக்குப் பின் மூச்சை வெளியே விட்டபடி பழைய நிலைக்கு வர வேண்டும். இப்படி 6 முறைகள் செய்ய வேண்டும்.

**பலன்கள்:** இந்தப் பயிற்சி செய்வதால், தசைகள் நன்கு நீட்சி அடைகின்றன. நுரையீரலுக்கு அதிக அளவில் கிடைக்கும் ஒட்சிசன், ரத்த ஓட்டம் மூலம் உடல் முழுவதும் பரவுகிறது. உடலில் தேங்கும் நச்சுப் பொருட்கள் வெளியேற்றப்படுகின்றன. உடலுக்குப் புத்துணர்ச்சியும் கிடைக்கிறது.

**வீரபத்ராசனத்தின் தழுவல்**

நேராக நின்ற நிலையில் இருந்து முதலில் இடது காலை முன் பக்கமாக வைக்க வேண்டும். வலது காலின் பாதத்தைச் சற்று வெளிப்புறமாகத் திருப்பி, நிலையாக நிற்க வேண்டும். மூச்சை உள்ளிழுத்தபடியே இடதுகால் முட்டியை மடக்கி கைகளை முன்பக்கமாக நீட்டி, மேல்புறமாகக் கொண்டு செல்லும்போது, மார்பை விரிந்த நிலைக்குக் கொண்டு வர வேண்டும். ஒருசில விநாடிகள் இடைவெளி விட்டு, மூச்சை வெளியே விட்டபடி பழைய நிலைக்கு வர வேண்டும். இப்படிச் செய்யும்போது பின் கால் மடியக் கூடாது. இரு கால்களுக்கும் முறையே 6 முறைகள் செய்ய வேண்டும். ஒவ்வொரு முறை செய்த பிறகும், தேவைக்கு ஏற்ப சில விநாடிகள் ஓய்வெடுக்கலாம்.

**பலன்கள்:** முதுகெலும்பு வளைந்து, மார்புப் பகுதி விரியும்போது, சக்தி அதிகரிக்கிறது. உடலின் மேல் பகுதி - குறிப்பாகக் கீழ் முதுகு - நன்கு வேலை செய்கிறது. கால், கணுக்கால், கெண்டைக்கால் வலுவடைகிறது. அடிவயிறு இழுக்கப்படுகிறது. கவனம் கூடுகிறது.



# இன்னும் பெண்ணாக....

காவியம் படைக்கவே கருவியாக - அன்று
தோற்றுவிக்கப்பட்டோம் - இன்று
வீறு காவியம் கூறும் பெண்ணாக நாங்கள்
மிளிர்ந்து வருகின்றோம்
ஆசைக்கு உணவாகி முடங்கிய காலம் விட்டு
ஆர்ப்பரிக்கும் அலைபோல் எழுந்து
சரித்திர வாழ்வில் சாதனை படைக்க
தனித்துவம் தேடிப் புறப்பட்டு விட்டோம்
பெண்ணாகி மண்ணில் பிறந்து விட்டது - நாளை
மண்ணாகி மண்ணில் போவதற்கல்ல
விண்ணாகி எழுந்து தடை சிகரங்களை உடைத்து
அண்டங்கள் அனைத்தையும் ஆள்வதற்கே!
விதியினை வெற்றி கொண்டோம்
வினை தீர்ப்போரை அழிவித்தோம்
படி தாண்டாமல் இருந்து
அடிமாடாய் அடங்கி முடமாகிப் போன - அந்த
பாழான காலம் விட்டு படியென்ன - இதோ
விண்ணையும் தாண்டி அண்ட வெளியில் மிதந்து
சாகசம் செய்கின்றோம்
தலைமையும் வகிக்கின்றோம்
நாளைய நாளுக்காய் காத்து நிற்கின்றோம்
இன்னும் பெண்ணாக...!!!

த.நிதர்ஷனா,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 112

# குழந்தைகளுக்கு போசணை குறைபாடு

திருமதி.சோ.கருணைலிங்கம்
சிரேஷ்ட தாதிய போதனாசிரியர்,
யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரி.

குழந்தைகளுக்கு வயதுக்கு ஏற்ப சரியான ஊட்டச் சத்துக்கள் உள்ள உணவு ஊட்டப்படா விட்டால் குழந்தைகளில் போசணைக் குறைபாடு ஏற்படும். இந்நிலை மந்த போசணை (Malnutrition) எனப்படும். இது மரஸ்மஸ் (Marasmus) குவாசியக்கோர் (Kwashior kor) என இரு வகைப்படும்.

மரஸ்மஸ் (Marasmus)

குழந்தையின் பிறந்தநாள் முதல் ஆறு மாதங்கள் வரை தாய்ப்பால் மட்டும் வழங்காது வேறு துணை ஆகாரங்களையும் வழங்குவதினால் மரஸ்மஸ் ஏற்ப டுகின்றது. இந் நிலைமை ஏற்பட்ட குழந்தைகளில் புரதம், கலோரி ஆகிய ஊட்டச் சத்துக்கள் பெருமளவில் குறைந்து காணப்படும்.

**குவாசியக்கோர் (Kwashior kor)**

குழந்தை பிறந்து 6 மாதங்களின் பின்பும் துணை ஆகாரங்கள் உரிய காலங்களில் ஊட்டத் தவறுவதினால் குவாசியக்கோர் ஏற்படும்.இக் குழந்தையில் புரதம் என்னும் ஊட்டச் சத்து பெருமளவில் குறைந்து காணப்படும்.

மேற்குறிப்பிட்ட மந்தபோசணை நிலை குழந்தைகளுக்கு ஏற்படாது தடுப்பதற்கு வயதுக்கு ஏற்ப உணவூட்டல் முறை பின்பற்றப்படல் வேண்டும். அதாவது குழந்தை பிறந்து 6 மாதங்கள் (180 நாட்கள்) வரை தாய்ப்பால் மட்டும் ஊட்டப்பட வேண்டும். 6 மாதம் முடிவடைந்ததும் துணை ஆகாரங்கள் (பூரணப்படுத்தும் உணவுகள்) கட்டாயமாக கொடுக்கத் தொடங்குதல் வேண்டும்.

**பூரணப்படுத்தும் உணவு கொடுக்கும் நாள்களும் முறைகளும்**

6 ஆம் மாதம் முடிந்து 3 நாள்கள் வரை

★சோறு:- நன்கு மசிக்கப்பட்டு தாய்ப்பால் கலந்து கூழ்ப்பதம்.

★ஒரு நாளுக்கு ஒரு தடவை மட்டும் 2-3 தேக்கரண்டி.

★குழந்தையின் தேவையைப் பொறுத்துக் கூட்டலாம் அல்லது குறைக்கலாம்.

★இடையில் தாய்ப்பால் ஊட்டல் அவசியம்.

**6 ஆம் மாதம் முடிந்து 4 ஆம் நாள் தொடக்கம் 7ம் நாள் வரை**

★சோறு, பருப்பு, தாய்ப்பால் சேர்த்து கூழாக்கப்பட்டு ஒரு நாளுக்கு இரு தடவை (காலை, மாலை) 3-4 தேக்கரண்டி.

★வாழைப்பழம் நன்கு மசித்து ½ தேக்கரண்டி.

★இடையில் தாய்ப்பாலூட்டல் அவசியம்.

**6 ஆம் மாதம் முடிந்து 8 ஆம் நாள் முதல் 7 ஆம் மாதம் முடியும் வரை**

★மசித்த சோறு, பருப்பு, மீன், ஈரல், ½ தேக்கரண்டி மாஜரின் அல்லது ½ தேக்கரண்டி நல்லெண்ணெய் காலை, மாலை கொடுத்தல்

★பப்பாசிப் பழம் அல்லது வாழைப்பழம் நன்கு மசித்து ½ தேக்கரண்டி.

★தாய்ப்பால் இடையில் கொடுப்பது முக்கியம்.

**7 ஆம் மாதம் முடிந்து 7 நாள்கள் வரை**

★ மசித்தும், மசியாத துமான பதத்தில் சோறு.

★ மரக்கறி கரட், சாம்பல் வாழைக்காய், பூசணி.

★ பச்சை இலைவகை, இவற்றுடன் தேங்காய்ப்பால் சேர்த்து அவித்து ½ கப் 2,3 தடவை.

★உணவூட்டிய பின் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். இடைநேர உணவாக (காலை 10 மணி)

★ உருளைக்கிழங்கு அல்லது வற்றாளை கிழங்கு அவித்து நன்கு மசித்து அவித்த முட்டை மஞ்சள்கரு, ½ தேக்கரண்டி தேங்காய்ப்பால் 1 தேக்கரண்டி சேர்த்து அவித்துக் கொடுத்தல்.



★ மசித்த பப்பாசிப்பழம் அல்லது வாழைப்பழம் 4 தேக்கரண்டி.

**7 ஆம் மாதம் முடிந்து 7 ஆம் நாள் தொடக்கம் 8 ஆம் மாதம் முடியும் வரை**

★ சோறு மரக்கறி இலை வகையுடன் ½ கப் அல்லது கூடவும் 2-3 தடவை கொடுக் கவும். மசித்த பழவகை ½ கப் இடையில் (காலை 10 மணியளவில்)

★ ஜோகட் 6 தேக்கரண்டி, மசித்த பழம் ½ கப். பிஸ்கட் 1 அல்லது பாண் நடுப்பகுதி பிள்ளையின் கையில் கொடுத்தல். உணவின் பின் தாய்ப் பாலூட்டல்

**9 ஆம் மாதம்**

★மேற்குறிப்பிட்ட வற்றுடன் முட்டை வெள்ளைக்கரு, அவித்த பயறு, கௌபி, இடியப்பம், ரொட்டி, தோசை குழந்தைக்கு கையால் சாப்பிடக் கொடுத்தல்.

**9 ஆம் மாதம் முதல் 12 மாதம் வரை**

★சோறு , மரக்கறி வகை, மீன், முட்டை ½ கப் 1 நாளைக்கு 3 முறை.

★கொடுக்கும் போது கொடுக்கும் உணவின் பெயர், நிறம் என்பன கூறல்.

★குழந்தை உணவை உண்ண ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

குழந்தைகள் ஒரு வயது முடிவில் வளர்த்தவர்கள் உண்ணும் உணவுகள் யாவும் உண்ணப் பழகி விடுவர்.

எனினும் குழந்தைக்கு 2 வயது பூர்த்தியாகும் வரை துணை ஆகாரங்களுடன் தாய்ப்பால் ஊட்டுதல் மிக அவசியமாகும். ஏனெனில்

★குழந்தையின் மனநலம், புத்திக் கூர்மை என்பவற்றை அதிகரிக்கும், வயிற்றோட்டம், சுவாசநோய்கள், தோல் நோய் என்பவற்றைத் தடுக்கும்.

★பற்கள் எலும்பை வலிமை வாய்ந்ததாக்கும். பிற்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படுவதைக் குறைக்கும் அல்லது தடுக்கும்.

★ பால்மா வாங்கும் செலவைக் குறைக்கும்.

உணவூட்டல் தாமதிப்பதால் குழந்தையில் ஏற்படும் சிக்கல்களாவன:-

★வளர்ச்சி குன்றுதல்.

போசணைக் குறைபாடு., விற்ற மின்கள் இழக்கப்படல்., அறிவு விருத்தியடையாமை., நோய்த் தொற்றுக்கு உள்ளாதல்.

# பாம்புக்கடி



இலங்கையில் 93 வகையான பாம்புகள் உள்ளன. இவற்றில் கடல் பாம்புகளும் அடங்கும். எனினும் ஐந்து வகை பாம்புகள் மட்டுமே அதிக நச்சுத் தன்மையுள்ளனவாகவும், இறப்பை ஏற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளன. இலங்கையில் உள்ள அதிக நச்சுப் பாம்புகள்.

1 நாகபாம்பு (Cobra)

2,3 எண்ணை விரியன் (Common Krair, Ceylon Krait)

4 கண்ணாடி விரியன் (Russell's Viper)

5 சுருட்டை பாம்பு (Saw Scaled Viper)

பெரும்பாலான இறப்புக்கள் நாகபாம்பு, எண்ணை விரியன், கண்ணாடி விரியன் என்பவற்றினாலேயே ஏற்படுகின்றன.

பாம்புக்கடியினால் ஏற்படுகின்ற நோய் அறிகுறிகள் கடித்த பாம்பின் வகையை பொறுத்தும், பாம்பினால் உட் செலுத்தப்பட்ட நச்சுத் தன்மையின் அளவிலும் தங்கியிருக்கிறது.

பெரும்பாலான் பாம்புக்கடிகள் நச்சுத் தன்மை குறைந்த பாம்புகளால் ஏற்படுகின்றன. சிலவேளைகளில் நச்சுள்ள பாம்புகளால் கடி ஏற்பட்ட போதிலும் அவை இறப்பை ஏற்படுத்தக் கூடிய அளவு நச்சை உட்செலுத்துவதில்லை.

**நோய் அறிகுறிகள்.**

அதிக நச்சுப் பாம்புகள் கடித்து குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்ட நச்சுத் தன்மையை உட் செலுத்திய பின் பாம்பின் வகையைப் பொறுத்து நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றன. பொதுவான அறிகுறிகளாக கடித்து சில மணி நேரத்திலேயே வாந்தி, வயிற்று நோ, தலைச்சுற்று என்பவையும் கடித்த இடத்தில் வீக்கம், நோ, இரத்தப் போக்கு என்பவையும் ஏற்படலாம்.

பாம்புகளுடைய நச்சுகளின் வகையை பொறுத்து, பாம்புகளின் நச்சுகள் பிரதானமாக நரம்புத் தொகுதியைத் தாக்குவனவாகவும் சில குருதிச் சுற்றோட்டத் தொகுதியை தாக்குவனவாகவும் சில இரு தொகுதிகளையும் தாக்க கூடியனவாகவும் உள்ளன.

பிரதானமாக நாகபாம்பு, எண்ணை விரியன் என்பனவற்றில் நரம்புத் தொகுதியைத் தாக்கக்கூடிய நச்சுக்கள் உருவாகுகின்றன. நரம்புத் தொகுதி பாதிக்கப்படுவதன் விளைவாக கண்கள் மூடுபடுதல், விழுங்க முடியாமல் போதல், சோம்பல், மூச்சு எடுப்பதில் கஷ்டம், பார்வை இரண்டாக தெரிதல் என்பன ஏற்படுகின்றன.

கண்ணாடி விரியன், சுருட்டை பாம்பு என்பவற்றின் நஞ்சு பிரதானமாக குருதிச் சுற்றோட்டத் தொகுதியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குருதியில் விளைவுகள் ஏற்படுத்துவதன் மூலம் குருதி உறையாத தன்மை, இரத்தப் பெருக்கு, இரத்த வாந்தி, சிறுநீருடன் இரத்தம் போதல், மூளைக்குள் இரத்தப் பெருக்கு ஏற்படுதல் என்பவை ஏற்படலாம். குறிப்பாக கண்ணாடி விரியன் இரண்டு தொகுதிகளையும் தாக்கக் கூடிய நஞ்சை கொண்டுள்ளன. கடற்பாம்புகளின் நஞ்சுக்கள் தசை நார்களைத் தாக்குவதனால் சிறுநீரகத்தை பாதிக்கின்றன.

**முதலுதவி**

பாம்புக்கடி ஏற்பட்டவரை முதலில் பயப்படாதபடி அறிவுரைகூறி, கடிபட்ட இடத்தை இயலுமானவரை அசைக்காது வைக்கவும், காலில் கடி பட்டிருந்தால் கால் தொங்கக் கூடிய வகையில் இருத்தி வைக்கவும். கையில் கடி ஏற்பட்டால் கையை உயர்த்தி பிடிக்காது தொங்க விட்டபடி வைக்கவும். காயத்தை தூய தண்ணீரால் மெதுவாகக் கழுவவும். இறுக்கி உரஞ்சி கழுவுவதைத் தவிர்க்கவும். இவ்வாறு செய்வதன் மூலம் நச்சுத் தன்மை குருதிச் சுற்றோட்டத்துக்கு பரவுவதை குறைக்கலாம்.

கடிபட்ட இடத்துக்கு மேலாக கட்டுவதையோ காயத்தில் வாய் வைத்து உறிச்சுவதையோ, பிளேட் போன்ற வற்றால் காயத்தை வெட்டுவதையோ தவிர்கவும் இந்தச்செயன் முறைகளால் பாதகமான விளைவுகளே நோயாளிக்கு ஏற்படுகிறது. கடித்த இடங்களில் மோதிரம், மெட்டி என்பவை அணிந்திருந்தால் அவற்றை உடனடியாக கழற்றிவிடவும் ஏன்எனில் வீக்கம் ஏற்பட்டால் இவற்றால் தீய விளைவுகளே ஏற்படும். கடிபட்டவருக்கு எந்த உணவுப் பொருளையோ மாத்திரைகளையோ கொடுக்காது இயலுமானவரை விரைவாக அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று வைத்தியரின் உதவியை நாடவும். இயலுமானால் கடித்த பாம்பை கொண்டு வர முடிந்தால் நோயாளியுடன் கொண்டு வரவும் இறந்த பாம்பைக் கொண்டு வருவதன் மூலம் நச்சுபாம்பை இனங்கான உதவியாக இருக்கும்.

இதற்காக எந்தவிதத்திலும் நோயாளியை வைத்தியசாலையில் சேர்ப்பதைத் தாமதிக்க வேண்டாம். வைத்தியசாலையில் மருத்துவர்களால் நச்சுத்தன்மை உட் செலுத்தப்பட்டுள்ளது என்பதை நோயாளியின் நோய் அறிகுறிகள் கொண்டும், பரிசோதனைகள் மூலமும் உறுதிப்படுத்திய பின் நச்சு தன்மையை குறைக்கக்கூடிய ஊசி மருந்து ஏற்றப்படுகிறது. (Anti Snake venom) இந்த மருத்துவ முறையால் பெருமளவிலான இறப்புக்கள் குறைக்கப்படுகின்றன.

**தடுப்பு முறைகள்**

இயலுமானவரை பாம்புக் கடியிலிருந்து தப்பி இருப்பதற்கு வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் விசேடமாக பற்றைகள், கல்கும்பிகள் என்பனவற்றை அகற்ற வேண்டும்.

இயலுமான வரை இரவில் வெளியே நடமாடுவதைத் தவிர்க்கவும். வெளியில் நடமாடும் போது செருப்பு அல்லது சப்பாத்து அணிந்து சரியான வெளிச்சம் உள்ள இடங்களில் மட்டும் இரவில் நடமாடவும்.

பாம்புக் கடி ஏற்பட்டால் இயலுமான வரை விரைவாக வைத்தியசாலைக்கு செல்வதன் மூலம் பெருமளவிலான இறப்புகளைத் தவிர்த்து கொள்ள முடியும்.

***Dr. பி.யோண்சன் MD (MEDICINE)***
யாழ். போதனா வைத்தியசாலை

தருவது
வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** இளவயது நண்பர்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்களால் வீண் பதற்றம் ஏற்படும். வியாபாரத்தில் அதிரடிச் சலுகைகள் மூலம் லாபமடைவீர் கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**இடபர்:** குடும்பத்தில் உள்ள வர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**மிதுனர்:** புதியவர்கள் நண்பர்களாவார் கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**கடகர்:** மற்றவர்களை முழுமையாக நம்பிக்கொண்டிருக்க வேண்டாம். நெருங்கியவரிடம் உங்களின் மனக் குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர் களுடன் சச்சரவு வரும். உத்யோகத்தில் பிறரின் குறைகளை நாசூக்காக சுட்டிக் காட்டுங்கள்.

**சிங்கர்:** முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியமாக இருக்க வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள்.

**கன்னி:** திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப் படுவீர்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக் கைகள் நிறைவேறும். புகழ், கௌரவம் அதிகரிக்கும்.

**நாளை**

*சித்திரை-10 செவ்வாய்க்கிழமை 23.04.2013*
*திதி: திரயோதசி பி.இ. 08.05 வரை*
*நட்சத்திரம்: உத்தரம் மா. 06.28 வரை*
*சுபநேரம்: 10.30- 12.00 வரை*
*இராகுகாலம்: 03.00- 04.30 வரை*

**துலார்:** எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களைக் கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுப்பார்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவர். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**விருச்சிகர்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார். நன்மைகள் நிறைந்த நாள்.

**தனுசர்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும். பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.

**மகரர்:** பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். திருமணப் பேச்சு வெற்றியடையும். தாயார் ஆதரித்துபேசுவார். வியாபாரத்தில் பழைய மிகுதிகளைப் பெறுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கும்பர்:** அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மீனர்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | 6 | | | 9 |
| | | 1 | | | 7 | 6 | | |
| | 6 | | 9 | | | 1 | 8 | |
| 6 | | | 4 | 9 | | 2 | | |
| 2 | 1 | | 6 | 7 | 3 | | 9 | 8 |
| | | 9 | | 1 | 5 | | | 6 |
| | 9 | 2 | | | 4 | | 3 | |
| | | 7 | 3 | | | 9 | | |
| 1 | | | 7 | | | | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 8 | 7 | 5 | 6 | 1 | 9 | 4 |
| 9 | 4 | 7 | 8 | 1 | 2 | 6 | 3 | 5 |
| 1 | 6 | 5 | 4 | 3 | 9 | 2 | 7 | 8 |
| 4 | 8 | 3 | 5 | 6 | 1 | 7 | 2 | 9 |
| 5 | 9 | 6 | 2 | 4 | 7 | 8 | 1 | 3 |
| 2 | 7 | 1 | 9 | 8 | 3 | 5 | 4 | 6 |
| 6 | 1 | 9 | 3 | 7 | 5 | 4 | 8 | 2 |
| 8 | 5 | 2 | 1 | 9 | 4 | 3 | 6 | 7 |
| 7 | 3 | 4 | 6 | 2 | 8 | 9 | 5 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஏழாம் ஆண்டு நீங்காத நினைவுகள்

22-04-2006 சனிக்கிழமை அபரபக்க தசமித் திதியில்
லண்டனில் சிவபதமடைந்த

## திருமதி. மகாலட்சுமி குலவீரசிங்கம்

அவர்களின்
ஏழாம் ஆண்டு நினைவுகள்

**தோற்றம்**
**13-11-1944**

**மறைவு**
**22-04-2006**

**திதி: 04-05-2013 (சனிக்கிழமை)**



இவர் வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு இறுதிக்காலம் லண்டனில் வசித்தவரும் செல்லையா குலவீரசிங்கம் அவர்களின் பிரிய பத்தினியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் செல்லையா - இராசலட்சுமி தம்பதியரின் மருமகளுமாவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குலவிளக்கு அணைந்த பிரிவால் வாடும்:
அன்புக் கணவர்,
பிள்ளைகள்: மோகன், குலச்செல்வன், ஸ்ரீகௌரி, ஜெயஸ்ரீ, வாணிஸ்ரீ
மருமக்கள்: சிவகௌரி, ரேணுகா, மகேஸ்வரன், பகீரதன், சிவரஞ்சன்
பேரப்பிள்ளைகள்: தபினா, கரிஷ்மா, யுபாசனா, வேணிஷா, ராகுல், வருண், ஷானுஜா, நர்த்தனா, கிஷ்ணவி
சகோதரர்கள்: பரநிருபசிங்கம், அருந்தவநாதன், உஷாதேவி, யோகலட்சுமி, ஜெயலட்சுமி
மற்றும் உறவினர்கள்.

தகவல்:
செ.குலவீரசிங்கம்(லண்டன்)
கு.சரவணநாதன்(மருமகன் - யாழ்ப்பாணம்)




## மின் தடை

வீதி அகலிப்பு பணிகளுக் காகவும், மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காக வும் சில பகுதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.-

இன்று திங்கட்கிழமை அண்ணா சிலையடி முதல் கரணவாய் வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

செவ்வாய்க்கிழமை சுப்பர் மடம், உடுப்பிட்டியின் ஒரு பகுதி, மயிலியதனை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆகிய பிரதேசங் களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலா ளர் அறிவித் துள்ளார். (ந)

# ஜனநாயக விரோதச் செயல்

## உதயன் மீதான தாக்குதலுக்கு கத்தோலிக்க அமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

அரசு தமது மனித உரிமை மீறல் தொடர்பான செயற்பாடு களை செய்திகளாக வெளி யிடுவதை அடக்கும் முயற்சி யில் ஒன்றாகவே உதயன் பத்திரிகை அலுவலகம் தாக் கப்பட்டுள்ளது. இது ஒரு ஜனநாயக விரோதச் செயல். இவ்வாறு யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு அனுப்பிவைத் துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:-

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; யாழ்.உதயன் பத்திரிகை அலுவலகத்தில் நன்கு திட்ட மிடப்பட்டு மேற்கொள்ளப் பட்ட தாக்குதல் அண்மைக் காலத்தில் ஜனநாயகத்தின் முக்கிய வெளிப்பாடாகிய கருத்துச் சுதந்திரத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மிக மோச மான தாக்குதலாகக் கருதுகி றோம்.

அத்துடன் சில நாள்களுக்கு முன் கிளிநொச்சியில் உள்ள உதயன் உப அலுவலகத்தின் மீதும் அங்கு பணியாற்றியோ ரின் மீதும் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

பல தடவைகள் இந்தப் பத்திரிகை வெளியிடுவதை நிறுத்தும்படி அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக உதயன் அலுவல கம் மீதும் பணியாளர்கள் மீதும் தாக்குதல்கள் கடந்த சில வருடங்களாக நடை பெற்றதுடன் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். ஆனால் தாக்குதல் சம்பவங் களுடன் தொடர்புடையவர் கள் எவரும் கைது செய்யப் படவில்லை.

கருத்து சுதந்திரம் இலங்கை யில் மிக மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ளது என்பதற்கு இந்தச் சம்பவங்கள் உதாரண மாகும். அரசு, தமது மனித உரிமை மீறல் தொடர்பான செயற்பாடுகளை செய்திக ளாக வெளியிடுவதையோ விமர்சிக்கப்படுவதையோ விரும்பவில்லை.

நில ஆக்கிரமிப்புக்கு எதிரான அமைதியான போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், கைது செய்யப்பட்டு காணாமற் போனவரது உறவுகள் கொழும்பு செல்ல முனைந்த போது தடுக்கப்பட்டமை, பல்கலைக் கழக மாணவர்களது அமைதி வழிப் போராட்டம் வன்முறை யால் அடக்கப்பட்டமை போன் றவை வடபகுதிப் பத்திரிகை களில் படங்களுடன் வெளி வந்தமைக்காக இந்தப் பத்திரி கையும் பணியாளர்களும் குறிவைத்து தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம். தாக்குதல்களின் சூத்திரதாரி களையும் அவற்றை நடத்திய வர்களையும் சட்டத்தின் முன் கொண்டுவரும் முயற்சிகளில் எதுவித முன்னேற்றமும் இது வரை ஏற்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அரசு இந்த விடயங்களில் தாம் நீதியுடன் செயற்படுகின் றது என்றால் நம்பகத் தன் மையான விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என் பதை வலியுறுத்துகிறோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ந-14)



'சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவ சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற புத்தாண்டு கைவிசேட நிகழ்வின் போது.... (ந-ரி)

# பளை பஸ் நிலையம் அருகில் வசதிகளுடன் கடைத்தொகுதி

வலி.தென்மேற்கு,ஏப்.22

பொதுமக்களின் வசதி கருதி யும் வர்த்தகர்களின் நலன் கருதியும் பளை பஸ் நிலை யத்துக்கு அருகில் 'புறநெகும' திட்டத்தின் கீழ் சகல வசதி களுடன் பத்துக் கடைகள் அடங்கிய கடைத்தொகுதி யொன்று விரைவில் அமைக் கப்படவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர் சூழ்நிலையைத் தொடர்ந்து பளை பஸ் நிலையத்துக்கு அருகிலிருந்த பிரதேச சபைக் குச் சொந்தமான அனைத்துக் கடைகளும் இயங்க முடி யாதவாறு பலத்த சேதத்துக்குள் ளாகின. இதனால் இந்தப் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த மக்கள் தங்கள் தேவைக ளைப் பூர்த்தி செய்வதற்குத் தூர இடங்களை நாடவேண் டிய நிலைக்குள்ளாகினார்கள். மக்கள் இந்த நிலைப்பாடு குறித்துக் கவனம் செலுத்தி யுள்ள பிரதேச சபை, பஸ் நிலை யத்துக்கு அருகில் 'புறநெகும' திட்டத்தின் கீழ் பல மில்லி யன் ரூபா செலவில் பத்துக் கடைகள் அடங்கிய கடைத் தொகுதியை அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண் டுள்ளது. இதற்கான தீர்மா னம் பிரதேச சபையின் மாதாந் தக் கூட்டத்தில் நிறைவேற் றப்பட்டுள்ளது. (வ-115)

# ஆள்பதிவு திணைக்கள அலுவலகம் இன்று வவுனியாவில் திறப்பு

ஆள்பதிவுத் திணைக்களத்தின் வடமாகாணத்துக்கான கிளை அலுவலகம் ஒன்று நாளை திங்கட்கிழமை வவுனியாவில் திறந்து வைக்கப்படவுள்ளது. வவுனியா மாவட்டச் செயலகத்தால், இதற்கென அமைக் கப்பட்டுள்ள விசேட கட்டடத் தொகுதி யிலேயே இந்த அலு வலகம் திறந்து வைக் கப்படவுள்ளது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு மற்றும் யாழ்ப் பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மக்களின் நலன் கருதி இந்த அலுவல கம் திறந்து வைக்கப் படவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

புதிய ஆள் அடையாள அட்டை பெறுதல், அடையாள அட்டை களைப் புதுப்பித்தல் உட்பட சகல பணி களையும் இந்த அலு வலகத்தின் மூலம் மேற்கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வவு னியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந் துல ஹரிச்சந்திர தலை மையில் இடம்பெற வுள்ள இந்த நிகழ்வில் ஆள்பதிவுத் திணைக் கள ஆணையாளர் இந்த அலுவலகத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஆள்பதிவுத் திணைக்கள உயர் அதிகாரி கள், வவுனியா மாவட்டச் செய லக அதிகாரிகள், பிரதேச செய லர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-400)

## கருத்தரங்கு

நெல்லியடி, ஏப்.22

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட் பட்ட பாடசாலை அதி பர்களுக்கு 'ரிஎஸ்ஈபி' திட்டத்தின் கீழ் பாட சாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி சம்பந்த மான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடை பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற வுள்ளது. (ந-ரி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
06.04.1943

விண்ணில்
23.03.2013



அமரர் பொன்னையா
இராசரத்தினம்

கடந்த (23.03.2013) எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மறைவு கேட்டு எமக்கு நேரிலும் தொலைபேசியிலும், மரணச் சடங்கிலும் பங்கு பற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (22.04.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோ

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(27841)(6.11)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்ந்தது
05*05*1931

உதிர்ந்தது
03*05*2012

அமரர்
தாமோதரம்பிள்ளை
கந்தவனம்

திதி: சதுர்த்தசி
(22.04.2013)

வாழ்க்கை எனும் சுடர் இடைவிடாது பிரகாசிக்க
நாக்கை அடக்கி வாழ்வதே நற்பண்பென
உறவின் உயிரோட்டமாய் எங்களை வழிநடத்திய
உயிரான உறவாம் எம் அன்பு அப்பாவின்
முதலாம் ஆண்டு நினைவுகள்.

(27842)(10.6)

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நல்லம்மா தீபத்தின் நெஞ்சைவிட்டகலா ஓர் ஆண்டு நினைவு அலைகள்



அமரர் குமாரசாமி
நல்லம்மா

(வில்லூன்றிப் பிள்ளையார்
கோயிலடி, யாழ்ப்பாணம்).

திதி: 22.04.2013

பூவுலகில்
12.11.1936

சிவமயத்தில்
03.05.2012

அம்மா! மறந்திடுமா உங்கள் துயரம்
அன்புதனை அருவியாக்கி, பண்புதனை சிகரமாக்கி
பார்போற்ற வாழ்ந்திட்ட பாசமிகு அன்னையே!

அம்மா பூந்தோட்டத்தில் தேன் கூடு போல்
அம்மாவுடன் இருந்த வேளை
தீ ஒன்று கொளுந்துவிட்டான் கொடிய இயமனும்
வாழ்வில் ஒளிவிளக்கு! நின்னை ஏன் பறித்தான்?
அம்மா! அம்மா! தாங்கொணாத் துரயத்தில் தத்தளிக்கும்
எங்களுக்கு தங்கள் நினைவுகளே தரணியில் போதும்
கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டோடிட .... - நீங்கள்
கடவுள் அடி சேர்ந்துவிட்டீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(36272) (45.6)

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
(துரைராசா வளர்மதி).

## விஞ்ஞான பீட புதுமுக மாணவருக்கு இன்று வரவேற்பு

யாழ்ப்பாணம், ஏப்.22
யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கான புதிய (2011/2012) கல்வியாண்டுக்கான புதுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வும், வழிகாட்டல் நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல்துறை மண்டபத்தில் இடம்பெறும்.

அதற்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் காலை 8 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

பூசையில் அனைத்து புதுமுக மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் அறிவித்திருக்கிறது. (ஒ)

# மரண அறிவித்தல்

## கணேசு கனகரத்தினம்



அனலைதீவை பிறப்பிடமாகவும், இல.93, I-10 உருத்திரபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு கனகரத்தினம் 20.04.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசு-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருளம்பலம்-இராசலட்சுமி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலாதேவியின் அன்புக் கணவரும், பிரகலதா (யாழ்ப்பாணம்), பிரமிளா (ஜேர்மனி), பிரியதர்சினி (உருத்திரபுரம்), பிரதாபன் (உருத்திரபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தயாளன் சுரேஸ்குமார் (ஜேர்மனி), சபாநாதன் (கொள்வனவு உத்தியோ கத்தர் கரைச்சி தெற்கு பல.நோ.கூட்டுறவு சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனும், கிசாந்தன், பவுசிகன், கோபிகா, அனோஜன், டினோஜா (ஜேர்மனி), விதுசன், சகிரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2013) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உருத்திரபுரம் பொது மயானத்துக்கு தகனக் கிரியைக் காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.93, I-10 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.
(26288) (10,6)

தகவல்:
குடும்பத்தினர்.

# அறிவித்தல்

22.03.2013 ஆம் திகதிய பணிப்பாளர் சபை கூட்ட 10 ஆம் இலக்க தீர்மானத்திற்கமைய இதுவரையில் பாரவூர்திச் சங்கத்தில் 42 உரிமையாளர்கள் மட்டும் அங்கத்தவர்களாக தம்மை பதிவு செய்துள்ளனர். பழைய அங்கத்தவர்கள் மீண்டும் தம்மை சங்கத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டுமாயின் தங்களிடம் பழைய அங்கத்துவ பற்றுச் சிட்டையிருப்பின் அதை தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்து அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொள்ளலாம். இல்லை எனில் சமாதான நீதிவான் அவர்களின் மூலம் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பிக்கும் வகையில் சத்தியக் கடதாசியை முடித்து சங்கத்தில் ஒப்படைக்கலாம். இதுவரை சேர்ந்துள்ள அங்கத்தவர்களின் பட்டியல் வவுனியா லொறிச் சேவைகள் சங்கத்திலும், பாரவூர்திச் சங்கத்தின் தலைமைச் செயலகத்திலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம். விரைவில் பொதுச்சபை கூடவுள்ளதினால் உரிமையாளர்கள் தங்கள் அங்கத்துவத்தினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

க.சிவசுப்பிரமணியம் தலைவர்
வட பிராந்திய பாரவூர்தி உரிமையாளர்
கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.
(C/9334)
(6.11)

# ஊர்காவற்றுறை மக்கள் பங்களிப்பில் அந்தப் பகுதிக்கு 150 மின் விளக்குகள்

வலி.தென்மேற்கு,ஏப்.22

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மக்களின் பங்களிப்புடன் 150 வீதி விளக்குகள் பொருத்தப் படவுள்ளன. இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேசத்திலுள்ள வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகள் அனைத்தும் போர்ச் சூழ் நிலை காரணமாக சேதத்துக்குள்ளாகின. இதனால் வீதிகள் இருளில் மூழ்கியிருந்தன.

தற்பொழுது இந்தப் பிரதேசத்தில் மக்கள் நடமாட்டம் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்த வேண்டிய தேவையும், அவசியமும் பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் உள்ளூராட்சிச் சபைகளின் நிதியிலிருந்தே வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. தற்போது சபைகளில் நிலவும் நிதியின்மை காரணமாக பொது மக்களின் பங்களிப்புடன் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் மக்களின் பங்களிப்புடன் 150 மின். விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே பொது மக்களின் பங்களிப்புடன் 140 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-மாலை 6 மணியிலிருந்து அதிகாலை 5 மணி வரை வீதி விளக்குகள் ஒளிர வேண்டுமென்று பிரதேச சபையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும் இரவு 10 மணியுடன் வீதி விளக்குகள் அனைத்தும் அணைக்கப்படுகின்றன.

## 4 மின் மோட்டர்கள் திருடிய நபர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஏப்.22
நீரிறைக்கும் நான்கு மின் மோட்டார்களைத் திருடிய குற்றச்சாட்டில் யாழ். ஐந்து சந்தியைச் சேர்ந்த ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து நான்கு மின் மோட்டார்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். அவருக்கு எதிராக மின்மோட்டார் திருட்டுத் தொடர்பான 9 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க பிரஸ்தாபநபர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு தொடர் விசாரணைக்காக பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார்.(ஒ-4)

## வரி விழிப்பூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.22
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி விழிப் பூட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமை பருத்தித்துறை சிவன் கோயில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக் களத் தின் யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி அறிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் நிர்வகிக் கப்படும் பிரதான வரிகளான வருமானவரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பெறுமதி சேர்வரி மற்றும் முத்திரை தீர்வை போன்றவற்றுக்கு தெளிவான விளக்கங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாதசுந்தரம் கோணேஸ்வரி



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாதசுந்தரம் கோணேஸ்வரி நேற்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், அன்னபூரணம், சொர்ணாம்பிகை, குலசிங்கம் மற்றும் பொன்னம்மா, நகுலாம்பிகை, கந்தலிங்கம், சிவநாதன், சந்திரா, தேவராணி, தரும்ராணி, செல்வநாயகி, ஜானகி ஆகியோரின் அருமைச் சகோதரியும், மலேசியா பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் மற்றும் சிவபாக்கியம் காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனி யும் சிவாஸ்கரன் (கணினி பொறியியலாளர், யாழ் பல்கலைக்கழகம்), ஸ்ரீகரன் (UNHCR) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவரஞ்சினி (சிரேஷ்ட விரிவுரையாளர், முகாமைத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்), ஸ்ரீரஞ்சினி (பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகி யோரின் அருமை மாமியாரும், தசிகரன், ரிசிகரன், வைஷ்ணவி, லக்ஷயா, மானுஷா, சுபிட்ஷா, நிதுசகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2013) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

74/1c, திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில்.
(36275)(6.11)

தகவல்:
குடும்பத்தினர்.


# வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை





- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் அதி விஷேட கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- மருந்து பொருட்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- உங்கள் வீடுகளிலிருந்தவாறே பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம். 3 – 5 நாட்களில் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- குறைந்த நிறையுடைய பொதிகளுக்கும் விஷேட கட்டணச்சலுகை.

15 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

(26290)
வாடிக்கையாளரின் வசதிக்கேற்ப கட்டணத்தெரிவுகள்.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113, 021 222 3536



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு. தில்லையம்பலம் வரதன்

கிளி/முருகானந்தா கல்லூரி அதிபர்
(இலங்கை அதிபர் சேவை 2-II
B.B.A Hons, P.G.D.E Merit, M.Ed Merit, MATE)

எமது உள்ளம் நிறைந்த அதிபர்
**தில்லையம்பலம் வரதன்** அவர்கள்
கொழும்பு (BMICH) இல் கடந்த 3.4.2013 அன்று நடைபெற்ற இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் ஆசிரிய கல்வியில் முதுகலை மாணி பட்டம் (MATE) பெற்றமை எம்மையெல்லாம் பெருமைப்பட வைக்கின்றது.

அதிபர் அவர்கள் மேன்மேலும் கல்வியில் சிறந்து புகழுடன் சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மனதார வாழ்த்தி மகிழ்வடைகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
கரிஸ் ஹோட்டல்,
முல்லை வீதி, பரந்தன்.
கற்பகம் இன்சுவையகம்
A9 சாலை, கிளிநொச்சி.

(26290)(10,6)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் கல்வி கற்று கடந்த 2012 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி மாவட்ட மட்டத்தில் முன்னணிப் பெறுபேறு பெற்ற



செல்வி சின்ராசா தனஞ்சிகா
9A






செல்வி பாலச்சந்திரன் விதுஷா
8A, B

ஆகியோரையும் மற்றும் சிறந்த பெறுபேறு பெற்ற சிறீகரன் ரேணுஜா 6A,3B, நாகேந்திரராஜா எழில் 6A,2B,C, சந்திரபாலன் சதுர்ஷன் 6A,2B,S, கேதீஸ்வரன் ஜீவசாந் 6A,2B,S, ஞானசேகரம் தருஷன் 5A, 2B,S, ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
(C/9355)(10,6)

# நல்லிணக்கத்தைக் குழப்புவதற்கே மதத் தலங்கள் மீது தாக்குதல்

## அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம்

மன்னார்,ஏப்.22

மதத்துவேச செயல்கள் ஒருபோதும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிடாது. எனவே மதத் தலங்கள் மீதும், வரலாற்றுச் சின்னங்கள் மீதும் திட்டமிட்ட தாக்குதல்கள் இடம்பெறுவதை அரசு உடனடியாகத் தடுக்க வேண்டும். அத்துடன் பாதுகாப்பைக் காரணம் காட்டி வழிபாடு நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ள ஆலயங்களை மீளத் திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளது அகில இலங்கை இந்து மாமன்றம்.

மன்னார் மாந்தை மேற்குப் பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம், திருச்சொரூபம் மீதான தாக்குதல்களைக் கண்டித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தில் முருங்கன் கிராமத்திலுள்ள கத்தோலிக்க மற்றும் மெதடிஸ்த ஆலயங்களினுள் இனந்தெரியாத குழுவினர் புகுந்து, அங்கிருந்த பூசைப்பொருள்கள் மற்றும் உடைமைகளைச் சேதப்படுத்தியுள்ளதாக இன்றைய பத்திரிகை ஒன்றில் வெளியாகி இருக்கும் செய்தியைப் பார்த்து அகில இலங்கை இந்து மாமான்றம் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றது. சமீப காலமாக இலங்கையின் பல பகுதிகளிலும் சிறுபான்மை மக்களின் மதங்களைச் சார்ந்த வணக்கத்தலங்களைச் சேதப்படுத்துதல், அங்குள்ள விக்கிரகங்களை களவாடுதல் அல்லது அழித்தல் என்பன சாதாரண நிகழ்வாகி விட்டன. இவ்வாறான இழிச்செயல்கள் குறித்த மதத்தவரையும் அவர்களின் மத நம்பிக்கைகளையும் எவ்வாறு புண்படுத்தும் என்பதை இதில் ஈடுபடுவோர் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

கடந்த காலங்களில் மன்னார், நானாட்டான் பிரதேசத்தில் உள்ள இரட்டைக்குளம் முத்துமாரி அம்மன் கோயில், முல்லைத்தீவு கொக்கிளாய் பிள்ளையார் ஆலயம், தம்புள்ளையிலுள்ள பள்ளிவாசல், கோப்பாய் கண்ணகி அம்மன் கோயில் என்பன சேதமாக்கப்பட்டமை ஒரு சில உதாரணங்களாகும்.

தாக்குதலில் ஈடுபடுவோர் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவுமில்லை, வேறு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவுமில்லை என்பது வேதனையாகவுள்ளது.

மதத் துவேசச் செயல்கள் இன நல்லிணக்கத்தை ஒருபோதும் ஏற்படுத்தாது. மாறாக இனங்களுக்கிடையே பிளவுகளை வலுப்படுத்தும். இதனை அரசு உணர்ந்து தகுந்த சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் இதில் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன்னால் முன்னிறுத்தி தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என் அகில இலங்கை இந்து மாமன்றம் அரசைக் கேட்டுக்கொள் வதுடன் மதவிரோதச் செயல்களுக்குத் தனது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது.

பௌத்த மதத்தைப் போற்றுகிறோம் என்று சொல்லப்படுகின்ற ஒரு நாட்டில் புத்த பிரானின் போதனைகளின் வழிநின்று இடம்பெறும் இவ்வாறான அதர்ம நிகழ்வுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேநேரத்தில் பாதுகாப்பு வலயம் என்று கூறிக்கொண்டு திறக்கவிடப்படாத ஆலயங்கள் உட்பட சகல ஆலயங்களிலும் ஒழுங்காகப் பூசைகள் நடக்க ஆவன செய்யப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி அதற்குத் தேவையான ஆதரவும் உதவிகளும் வழங்க அகில இலங்கை இந்து மாமன்றம் என்றும் தயாராக இருக்கின்றது என்று மீண்டும் அறிவிக்க விரும்புகிறோம்- என்றுள்ளது. (ஐ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரி கேட்ரூட் நிக்கலஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை- யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தமிழ் பாடசாலை)



யாழ்ப்பாணம், சுண்டுக்குளியை சொந்த இட்மாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி கேட்ரூட் நிக்கலஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியை- யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தமிழ் பாடசாலை) கடந்த 19.04.2013 வியாழக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சவரிமுத்து - அந்தோனியா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லப்பாக்கியம் தம்பதியரின் பாச மிகு மருமகளும், காலஞ்சென்ற நடராஜா நிக்கலஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரேசா, ஞானபிரகாசம் மற்றும் ஜோசபின், செல்வராணி, காலஞ்சென்ற பெனடிக்ற் ஆகியோரின் அருமைச் சகோதரியும், மனுவேல்பிள்ளை, இராசமலர், செல்வநாயகம், பர்லசிங்கம், ஜெயமலர் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், DR.ரூபகுமார் (U.K), சுகுணா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும், ஊஷா, ஜெயரட்ணம் ஆகியோரின் பாசமிகு மாமியும், சுஜய், எம்மா, ஜோய், சுஜேனி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.04.2013) திங்கட்கிழமை பிறபகல் 3.30 மணிக்கு W.S. பெர்னாண்டோ மலர் சாலையிலிருந்து (134, சிலாபம் வீதி, நீர்கொழும்பு ஆவே மரியா மருத்துவமனை அருகில்) நீர் கொழும்பு புனித செபஸ்தியார் தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் நீர்கொழும்பு பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 862 6796.

(36281) (45.6.7)

### திருமதி ஆறுமுகம் மகேஸ்வரி



மாசார், பளையைப் பிறப்பிடமாகவும், பத்தன் மோட்டை, கண்டாவளையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகேஸ்வரி நேற்று முன்தினம் (20.04. 2013) சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், சின்னத்தம்பி ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், சறோஜாதேவி, தேவராஜா (அஞ்சல் ஊழியர் உப தபாலகம், தருமபுரம்), தவராஜா (லண்டன்), தவராணி (ஆசிரியை, பரந்தன் இந்து ம.வி) தயாளினி (சுவிஸ்), றாஜினி (லண்டன்), சுபாஸ்கரன் (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு, ஊடகவியலாளர், வவுனியா), சுபாஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சபாரஞ்சன், யோகநந்தினி (ஆசிரியை, பிரமந்தனாறு ம.வி), றஞ்சிதமலர் (லண்டன்), சிவநேசர் (அதிபர், பரந்தன் இந்து ம.வி), சிவரூபன் (சுவிஸ்), பிரபாகரன் (லண்டன்), கிருஜா (உளவளத்துணையாளர்- பிரதேச செயலகம், வவுனியா), மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், எழிலோன், சாம்பவி, பிரணவி, அபி ஷன், அன்ஷி, சுஜந்தி, சஷ்டிகன், அரவிந்தை, பிரியந், சத்யா, யாதவி, இனியவன், அட்சயா, ஆதித்யா, மாதுளா, மகீஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00மணிக்கு தர்மலிங்கம் ஒழுங்கை கல்வியியற் கல்லூரி வீதி, பூந்தோட்டம், வவுனியாவில் உள்ள மகன் சுபாஸ்கரனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தர்மலிங்கம் ஒழுங்கை,
கல்வியியற்கல்லூரி வீதி,
பூந்தோட்டம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
077 8862546
077 5528687

(26236) (10.6.7)

## 15 பாடசாலைகளின்

# ஆசிரியர் மாணவருக்கு சீருடைகள் வழங்கல்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகளின் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு வரணி 52 ஆவது படையணி கட்டளைத் தலைமையகத்தில் நடைபெறும்.

52 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரி.ஏ.டபிள்யூ அனுர சுதசிங்க தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்து கொள்வார். (ந-9)

## மண்டலாபிஷேகம்

நெடுங்கேணி ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் ஆலய 12 ஆம் நாள் மண்டலாபிஷேக நிறைவு நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. ஆலயத்தில் கடந்த 11 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-435)

### நீங்கா நினைவுகளுடன் 2ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் ஸ்ரீசுரேந்திரன் சரண்ஜன்

(முன்னாள் மாணவன், சென்ஜோன்ஸ், அச்சுவேலி மத்திய கல்லூரி)



புண்பட்ட காயங்கள் தானாக
ஆறிவிடும் உன்னால்
வலிகண்ட நம் இதயம்
ஆறுதில்லையே!
காலங்கள் பல கடந்தாலும்
என்றும் உன் நினைவுடன்
நாங்கள்.....

அன்னை மடியில் 13*07*1995
அரன் அடியில் 14*04*2011

நீங்கா நினைவுகளுடன்
என்றும்
நீ எங்களுடன்
திரு.திருமதி சி. ஸ்ரீசுரேந்திரன்.

பாரதி வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.

(36280)(6)

### பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் - 2013

மு/ குமுழமுனை மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமானது நாளை (23.04.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பிப்பதோடு எமது வித்தியாலயத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

செயலாளர், பழைய மாணவர் சங்கம், குமுழமுனை ம.வி.

மேலதிக விபரங்களுக்கு:
0773698254 (பொருளாளர்), 0778543887 (செயலாளர்),
0779362643 (அதிபர், K.M.V.) (காலகாந்தன்)

(சி/9347) (2.6.7)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஏப்.22

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2மணிக்குவித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரவதனா இலங்கநாதன்



பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரவதனா இலங்கநாதன் நேற்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராசையா இலங்கநாதன் (ஓய்வுபெற்ற மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் -யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்துரை - தங்கரட்ணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான இராசையா - அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சதீஷ்குமார், சபேசன், சுஷானி, அஜந்தன், கோமளா(கோமி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜோதினி, தர்சினி, மதன், சியாமளி, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் கனகலிங்கம், தனபாலசிங்கம்(ராசு, மன்னார்), காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சகுந்தலா, சாந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற அழகரட்ணம் மற்றும் மனோன்மணி(ரீச்சர்), சின்னமணி (ரீச்சர்-கொழும்பு), சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், லக்ஷா, அபிஷா,பிரதீஷன், பீயிஷன், ஜீஷோன், ஜரோஷ், ஹன்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2013) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

102,பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
இ.இலங்கநாதன் (கணவர்)
குடும்பத்தினர்.

(36283) (6)

## கண்ணீர் அஞ்சலி

சித்த மருத்துவர் திருமதி பவளராணி அவர்களின் தாயார்

**திருமதி சிவபாக்கியம் நவரத்தினராசா**

அவர்கள் 17.04.2013 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கம்.

(36287)(6.11)



## நீங்கள் ஓர் ஆங்கில ஆசிரியரா? அல்லது ஆங்கில ஆசிரியராக விரும்புகிறீர்களா?

Spectra skills இல் நடைபெறும் கீழ்வரும் கற்கை நெறிகளை பூர்த்தி செய்வதன் மூலம் உங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ள முடியும்.

- The Teaching of English to young Learners (TEYL)
- Associate Diploma part I & Part II

இக் கற்கை நெறிகளுக்காக பின்வரும் அடிப்படையில் புலமைப் பரிசில்கள் காத்திருக்கின்றன.

A/L English A Pass 20% Discount
B Pass 15% Discount
C Pass 10% Discount
O/L English A Pass 10% Discount
B Pass 5% Discount
*School teachers 10% Discount*

ஆரம்பம் 28th April 2013

தொடர்பு:
Spectra Skills
19, Stanley Road,
(People's Bank 2nd Floor) Jaffna. (36284)(6.11)
Tel: 021 222 1422
021 222 1423



## நீங்கா நினைவுகளுடன்

5ஆம் ஆண்டு 16 ஆம் ஆண்டு





கனகரத்தினம் செல்வராஜா செல்வராஜா பேபிசரோஜா

04.06.1944 ← தோற்றம் → 03.07.1954
11.04.2008 ← மறைவு → 01.01.1997
ஏகாதசி ← திதி → ஸப்தமி

*குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலத்தே மிளிர்ந்தோரே*
*கூர்அறிவு கொண்டோராய் எமையென்றும் வளர்த்தவரே*
*பாரினிலே பண்புயர் தெய்வங்களாய் திகழ்ந்தோரே*
*பல்லாண்டு சென்றிடினும் மறவோமே உம்மை*
*சாந்தி!*

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு.

சி. சஜிந்திரன்
(பெறாமகன்)


# கோப்பாய் பிரதேசத்தில் விரைவில் மீன்சந்தை

## வலி. கிழக்குப் பிரதேச சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.22

வலி. கிழக்குப் பிரதேச சபை கோப்பாய் பிரதேசத்தில் விரைவில் மீன்சந்தை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் மீன் விற்பனைச் சந்தை ஒன்று இல்லாமையால் பிரதேச மக்கள் கடலுணவு வகைகளை தூர இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் எடுத்து கோப்பாய் சந்திக்கு அருகில் இந்த மீன் சந்தைக்கான கட்டடத்தை அமைக்க சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தற்போது கிருஷ்ணன் கோயில் சந்திக்கு அருகாமையில் வேம்படி வீதியோரமாக வைத்து சில மீன் வியாபாரிகள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதானவீதியில் மீன் விற்பனை சந்தைக்கட்டடம் ஒன்றை அமைப்பதன் மூலம் கோப்பாய், நீர்வேலி போன்ற பகுதிகளை சேர்ந்த மக்கள் தூர இடங்களுக்கு மீன் வாங்கச் செல்வதை தவிர்க்க முடியும் என்றும் சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(ம-17)


## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் வசிக்கும் உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு பணிப்பெண் தேவை.

குறிப்பு: தங்கி இருந்து பணியாற்றக் கூடியவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 967 2613

(36289)(6.11)



## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் சிவபாக்கியம்



சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவபாக்கியம் 20.04.2013 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் மகளும் கந்தையா - தங்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையா ஆறுமுகம் அவர்களின் அன்புமனைவியும் நித்தியானந்தம், அபூர்வ சிந்தாமணி, வையந்திமாலா, தர்மகுலசிங்கம், இந்திராணி, தயாபரசிங்கம், பராபரசிங்கம், குணபூபதி, சகுந்தலாதேவி, மன்மதராஜன், ராஜகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் நித்தியானந்தம், யுககுலராஜா, துரைசிங்கம், பாலசந்திரன், திவாகரன், றஞ்சினிதேவி, புஸ்பராணி, சந்திரமதி, இராஜகுமாரி, புஸ்பலோஜினி, கிரிஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பராஜசிங்கம், இரத்தினசிங்கம், சபாரட்ணம், தனபாக்கியம், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரவீணா, பிருந்தன், பிரஷா, நிஷா, டேமலோஜினி, ஐங்கரன், இராஜகாந்தன், றஜனிகாந்தன், இராஜசோபனா, விஜயகாந்தன், கமலகாந்தன், விஜயசோபனா, தர்சினி, யாழினி, நந்தினி, தேவகி, கிரிஜா, ஹேமா, ஜெயசிங்கம், ஜெயராணி, சயந்தன், தாரணி, மரியதர்சன், அஜந்தன்ராஜ், ஜோனாதன், கிசாந்தன், கர்சிகா, அனுசாந், திருஷாந்தி, திருசன், பிரவின், அஜய், அஸ்விகா, அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுவிளான் கிராயிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.நித்தியானந்தம் (மருமகன்),
நா.பாலச்சந்திரன்.

***லோட்டன் றோட்,***
***மானிப்பாய்.***

(36264) (45. 6)



## 'உதயன்' இணைய வானொலியின் ஓராண்டு பூர்த்தியினை முன்னிட்டு மாபெரும் கலை, இலக்கிய போட்டிகள்

### கவிதை, சிறுகதை, வானொலி நாடகம், நேர்காணல், ஆக்கப் பாடல்

ஆகிய துறைகளில் ஆக்கம் பிரதிவடிவமாகவும், ஒலிவடிவமாகவும் நடத்தப்படவுள்ளன.

| | |
|---|---|
| கவிதைகள் | (ஆக்கப்பிரதி) எழுத்துத் தாளில் 3பக்கத்துக்கு குறையாமலும் 4 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஒலிவடிவம்) 15 நிமிடத்துக்கு குறையாமலும் 20 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| சிறுகதை | (ஆக்கப்பிரதி) 4 பக்கத்துக்கு குறையாமலும் 5 பங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஒலிவடிவம்) 15 நிமிடத்துக்கு குறையாமலும் 20 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| வானொலி நாடகம் | (ஆக்கப்பிரதி) எழுத்துத்தாளில் 12 பக்கத்துக்கு குறையாமலும் 13 பக்கத்துக்கு மேற்படாமலும் அமையவேண்டும். (ஒலிவடிவம்) பாத்திரங்களின் நடிப்பு, இசையுடன் 20 நிமிடத்துக்குட்படாமலும் 25 நிமிடத்துக்கு மேற்பட மாலும் இருத்தல் வேண்டும். |
| நேர்காணல் | (ஒலிவடிவம்) 15 நிமிடத்துக்குட்படாமலும் 20 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| ஆக்கப் பாடல் | (ஒலிவடிவம்) 5 நிமிடத்துக்குட்படாமலும் 7 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும். |

### போட்டிகள்:

பாடசாலை மட்டத்திலும், சமூகமட்டத்திலும் இருபிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

☞ ஒருவர் எத்தனை பிரதிகளும் அனுப்பலாம்

☞ உங்கள் ஆக்கங்கள் அனைத்தையும் ஏப்ரல் **25.2013** இக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவையுங்கள்

### அனுப்பவேண்டிய முகவரி:

1. அஞ்சல் முகவரி:
**Online Uthayan**
**இலக்கம்: 357,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

2. மின்னஞ்சல்
**radio@uthayan.com**


**மேலதிக விவரங்களுக்கு எமது கலையக தொலைபேசி இலக்கம் 021 567 2247 உடன் தொடர்புகொள்ளவும்.**

ஒவ்வொரு போட்டியிலும் முதலாம், 2ஆம், 3ஆம் இடத்தினை பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(சி/9358) (45.6.7)

ஸ்ரீ செகராஜசேகரப் பிள்ளையார் துணை

# இணுவில் ஸ்ரீ செகராஜசேகரப் பிள்ளையார் சித்திரத்தேர் வெள்ளோட்டம்



இன்று (22.04.2013)
திங்கட்கிழமை
நண்பகல் 12 மணிக்கு
சித்திரத்தேர்
வெள்ளோட்டம்
நடைபெறவுள்ளது.

அடியார்கள்
யாவரும்
திரண்டு வந்து
செகராஜசேகரப்
பிள்ளையார் ஆலய
முருகனுக்காக
உருவாக்கிய
சித்திரத்தேரைக் கண்டு
மகிழ்ந்து வாழ்த்தி
இறைவனின் ஆசிகளைப்
பெற்றுக் கொள்ளுமாறு
கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
3629 தர்மகர்த்தா.

## மரண அறிவித்தல்



திருமதி
**நாகரத்தினம் கனகசபை**

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி நாகரத்தினம் கனகசபை நேற்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபையின் அன்பு மனைவியும் ஸ்ரீபதி, ஜெயபதி ஆகியோரின் அன்புத் தாயும் விக்னேஸ்வரியின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2013) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க.ஸ்ரீபதி (மகன்)
கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில்
மேற்கு,
கோண்டாவில்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**வேலுப்பிள்ளை கந்தையா**



(இளைப்பாறிய அதிபர் யா/மகாஜனா கல்லூரி, தெல்லிப்பளை) திதி 22.04.2013

அன்னை மடியில்
25.11.1925

ஆண்டவன் அடியில்
02.05.2012

*கண்முன்னே நீங்கள் வாழ்ந்த காலங்கள்*
*கனவாகி போனதுவோ*
*அன்புடன் அறிவுரைகள் பலகூறி எமக்கெல்லாம்*
*வழிகாட்டியாக இருந்த எங்கள் அன்புத் தெய்வமே*
*மண்ணில் நாம் உள்ளவரை மறந்திடாது*
*உங்கள் நினைவு*

உடையார் வளவு,
கன்னாகம். (36292)(9.14) குடும்பத்தினர்.

## Tuition

By a Retired graduate English Teacher. Home visiting preferable
Contact- 0773815579

## வேலைக்கு ஆள் தேவை

கணினி தட்டெழுத்தில் அனுபவமுள்ள,
பழக விரும்பும் பெண் பிள்ளைகள்
தேவை. நேரில் வரவும்.
நாளை- 9.30- 12.30 புதன் 9.30- 12.30
**தொடர்பு- அபிஷேக் மல்ரி ஸ்பொட்**
**இராமநாதன் கல்லூரி முன்பாக,**
**மருதனார்மடம். 0773063161,**
**0779005856, 0718565540**

## கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை அதிபரின் மாமியும்*
*பாடசாலை ஆசிரியை*
திருமதி.த.சிவநேசன் *அவர்களின்*
*அன்புத் தாயுமான*
**திருமதி ஆறுமுகம் மகேஸ்வரி**
*அவர்களின் திடீர் மறைவினால்*
*துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா*
*சாந்திக்காக இறைவனைப்*
*பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீர்க்*
*காணிக்கையைச் செலுத்துகின்றோம்.*

பாடசாலைச் சமூகம்,
பரந்தன் இந்து மகா வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்



### *திருமதி கனகேஸ்வரி தம்பிராசா*

கோப்பாய் தெற்கு, டச்சுவீதி இருபாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி தம்பிராசா நேற்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை -ஆச்சிப்பிள்ளை தம்பதியிரின் மகளும், வேலுப்பிள்ளை -கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வேலுப்பிள்ளை தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைராசா, ஞானமணி, காலஞ்சென்ற நாகேஸ்வரி, வேதநாயகம் (இத்தாலி), யோகம்மா, யோகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மனோன்மனி, விசுவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சிவகுமார், சிவமலர், சிவனேசன், உதயமலர், கிருஷ்ணகுமார், கிருஷ்ணகுமாரி, டினேஸ்குமார் (தீபன், மதுரா நகைமாடம்) ஆகியோரின் பாசமிகு தாயும், தேவகுமார், இரஞ்சினிதேவி, ஜீவதயாபரன், சித்ரா, தயாபரன், சுவர்ணா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை செக்கடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு, டச்சுவீதி, இருபாலை. தகவல்: குடும்பத்தினர்.

## வீடு விற்பனைக்கு

பிரதான வீதி சங்கானையில் 5 பரப்பு காணியும்
வீடும் விற்பனைக்கு உண்டு. (அஞ்சல்
அலுவலகத்துக்கும் சேச் றோட்டுக்கும் இடையில்)
தொடர்பு- 0776257905
(36294)(9.14)

## தசாக கிரஹயக்ஞ அழைப்பு

நிகழும் நந்தன வருடம் பங்குனி மாதம் 31ஆம் நாள்
(13.04.2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த

### *திருமதி கணேசக்குருக்கள் மீனாட்சி அம்மா*

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்கள் நடைபெறும்.

- 22.04.2013 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு -தசாகம்
- 23.04.2013 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு - ஏகோதிஸ்டம் மாசிகம்
- 24.04.2013 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு -சபிண்டீகரணம்
- 25.04.2013 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு - கிருவஹயக்ஞம், நண்பகல் 12.00 மணிக்கு சமாராதனை

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அம்மாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் சமாராதனையிலும் அதனைத் தொடர்ந்து 26.04.2013 வெள்ளிக்கிழமை மகேஸ்வர பூசையிலும் (ஆலய அன்னதான மடத்தில்) கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோவிற்கடவை பிள்ளையார்
கோயிலடி. (சி/9362)(9.14.16)
இங்ஙனம்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினபூபதி இராமநாதன்

நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த திருமதி இரத்தினபூபதி இராமநாதன் நேற்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை (பிரபல வர்த்தகர்) - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராமநாதனின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும், இரவிகாந்தி, இரத்தினகாந்தி, சத்தியநாதன் (சத்தி), சத்தியகாந்தி, பஞ்சநாதன் (சிவாஜி) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக் கப்படும்.

நந்தாவில்,
கொக்குவில். (சி/9363) (16)
தகவல்:
குடும்பத்தினர்.

### பாலசுந்தரம் பரமேஸ்வரி



தாவடி வடக்கு காளிகோயிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் பரமேஸ்வரி நேற்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசுந்தரத்தின் (செல்வராசா) அன்புத் துணைவியாரும், வசந்தலா தேவி, பாலச்சந்திரன், ஸ்ரீஸ்வரன் (கனடா) காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சசிகலா, கேமலா (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் சுப்பிரமணியம், சின்னராசா, புஸ்பராசா, மகேஸ்வரி ( ஜேர்மனி) சிவமலர், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்

குணரத்தினம் பவானி, தயாநிதி, கருணாகரன், மதிவதனா, நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் , ரபித்தனா, பினுயன், பிருந்தா, தரணிவாசன், நிருஜன், மஹிர்தா, டிலக்ஷிகா, டிருக்ஷிகா, அருஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2013) திங்கட்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
தாவடி வடக்கு, கொக்குவில்.
**தகவல்:** குடும்பத்தினர்
தொ.பே.இல-0213218638

### *கணபதிப்பிள்ளை நடராசா*

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*



வட்டுவத்தை, அல்வாய் கிழக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடராசா நேற்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - வள்ளி அம்மை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சாம்பசிவம், மகேஸ்வரம்பிள்ளை மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.04.2013) நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி/9361) (23-16) தகவல்: குடும்பத்தினர்.

### *சோமு மகாதேவன் (மகான்)*



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமு மகாதேவன் நேற்று (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமு - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரி, சரஸ்வதி, பவளம் மற்றும் தவமணி, பூமணி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ஐயாத்துரை, பசுபதி, இராசரத்தினம் மற்றும் வல்லிபுரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2013) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோயிலடி,
அளவெட்டி கிழக்கு.
021 300 8326 (36298)
தகவல்:
குடும்பத்தினர்.



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அணி. (ற-86)

# தென்மராட்சி வலய சதுரங்க சுற்றுப் போட்டி சாவகச்சேரி இந்து, கொடிகாமம் திருநாவுக்கரசு சம்பியன்களாகத் தெரிவாகின



தென்மராட்சி, ஏப்.22
தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற சதுரங்கச் சுற்றுப் போட்டியின் ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் பெண்கள் பிரிவில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயமும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.

இந்தப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 13 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் 12 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

அடுத்து இடம்பெற்ற 19 வயது ஆண்களுக்கான ஆட்டத்தில் 15 புள்ளிகளைப் பெற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரி முதலாம் இடத்தையும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், வீரசிங்கம் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

அடுத்து நடைபெற்ற 15 வயதுப் பெண்களுக்கான போட்டியில் 12 1/2 புள்ளிகளைப் பெற்று கொடிகாமம் திருநாவுக்கரவு மகா வித்தியாலயம் முதலாமிடத்தையும், 10 1/2 புள்ளிகளைப் பெற்ற விடத்தற்பளை கமலாகிசி மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் 9 1/2 புள்ளிகளைப் பெற்றசாவகச்சேரி இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

19 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் 15 1/2 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 13 1/2 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், விடத்தற்பளை கமலாகிசி வித்தியாலயம் 6 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன என தென்மராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சிவ குமார் தெரிவித்தார். (ற-400-253)

# வலிகாமம் வலய மட்ட பெருவிளையாட்டு முடிவு

யாழ்ப்பாணம்,ஏப்.22
வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட பெரு விளையாட்டுக்களில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு

**மேசைப்பந்தாட்டம்**

★15 வயது ஆண்கள்-
முதலாமிடம்: தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
இரண்டாமிடம்: ஆனைக்கோட்டை றோ.க.வி,
மூன்றாமிடம்: மல்லாகம் மகா வித்தியாலயம்.

★15 வயது பெண்கள்-
முதலாமிடம்: ஆனைக்கோட்டை றோ.க.வி,
இரண்டாமிடம்: தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
மூன்றாமிடம்: சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

★19 வயது ஆண்கள்-
முதலாமிடம்: தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
இரண்டாமிடம்: ஆனைக்கோட்டை றோ.க.வி.
மூன்றாமிடம்: அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

★19 வயது பெண்கள்-
முதலாமிடம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,
இரண்டாமிடம்: அளவெட்டி அருணோதயாக் கல்லூரி,
மூன்றாமிடம்: மல்லாகம் மகா வித்தியாலயம்.

**கிரிக்கெற்**

★19 வயது ஆண்கள்-
முதலாமிடம்: சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
இரண்டாமிடம்: புனித ஹென்றியரசர் கல்லூரி.
மூன்றாமிடம்: வட்டு இந்துக் கல்லூரி.

★19 வயது பெண்கள்-
முதலாமிடம்: சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி.
இரண்டாமிடம்: பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலை,
மூன்றாமிடம்: வட்டு இந்துக் கல்லூரி.

**ஹொக்கி**

★19 வயது ஆண்கள்-
முதலாமிடம்: வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
★இரண்டாமிடம்: தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,
மூன்றாமிடம்: மானிப்பாய் இந்துக் கல்லூரி.

★19 வயது பெண்கள்-
முதலாமிடம்: உடுவில் மகளிர் கல்லூரி,
இரண்டாமிடம்: வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
மூன்றாமிடம்: பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை. (ற-400)

# இறுதியாட்டத்தில் சென். நீக்கிலஸ்

யாழ்ப்பாணம் ஏப் 22
யாழ். பிரதேச செயலகத்திற்கு உட்பட்டபதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

கடந்த வியாழக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென் .நீக்கிளஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவு வரை கோல்கள் எதனையும் பெறத் தவறியமையால் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

(ற-23)

# சென்.அன்ரனிஸ் ஆட்டத்தில் சிக்கியது பாடும்மீன்

யாழ்.நெல்லியடி மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மின்னொளியில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பாடுமீன் அணியை வீழ்த்தி கிண்ணத்தைத் தட்டிச் சென்றது சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி.

இந்த ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியபோது இரு அணிகளும் மிகவும் நிதானத்துடன் விளையாடின. பாடுமீன் அணி வீரர்கள் தமது அணி வீரர்கள் இடையே அருகிலான பந்துப் பரிமாற்றத்தை மேற்கொ்ண்டு மிகவும் நிதானமாக ஆடினர்.

ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனிஸ் அணிக்குக் கிடைத்த நேர் உதை பேற்றுப் பகுதிக்குள் வைத்து பாடுமீன் அணி வீரரின் கைகளில் பட்டது. அதையடுத்துக் கிடைக்கப்பட்ட தண்டனை உதையைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட சென்.அன்ரஸ் வீரர் கலிஸ்ரன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். அதையடுத்து விறுவிறுப்பானது ஆட்டம்.

முன்னிலை பெற்ற உற்சாகத்தில் சென்.அன்ரனிஸ் வீரர்களின் ஆட்டத்தில் வேகம் காணப்பட்டது. ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் வீரர் கலிஸ்ரன் தனக்கு இடதுபுறமாக வந்த பந்தை இலாவகமாகக் கோலாக மாற்றினார்.

அதையடுத்து பாடுமீன் அணியின் ஆட்டம் விறுவிறுப்படைந்தது. அதன்பின்னர் பந்து பாடுமீன் அணியின் வசமே காணப்பட்டது. எப்படியாவது கோல் பெறவேண்டும் என்ற உத்வேகத்துடன் அவர்களின் ஆட்டத்தில் வெளிப்பட்டது. 21 நிமிடத்தில் பாடுமீன் அணி வீரர் டிலீப்பின் கோல் பெறும் முயற்சி சென்.அன்ரனிஸ் கோல் காப்பாளரின் கடின முயற்சியில் தடுக்கப்பட்டது. 27 ஆவது நிமிடத்தில் மயூரன் தனது தலையால் தட்டிக் கொடுத்த பந்தை கோலாக்கத் தவறினர் பாடுமீன் அணியினர்.

இந்தநிலையில் முதற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

அப்போது 2:0 என்ற நிலையில் சென்.அன்ரனிஸ் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியது. அது முதலாம் பாதி ஆட்டம் போன்று நிதானமான ஆட்டமாகக் காணப்படவில்லை. பாடுமீன் அணியினர் மூர்க்கமாக விளையாடினர். அதன்விளைவு, 12 ஆவது நிமிடத்தில் பாடுமீன் அணி வீரர் ஞான பிரதாப்புக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. எனினும் சென்.அன்ரனிஸ் அணியினர் தமது நிதான ஆட்டத்தைக் கைவிடவில்லை.



ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனிஸ் வீரர் 'மதுஷன் தன்னிடம் கிடைத்த பந்தை அருமையான கோலாக மாற்றி தனது அணியின் வெற்றியை உறுதிப் படுத்தினார். தொடர்ந்தும் 24ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் அணி வீரர் கலிஸ்ரன் கோல் ஒன்றைப் பெற சென்.அன்ரனிஸ் அணியின் வெற்றி உறுதியானது.

இறுதியில் 4:0 என்ற கோல் கணக்கில் சென்.அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (ற-422)

## 'ஆலடி ரமேஸ்' வெற்றிக்கிண்ணம்

# அரையிறுதியில் தீபஜோதி

யாழ்ப்பாணம், ஏப்.22
புலோலி மேற்கு திருநாவலர் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் 'ரமேஸ் ஆலடி' வெற்றிக் கிண்ணத்துக்கான 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் தீபஜோதி அணி அரை இறுதிக்குள் நுழைந்தது.

காலிறுதி ஆட்டத்தில் தீபஜோதி அணியை எதிர்த்து நியூபவர் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தீபஜோதி அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது.

தீபஜோதி அணி சார்பாக ஜசிந்தன்-32, சுதர்சன்-19, அருள்-11 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூபவர் அணி பந்துவீச்சில் ராம் 3 இலக்குகளையும், சிலோஜன் 2 இலக்குகளையும், பிரகாஷ், நிபந்தன், மஞ்சு ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூபவர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளை யும் இழந்து 77 ஓட்டங்க ளைப் பெற்றது.

இதில் நியூ பவர் அணி சார்பில் பாலச்சந்திரன்-29, ராம் 14, பிரகாஷ் 8 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் தீபஜோதி அணி சார்பாக கபிலன் 4, மோகன் 3, அயந்தன் 2, நிரோஜன் 1 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனால் இரு அணிகளும் சமமான ஓட்டத்தைப் பெற்றதால் சுப்பர் பந்துப் பரிமாற்றம் நிகழ்ந்தது. இதில் தீபஜோதி அணி 1 இலக்கை இழந்து 10 ஓட்டங்களை பெற்றது.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூபவர் அணி 2 இலக்குகளை இழந்து 2 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தது.

ஆட்டநாயகனாக தீபஜோதி அணியின் சுதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (ற-422)




இந்திய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் முழு உருவ மெழுகு சிலை ஆஸ்திரேலியாவின் சிட்னி கிரிக்கெட் மைதான அருங்காட்சியகத்தில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

# சிம்பாப்வேயின் அதிரடியால் பதுங்கியது பங்களாதேஷ்



பங்களாதேஷுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 335 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது சிம்பாப்வே அணி. அனுபவம் வாய்ந்த இலங்கை அணியே தடுமாறிய பங்களாதேஷ் கிரிக்கெட் அணி சிம்பாப்வேயின் ஆட்டத்தில் நிலைகுலைந்து போனது.

ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நடைபெற்ற இந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் நாணயச் சுழற்றியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

பங்களாதேஷ் பந்து வீச்சாளர்களைத் துவம்சம் செய்த சிம்பாப்வே அணி முதல் இன்னிங்ஸில் 389 ஓட்டங்களைப் பெற்றது. அதில் சிம்பாப்வே அணியின் தலைவர் டெய்லர் 171 ஓட்டங்களைப் பெற்று அசத்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி வெறும் 134 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அதையடுத்து இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய சிம்பாப்வே மூன்றாவது நாள் நிறைவில் 7 இலக்குகள் இழப்புக்கு 187 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. டெய்லர் 81 ஓட்டங்களுடனும், கீகன் மெத் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து ஆடிய இருவரும் நிதானமாக ஆடினர். அணி 222 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை இடைநிறுத்திய சிம்பாப்வே பங்களாதேஷைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. அப்போது டெய்லர் 102 ஓட்டங்களுடனும் மெத் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

477 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமாக இலக்குடன் களமிறங்கியது பங்களாதேஷ் அணி. துடுப்பாட்ட வீரர்கள் பிரகாசிக்கத் தவறினார்கள். இலக்குகள் மளமளவெனச் சரிய 147 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் சுருண்டது. சிம்பாப்வே அணி 335 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக டெய்லர் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் சிம்பாப்வே அணி 1:0 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கிறது. (ற)

# பொறுப்பிலிருந்து விலகினார் வொட்சன்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் துணை அணித் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுவதாக ஷேன் வொட்சன் அறிவித்துள்ளார்.

அண்மையில் இந்திய அணியுடன் நடந்த டெஸ்ட் தொடரின்போது பயிற்சியாளரின் உத்தரவை புறக்கணித்தார் என்று வொட்சன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதையடுத்து மொகாலி டெஸ்ட் போட்டி ஒன்றில் வொட்சன் உட்பட 4 வீரர்கள் நீக்கப்பட்டனர்.

அதையடுத்து உடனடியாக நாடு திரும்பியிருந்த அவர், பின்னர் டெல்லி டெஸ்ட் போட்டியில் பங்கேற்றதுடன் காயம் அடைந்த மைக்கேல் கிளார்க்குக்கு பதிலாக அணித் தலைமைப் பொறுப்பை வகித்தார். தற்போது ஆஸ்திரேலிய அணி அடுத்து இங்கிலாந்துடன் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் மோதவுள்ள நிலையில், துணை அணித் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள வொட்சன் எதிர்காலத்தில் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் மட்டுமே கவனம் செலுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:

''இந்திய டெஸ்ட் தொடர் முடிந்ததுமே, அணித்தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுவது பற்றி தீவிரமாக ஆலோசித்து வந்தேன். இது கடினமான முடிவுதான். எனினும் கூடுதல் பொறுப்பால் எனது ஆட்டத்திறன் பாதிப்பதாக உணர்கிறேன். ஆஸி. அணிக்காக சிறப்பான ஆட்டத்தை கொடுக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். மிகச் சிறந்த டெஸ்ட் வீரராக விளங்க ஆசைப்படுகிறேன். பதவி விலகும் முடிவு குறித்து தேர்வுக்குழு தலைவர் இன்வெராரிடி, அணித்தலைவர் கிளார்க், பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். எனது முடிவை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். இனி ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்துவேன்,'' என்றார் அவர். (ற)


## வெற்றிக்கு காரணம் ஜடேஜா

நடைபெற்று வரும் ஆறாவது ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன் தினம் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, கொல்கத்தாவை வீழ்த்தி 4ஆவது வெற்றியை பெற்றது. இந்த வெற்றிக்கு காரணமாக இருந்த ஜடேஜாவை அணித்தலைவர் டோனி, பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் பாராட்டியுள்ளனர். இது குறித்து டோனி கூறுகையில்,

''எங்களது துடுப்பாட்டம் சிறப்பாக அமையவில்லை. துடுப்பாட்டம் சீரான நிலையில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். கொல்கத்தா அணி முதல் 6 பந்துப் பரி மாற்றங்களில் சிறப்பாகவே துடுப்பெடுத்தாடியது. சில இலக்குகள் விழுந்ததன் மூலம் ஆட்டம் எங்கள் பக்கம் வந்தது. ஜடேஜா துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சிறப்பாக செயல்படுவதுடன் சிறந்த மேட்ச் வின்னராக திகழ்கிறார்- என்றார்.

சென்னை அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் கூறுகையில், ''ஜடேஜாவின் ஆட்டத்தில் மிகுந்த முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது. அவர் சிறந்த மேட்ச் வின்னராக உருவாகி வருகிறார். அவர் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளது '' என்று தெரிவித்தார்.

# சேவாக், மஹேல அதிரடி டெல்லிக்கு முதல் வெற்றி



சேவாக் மற்றும் மஹேல ஜெயவர்த்தனவின் அதிரடி ஆட்டத்தின் மூலம் ஆறாவது ஐ.பி.எல். தொடரில் நேற்று முதலாவது வெற்றியை பெற்றுக் கொண்டது டெல்லிடேயர் டெவில்ஸ் அணி.

டெல்லியில் நேற்று இடம் பெற்ற 28 ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸை எதிர்த்து டெல்லி அணி விளையாடியது.

நணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக பொண்டிங்குக்குப் பதிலாக சச்சின் டெண்டுல்கருடன் ஸ்மித் களமிறங்கினார். டெல்லியின் பந்து வீச்சுக்கு ஆரம்பத்தில் தடுமாறிய மும்பை அணி நான்காவது பந்துப் பரிமாற்றத்தில் 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஸ்மித்தின் (8) இலக்கை இழந்தது.

தொடர்ந்து வந்த தினேஸ் கார்த்திக்கும் இரு ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்கச் செய்யப்பட 22 ஓட்டங்களுக்கு இரு இலக்குகளை இழந்து தடுமாறியது.

மறுமுனையில் நிதானமாக ஆடிய சச்சினுடன் இணைந்தார் ரோகித்சர்மா.

இருவரும் இணைந்து அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்தனர். சச்சின் (54), ரோகித்சர்மா (73) ஓட்டங்களை விளாசி ஆட்டமிழந்தனர். இறுதியில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து மும்பை அணி 161 என்ற பலமான இலக்கை எட்டியது.

இதுவரை சந்தித்த சகல போட்டிகளிலும் தோல்வியைச் சந்தித்த டெல்லி அணி 162 என்ற கடினமான இலக்கை விரட்டத் தொடங்கியது.

அணிசார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான மஹேல ஜெய வர்த்தனவும், சேவாக்கும் களமிறங்கினர். இரு சிக்ஸர்கள், 13 பவுண்டரிகளுடன் 57 பந்துகளில் 95 ஓட்டங்களை விளாசினார் சேவாக். மறு முனையில் மஹேலவும் 43 பந்துகளில் 59 ஓட்டங்களை பெற வெற்றி வாய்ப்பு டெல்லியின் பக்கம் வீழ்ந்தது.

இறுதியாக 17 பந்துப் பரிமாற்றங்கள்முடிவில் ஒரு இலக்கை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது டெல்லி அணி. சேவாக் (95), வோர்ணர் (7) ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். 7 போட்டிகளைச் சந்தித்த டெல்லி அணி தனது முதலாவது வெற்றியை நேற்றுப் பதிவு செய்தது. (16)

## உடன் வேலைவாய்ப்பு

பத்திரிகை மடிப்பதற்கு ஆள்கள் தேவை

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
முன் அனுபவம் உள்ளவர்களுக்கும் யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
இன்று (22.04.2013) நாளை (23.04.2013) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நேரில் சமூகமளிக்கவும்.

மனிதவள முகாமையாளர்

உதயன் பப்ளிகேசன் பிறைவேட் லிமிடெற்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.





யாழ்.கே.கே.எஸ் வீதியில் மோட்டார் சைக்கிளும் தனியார் பஸ்ஸூம் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும் இரு பிள்ளைகளும் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். (4-14)




### விசேட கருத்தரங்கு

கிராம அலுவலர் தரம்III போட்டிப் பரீட்சை விழிகாட்டல் கருத்தரங்கு.
ஆரம்பம் April- 25, 26,27 9.00- 4.00p.m
விரிவுரையாளர்கள்
P.உமாசங்கர்
N.P.காலத்தாசன்
அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்.
நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி, யாழ்நகர்.
T.P.0774696695



## அதிரடியாக புதிய வரவுகள்

### பிரான்ஸ், சுவிஸ், நோர்வே

வெற்றிகரமாகச் செல்ல சட்ட ஆலோசனை

படிக்க, உழைக்க விசா ஆலோசனை
IELTS தேவையில்லை

முந்துபவர்களுக்கே முன்னுரிமை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 56 89090





### Group Classes
### வங்கியியல் கற்கைநெறி

CBF,DBF இற்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில் (எமது வழமையான ஆசிரியர் குழாம்)
ஆரம்பம் : 27-04-2013
தொடர்பு: K.ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை அருகில் 0774598430 (36258) (6)



### Wanted

புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள பார்மசி ஒன்றுக்கு (ஓய்வுபெற்ற/ வெளிவாரி) Pharmacist தேவை.
Contact No
0776656618 (36229) (6)



### விற்பனைக்குண்டு

G.S. இலக்கமுள்ள டொல்பின் வான் விற்பனைக்குண்டு.
- Dual A/C
- Full Option
- சென்றல் லொக், பூவர் செற், T.V
- 3 L இஞ்சின், LX113 நீளம்

தொடர்பு: 0772616970 (26282) (10,6)



## மணல் மண் வேண்டுமா?

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

4½ டிரக்டர் 20,500/-

தொடர்பு:- ராம்
072 63 78 546 (36276) (10,6)





# கோலாகலத் திறப்புவிழா

21ஆம் நூற்றாண்டில் விவசாயத்துறையின் புதிய உதயம்

## ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் சென்ரர்

ஒரே கூரையின்கீழ்
புதிய பொலிவுடன் புதிய சேவை

விதை நடுகைப் பொருள்கள், பயிர் பாதுகாப்பு விரிவாக்க சேவைகள்,
விவசாய இயந்திர உபகரணங்கள், கால்நடை சுகாதாரப் பொருள்கள்,
உர வகைகள், பழ மரக்கன்றுகள், பூ மரக்கன்றுகள்,
கட்டடங்களுக்கான பீடைக் கட்டுப்பாடு, வீட்டுச் சுகாதார பராமரிப்பு உற்பத்திகள்.

இடம்
ஹேலீஸ்
அக்ரிகல்ச்சர் சென்ரர்,
இல. 87, பலாலி வீதி, கோண்டாவில்.

காலம்
22ஆம் திகதி சித்திரை 2013

சுபநேரம்
திங்கட்கிழமை
காலை 09.45 மணி.

Hayleys
AGRICULTURE
வளமான வாழ்வுக்கு வலுவான துணை
ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.